# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 02 அதிர்வு 16 ஒக்ரோபர் 2018

ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162


Christmas IS COMING
Christmas SHIPPING SCHEDULE

| CUT OFF | SL ARRIVAL |
|---|---|
| OCT 06 | NOV 14 |
| OCT 13 | NOV 19 |
| OCT 20 | NOV 28 |
| OCT 27 | DEC 03 |
| NOV 10 | DEC 17 |
| NOV 17 | DEC 26 |

Only Available at Transco Offices
Transco CARGO
ASK US HOW TO GET A FREE BOTTLE OF WINE
CAMPBELLFIELD (03) 9357 7228
DANDENONG (03) 9703 2255
HOPPERS CROSSING (03) 97905588
1300 187 267 | TranscoCargo.com.au





# ஆஸ்திரேலிய அழகிப் போட்டி கிரீடம் வென்ற கிளிநொச்சிப் பெண்

Photo: Studio Charles


Waverley Toyota - You'll LOVE us!
TOYOTA

Pre Owned & New Vehicles

Buy with Confidence
Proud to be Melbourne's longest serving automotive group

Finance Available!
- Self Employed & ABN Holders
- Student Visa's
- Overseas Licence
- Low Deposit
- New Employment
- New Arrivals

SPRINGVALE ROAD
WAVERLEY ROAD
NEW & USED
DL11333

All enquires contact Jason Wijeratne on (03) 8544 2288 or 0422 974 499
We speak your language

Oh what a feeling!

SATISFACTION 100% GUARANTEED

Logesh Pty Ltd

Home Improvement & Cleaning

0449 722 392

Email - Loges.pty.ltd@gmail.com

- Landscaping
- Decking
- Rubbish Removal
- House Cleaning
- Garden Maintenance
- Painting
- House Renovation
- Kitchen Cabinet
- Builders Cleaning
- Timber Flooring
- Carpet Cleaning



Get Your Free Quote Now !

SRI MURUGAN®
SINCE 1969

ஸ்ரீ முருகன் டிரேடிங்
SRI MURUGAN TRADING
(Largest Indian Grocer Chain)

9 Murnong Street Point Cook Town Centre
Whatsapp: 0449 777 227 Tel: 03 7379 7777
Email: ops@srimurugantrading.com.au

OPENING SOON

17/700 Frankston Dandenong Road
(Opp. to Shri Shiva Vishnu Temple)
Carrum Downs, VIC 3201

Shop 108 A, Casey Central Shopping Centre
400 Narre Warren - Cranbourne Rd
Narre Warren South VIC 3805

Stay tuned and follow our FaceBook
page for Opening date

facebook.com/SriMuruganAustralia



# வென்றாய்... வாழி காவேரி!




ஆஸ்திரேலியாவின் அனைத்து மாநிலங்களிலும் உள்ள சிறிலங்காவைச் சேர்ந்த பெண்களுக்கு மத்தியில் இடம்பெற்ற அழகுராணிப்போட்டி கடந்த 16 ஆம் திகதி மெல்பேர்னில் நடைபெற்றது. இந்தப்போட்டியில் மெல்பேர்னைச் சேர்ந்த காவேரி ஜெயக்குமார் என்ற தமிழிச்சி கிரீடத்தை வெற்றிபெற்றுள்ளார். கடந்த ஐந்து வருடங்களாக நடைபெற்றுவரும் இந்தப்போட்டியில் ஒரு தமிழ்ச்சி முதலிடத்தைப் பெறுவது இதுவே முதல்தடவையாகும்.

கிளிநொச்சியில் பிறந்த காவேரி தனது தாய் மற்றும் இரண்டு சகோதரிகளுடன் 2012 ஆம் ஆண்டு படகு மூலம் ஆஸ்திரேலியா வந்தவர். தற்போது Deakin பல்கலைக்கழகத்தில் Biomedicine படித்துவருகிறார்.

சுமார் 36 போட்டியாளர்களின் மத்தியில் போட்டியிட்டு கிரீடத்தை வென்ற தனது வெற்றி குறித்து மகிழ்ச்சி தெரிவித்த காவேரி, போரின் கோரம் தந்த வலிதான் எனது வாழ்க்கையில் உக்கிரமான நம்பிக்கையை விதைத்தது என்றும் அதனை எனது அம்மாவிடமிருந்து கற்றுக்கொண்டேன் என்றும் கூறுகிறார்.

இந்தப்போட்டியில் கலந்துகொள்ளும்போதுகூட அந்த நம்பிக்கையே தனக்கு பெரும் பலமாக அமைந்தது என்றும் மூன்று கட்டங்களாக நடைபெற்ற இந்தப்போட்டியின் இறுதியில் தன்னிடம் குடும்ப வன்முறைகள் தொடர்பாக நடுவர்கள் கேள்வி கேட்டதாகவும் அதற்கு தான் வழங்கிய வெளிப்படையான பதில் அவர்களுக்குப் பிடித்துப்போனது என்றும் சொன்னார்.

காவேரிக்கு எதிரொலியின் வாழ்த்துக்கள்!








# Miss Sri Lanka Australia 2018

## Kavery Jeyakumar

On the 16th September 2018, Savish hosted their 5th annual Beauty Pageant, Miss Sri Lanka Australia 2018 in conjunction with Miss South Asia Australia 2018. The contestants from all states of Australia and representing all South Asian countries, ie Afghanistan, Bangladesh, India, Nepal , Pakistan and Sri Lanka gathered at the Vibe Savoy Hotel in the CBD in the hope of winning the two major crowns in the two Pageants.

The guests who attended the Night also included many VIP invitees including Hon Julian Hill, Federal MP, Hon Inga Pelluch - Shadow Minister for Multicultural Affaires, Liz Beattie former MP, Mr Prasanna Gamage the Consul General for Sri Lanka in Victoria, and Marianne Lau from ECCV, many ministerial advisers and community leaders from South Asian Countries.

The focus of the Miss , ( incorporating Mrs, Mr and Teen Mr& Miss) Sri Lanka Australia pageant was to bring the young Sir Lankans together with contestants representing Tamil, Sinhalese , half-Tamil , Muslim and Burgher communities.

Most of the older participants were well educated main stream professionals such as accountants, doctors and lawyers and all showed their amazing talent on the runway and in the Question Round.

With such talent shown on the night, Miss Kavery Jeyakumar won the Miss Sri Lanka Australia title, for the first time representing the Tamil community and was announced as the SirLankan Community Ambassador for 2018/19. Kavery Jeyakumar is a current Bachelor or Biomedical student and hopes to become a doctor in the future. Kavery and her two sisters with their mother fled Sri Lanka after the war In 2009 and after many struggles arrived to Australia in 2012 December.

This is a pageant with a difference where all the contestants are given post pageant opportunities to participate in community, cultural and Social events in the next 12 months. The pageant was held with all the glitz and glamour and at the same time in conformity with the South Asian values.


Money Transfer Agent
Indian & Sri Lankan Spices, Groceries & Convenience
SPICE
MINI MART
All kind of Spices, Fresh Vegetables, Sweets & Snacks
Trading Hours:
9 am to 10 pm
6 Aurelia Street
Toongabbie NSW 2146
(Next to Commonwealth Bank)
Phone : 02 9688 4447
Fax : 02 9636 3920
The fastest money transfer service to many countries
Best rates to India & Srilanka
10 mins
WESTERN UNION WU
moving money for better
MoneyGram.
money transfer
We also do Business to Business money transfer
PFG SMART CREDIT
Global Money Transfers
Ria

எதிரொலி
மெல்பேர்ண் ETHIROLI
குரல் 02 ஒலி 16 ஒக்ரோபர் 2018 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162

## இடர் குரலை உடன் எழுப்புக!

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக உலகெங்கிலும் – முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு – விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

Mee Too பிரசாரம் என்றும் இன்னும் எத்தனையோ வழிகளிலும் பெண்களே இந்த விடயத்தை – மிகப்பெரிய வகையில் – சர்வதேச அளவில் – முன்னெடுத்துச் செல்வதும் – அதன் பொருட்டு அவர்களது பாதுகாப்புக்கும் கோரிக்கைக்கும் ஆதரவு கிடைத்திருப்பதும் எழுச்சி மிக்கவெற்றி எனலாம்.

சாதி, மத, நிற அடிப்படைகளில் சக மனிதனை அடக்கிய கொடூரத்துக்கு அப்பால் பெண் என்ற ஒற்றைக் காரணத்துக்காகவும் மூன்றாம் பாலினத்தவர்கள் என்ற காரணத்தினாலும்கூட அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படுவதற்கு எதிரான உலகின் கவனம் வரவேற்கப்படவேண்டியது.

நாகரிக வளர்ச்சியின் அடுத்தடுத்த கட்டங்களுக்கு தங்களை நகர்த்தி விட்டதாகவும் விஞ்ஞானத்தின் அரிய தளங்களையெல்லாம் வெற்றிகொண்டுவிட்டதாகவும் பூரிப்படையும் மனித குலம் இன்னமும் சக மனிதனை – அவனது பாலினத்தின் அடிப்படையில் அடக்கி ஒடுக்கவதும் – உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பாதிப்புக்கு உள்ளாக்குவதும் காட்டுமிராண்டித்தனமானது.

இன்றைய நிலையில் பெண்கள் தமக்கு எதிரான குடும்ப வன்முறை மற்றும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் ஆகியவை குறித்து அதிகம் பேசுகிறார்கள். விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என்று சமூக வலைத்தள பிரசாரங்களில் ஈடுபடுகிறார்கள். இப்படியான சம்பவங்களினால் பாதிகப்பட்டவர்கள் காலம் கடந்தும் கூட தமக்கு நீதி வேண்டி போராடுகிறார்கள். நஷ்டஈடு கோருகிறார்கள். இந்தக்குரல்கள் நிச்சயம் கேட்கப்படவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி காலம் கடந்தாவது வழங்கப்படவேண்டும். இவர்கள்தொடர்ந்து உழலும் துயரத்துக்கு காரணமானவர்கள் காலம் கடந்தாவது தண்டிக்கப்படவேண்டும்.

ஆனால், இன்றைய காலப்பகுதியில் இது விவகாரத்தில் கவனம் செலுத்தப்படவேண்டிய மிகமுக்கியமான விடயமொன்றுள்ளது.

பெண்களுக்கு எதிரான எந்த வன்முறைகள் எந்த வடிவத்தில் இடம்பெற்றபோதும் அவை காலம் தாழ்த்தியே முறைப்பாடு செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இதுதொடர்பான வழக்குகள் – தரவுகள் என்று எதை எடுத்துப்பார்த்தாலும் இதுதான் வரலாறாக இருந்து வந்துள்ளது. கடந்தகால சமூக கட்டமைப்பும் பெண்களின்குரலுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவமும் குறிப்பாக அவர்களுக்கு எதிரான ஆணாதிக்க அடக்குமுறைகளும்அப்படியானதொரு ஜனநாயகமற்றசூழ்நிலையைத்தான் ஏற்படுத்தி வைத்திருந்தன. பெண் குரல் எப்போதும் ஒப்பாரியாகவும் சிணுங்கலாகவும் இருந்துகொண்டால்போதும் என்ற குரூர மனநிலைதான் சமூகத்திலும் கூட பரந்து இருந்திருக்கிறது.

ஆனால், இன்று அப்படியல்ல. அந்த நிலை மிகப் பெரியளவில் – கிட்டத்தட்ட தலைகீழாகவே மாறியிருக்கிறது என்று கூறலாம். பெண்களுக்கானதும் அவர்களின் குரல்களுக்கானதுமான ஜனநாயக வெளி அவர்களாலேயே உருவாக்கப்பட்டிருக்கிறது. அது சிலவேளைகளில் ஆண்களின் குரலைவிடவும்கூட அதிகரித்த ஒலியைக் கொண்டிருக்கிறது.

ஆகவே, இனியும் காலம் தாழ்த்திய கண்ணீர் தேவையில்லை. தமக்கு எதிரான வன்முறைகளுக்கு தவணை முறையில் நீதியை நாடவேண்டிய அவசியமில்லை. இன்னும் சொல்லப்போனால், இப்படியான சம்பவங்களை – அல்லது சம்பவங்கள் எனக்கூறப்படுகின்றவற்றை – சேமித்து வைத்திருந்து ஆண்களுக்கு எதிரான மூலோபாய ஆயுதமாகப் பயன்படுத்தவேண்டியதுமில்லை. அவ்வப்போது உடனுக்குடன் முறைப்பாடுகளை செய்து நீதிக்கான குரலை எழுப்பவேண்டும். அவர்களுக்கான ஆதரவை இந்தச் சமூகம் கொடுக்கவேண்டியது அதன் கடமையாகும்.

# சிட்னி கைதும் விடுதலையும் ஆஸ்திரேலிய சமூகங்களுக்கு சொல்லும் செய்தி என்ன?

மிகக் கடுமையான சட்டங்களினால் நிறைந்து போயுள்ள நாடுகளில்ஆஸ்திரேலியாவும்ஒன்றுஎன்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. அந்தப்பாதுகாப்பு ஏற்பாடுகளின் மூலம் நாட்டின் எல்லா பாகங்களுக்குள்ளேயும்விரலை விட்டு ஆட்டிவரும் பீற்றர் டட்டன் எனப்படும் இறுக்கமான அமைச்சர், தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆஸ்திரேலியாவின் உள்துறை அமைச்சின் மூலம் நாட்டின் சட்ட திட்டங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்தி வருகிறார் என்பது ஆஸ்திரேலியர்கள் மாத்திரமல்ல. வெளிநாட்டவர்களுக்கும் தெரிந்த விடயம்.

ஆஸ்திரேலிய வரலாற்றிலேயே இவ்வளவு இறுக்கமான ஓர் இரும்பு மனிதனைக் காணவில்லை என்று அரசியல் தரப்பினரே குய்யோ முய்யோ என்று குழறும் வகையில் பாதுகாப்பு விவகாரங்களில் எந்த சமரசங்களும் இல்லாமல் தனது திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருபவர் பீற்றர் டட்டன்.

உள்நாட்டிலுள்ள சந்து பொந்துகள் அனைத்திலும்கூட கையைவிட்டு குற்றவாளிகளையும் தோண்டியெடுத்து கூண்டுக்குள் போட்டு அடைத்துவிடும் டட்டனின் அமைச்சு, விமான நிலையங்களில்வேறு மூர்க்கமான கெடுபிடிகளை கொண்டுவரப்போவதாக அறிவித்திருக்கிறது. அதுபரவாயில்லைஎன்றால் வழி தவறி ஆஸ்திரேலிய கடலுக்குள் வந்த மீனவர்களைக்கூட பிடித்து சிறையில் போடப்போவதாக எச்சரிக்குமளவுக்கு அப்படியொரு அகம்பாவம். அதிகாரம். அகோரம்.

இப்படிப்பட்ட சூடுபறக்கும் அமைச்சின் கீழ் இயங்கும் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி சிட்னியில் மேற்கொண்ட கைதினால் சிறிலங்காவை சேர்ந்தவர்கள் அனைவருக்கும் தூக்கிவாரிப்போட்டது.

அதாவது, சிறிலங்காவைச் சேர்ந்த மாணவரான முகமட் நிஸாப்தீன் ஆஸ்திரேலியாவின் முக்கிய இடங்களைக் குண்டு வைத்து தகர்ப்பதற்கு திட்டமிட்டார் என்றும் அந்த திட்டங்களை எழுதிவைத்த நோட் புத்தகம் ஒன்றினை அவரது பல்கலைக் கழகத்தை சேர்ந்தவர் ஒருவர் தங்களிடம் எடுத்துக்கொடுத்துள்ளதாகவும் ஆஸ்திரேலிய பயங்கரவாத தடுப்பு பிரிவிரினர் அறிவித்தார்கள்.

தடலாடியாகவீட்டுக்குள்புகுந்து அவரைக் கைது செய்த பொலீஸார், அடுத்தடுத்த நாட்களில மேலும் பல அதிர்ச்சி தரக்கூடிய விவரங்களை வெளியிட்டார்கள். அதாவது, கைதுசெய்யப்பட்ட நிஸாப்தீன் ஆஸ்திரேலியாவின்பிரதமர்மற்றும் முக்கிய அரசியல் புள்ளிகளைக் கொலைசெய்வதற்கு திட்டமிட்டார் என்று வேறு கூறினார்கள்.

சொல்லவா வேணும் எங்களது ஆங்கில ஊடகங்களுக்கு? இரவு பகல் பாராது கதறித்தள்ளினார்கள். ஆஸ்திரேலியாவை அழித்தொழிப்பதற்கு திட்டமிட்ட அந்த ஒரே ஓர் அரக்கனை பிடித்துக் கூண்டில் அடைத்தாயிற்று என்பது போலவும் இனிமேல் இந்த தேசத்துக்கு எந்தக் குறையும் வராது என்பது போலவும்இரண்டுகன்னங்களிலும்போட்டுக்கொண்டார்கள்.

கைது செய்யப்பட்ட மாணவன் தொடர்பாக அடுத்த நாளே விசேட செய்தியாளர் மாநாட்டினைக் கூட்டிய பாதுகாப்பு தரப்பினரும்கூட அதே பில்ட் அப்தான். முன்னுக்கிருந்த ஊடகவியலாளர்களின் முகங்களின் ஈ ஆடவில்லை. பேயறைந்தது போலிருந்தார்கள்.

ஆனால், நிஸாப்தீனின் நண்பர்கள் மற்றும் சிறிலங்காவின் புலம் பெயர்ந்த சமூகத்திலிருந்த அவரது

**பீற்றர் டட்டன் என்ற இரும்பு மனிதனின் அமைச்சின் கீழ் செயற்படும் கொடூரமான படையினர் கைது செய்திருக்கிறார்களே, இந்தக் கைது எந்த அடிப்படையும் இல்லாமல் இடம்பெற்றிருந்தாலும் கூட இவர்களுடனெல்லாம் போய் முட்டிக்கொள்ள முடியுமா என்றெல்லாம் நிஸாப்தீனின் நண்பர்கள் துளியும் அஞ்சவில்லை.**

நலன் விரும்பிகள் ஆகியோர் இது தொடர்பில் எல்லாம் எந்தக் கவலையும் அடையவில்லை.

'நிஸாப்தீன் என்ற இளைஞன் நிரபராதி. அவனுக்கு இடம்பெற்றிருப்பது அநீதி' - என்பதைத்திடமாக நம்பினார்கள். இந்தக்கைது நடவடிக்கையின் பின்னணியில் ஏதோ ஒரு தவறு இடம்பெற்றிருப்பதாக உறுதியாக நம்பினார்கள்.

பீற்றர் டட்டன் என்ற இரும்பு மனிதனின் அமைச்சின் கீழ் செயற்படும் கொடூரமான படையினர் கைது செய்திருக்கிறார்களே, இந்தக் கைது எந்த அடிப்படையும் இல்லாமல் இடம்பெற்றிருந்தாலும்கூட இவர்களுடனெல்லாம்போய்முட்டிக் கொள்ள முடியுமா என்றெல்லாம் நிஸாப்தீனின் நண்பர்கள் துளியும் அஞ்சவில்லை.

நீதியும் நியாயமும் தம்பக்கம் உண்டென்று நிஸாப்தீன் மீது இமாலய நம்பிக்கை கொண்டார்கள். இவர்களில் எத்தனை பேர் நிஸாப்தீனை நேரில் சந்தித்திருப்பார்கள் என்று கூட தெரியாது. ஆனால், நிஸாப்தீன் கைதாகி அடுத்த வாரமே அவருக்கு ஆதரவாக - அவரது விடுதலையை வலியுறுத்தி - மாபெரும் கையெழுத்து வேட்டையை ஆரம்பித்தார்கள்.

அதற்கடுத்து வாரமே, நிஸாப்தீனின் விடுதலையை வலியுறுத்தி சிறிலங்காவில் பதாகைகள் சகிதம் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

நினைத்துப்பாருங்கள்!

பயங்கரவாதக் குற்றத்துடன் தொடர்புடையவர் என்று அறிவிக்கப்பட்டது மாத்திரமல்லாமல் இந்த நாட்டின் முன்னாள் பிரதமரையே கொலை செய்யத்திட்டமிட்டவர்என்று அறிவிக்கபட்ட ஒருவரை விடுதலை செய்யக்கோரி - அவர் அப்படியானவர் இல்லை என்ற அசுர நம்பிக்கையோடு - ஆஸ்திரேலிய மக்கள் மத்தியில் நிஸாப்தீன் ஒரு சுற்றவாளி என்ற செய்தியைக் கொண்டு செல்வதற்கு கையெழுத்து வேட்டை நடத்துவது என்பது எவ்வளவு பெரிய முயற்சி?

இது, இவ்வாறு இடம்பெற்றிருக்க மறுமுனையில் சட்ட ரீதியாக நிஸாப்தீனை விடுதலை செய்ய வேண்டிய காரியங்களும் நடைபெற்றன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதானவருக்கான சட்ட ஆலோசனைகளை பாதுகாப்பு தரப்பினர் மட்டுப்படுத்தியிருந்தபோதும் - சட்டத்தரணிகளையே பார்ப்பதற்கு முதலில் மறுப்பு தெரிவிக்கப்பட்டதாக கூறப்பட்டபோதும் - நிஸாப்தீனின் சட்டத்தரணிகள் அவைஎல்லாவற்றையும்மீறி போராடினார்கள்.

தர்மத்தின் வழி செய்த ஓயாத போராட்டம் ஒரு மாதத்திலேயே கை மேல் பலன் கொடுத்தது. நிஸாப்தீன் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். மிகக்கொடூரமான குற்றங்களையெல்லாம் பட்டியலில் சேர்த்து நிஸாப்தீன் என்ற மாணவரை உலகம் முழுவதற்கும் கொடூரமான நபராக காண்பித்த ஆஸ்திரேலிய பாதுகாப்புத்தரப்பினரின் குற்றச்சாட்டிலிருந்து உடைத்து அவரை வெளியில் கொண்டுவந்தது பெருந்திரளான மக்களின் ஒற்றுமையும் அவர்களது சரியான சட்டப் பயணமும்.

நிஸாப்தீன் விடுதலை நடவடிக்கையும் அதற்கு பின்னணியில் சிறிலங்காவின் புலம்பெயர்ந்த மக்கள் மேற்கொண்ட நடவடிக்கையும் உண்மையில் இந்த நாட்டிலுள்ள அனைவருக்கும் பெரும் பாடமாகும்.

பாதுகாப்பு தரப்பினர் எது செய்தாலும் அதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்கும் என்று வாய் மூடிகளாக அதனை நம்பிக்கொண்டு இருக்கும் சமூகத்துக்கும் -

அவ்வாறுபாதுகாப்புதரப்பினர் மேற்கொள்கின்ற நடவடிக்கைகளின் அடிப்படையில்தங்களது முடிவுகளுக்கு மூலாம் பூசி நம்பிக்கொள்கின்ற மக்கள் கூட்டத்துக்கும் -

சிறிலங்காவின் புலம்பெயர்தரப்பினர் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை மிகப்பெரிய பாடம்.

■

# நாய்கள் எல்லா நேரமும் நன்றியுடையவை அல்ல!



வன்முறைகள் மிகுந்த இந்த உலகத்தில் கிட்டத்தட்ட எல்லா மனிதர்களும் மிருகங்களாக மாறிப் பல காலமாகிவிட்டிருந்தாலும்கூட எஞ்சியிருக்கும் கொஞ்சநெஞ்ச மனிதர்கள் எந்த மிருகத்தையும் முழுமையாக நம்பி வாழ்ந்துவிட முடியாது என்பதை அண்மையில் வெளிவந்திருக்கும் ஆஸ்திரேலியாவின் விக்டோரிய மாநில நாய்கடி ஆய்வுத்தகவல்கள் கவலையோடு வெளிப்படுத்தியிருக்கின்றன.

நாய் நன்றியுள்ள மிருகம்தான். ஆனால், அதனிடம் கடி வாங்கிய யாராவது ஒருவர் இந்த பொன்மொழியை வாழ்நாளில் உச்சரித்திருப்பாரா? நன்றாக யோசித்துப் பாருங்கள்? Tக்கு பரம்பொருள் விளக்கமளித்துள்ள நித்தியானந்தாகூட கேட்டிராத மிக முக்கியமான கேள்வி இது?

விக்டோரியாவில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள நாய்க்கடி தொடர்பான தரவுகள், நாய்களை வளர்ப்பவர்கள் அவற்றிடமிருந்து பொதுமக்களை காப்பாற்றிக்கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வேண்டிய அவசியத்தை அடிக்கோடிட்டுக்காட்டியிருக்கின்றன.

ஆஸ்திரேலியாவில் நாற்பது வீதமான வீடுகளில் நாய்கள் வளர்க்கப்படுவதாக அரசாங்கத்தின் நாயாய்வு தகவல்கள் கூறுகின்றன. ஆனால் நாடளாவிய ரீதியில் நாய்க்கடிக்குள்ளானவர்களின் தரவுகளை தூக்கிப்பார்த்ததில் இவ்வாறு கடிவாங்கியவர்களில் 84 வீதமானவர்கள் வளர்ப்பு நாயினால்தான் வாங்கிக்கட்டியிருக்கிறார்கள். அல்லது தமக்கு மிகவும் தெரிந்த - அதிகம் பழகிய நாயினால்தான் பிராண்டப்பட்டிருக்கிறார்கள். நாடு முழுவதும் மேற்கொண்ட இந்த முக்கியமான ஆய்வில், நாய்க்கடியினால் வருடமொன்றுக்கு சராசரியாக இரண்டு பேர் உயிரிழப்பதாகவும் 15 ஆயிரம் பேர் வைத்தியசாலைக்குப் போகுமளவுக்கு நிலைமை மோசமடைந்திருப்பதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்படியே போய்க்கொண்டிருந்தால் என்ன ஆவது? அணு ஆயுதத்துக்கும் அகதிகளுக்கும் நாங்கள் பயப்பட்டுக்கொண்டிருக்கிறோம்? எங்களுடைய வில்லன் வீட்டுக்குள்ளேயே இருக்கிறான் என்பதை நாங்கள் புரிந்துகொள்ளவேண்டாமா என்று ஆஸ்திரேலிய ஊடகங்கள் சில குரைத்திருப்பதைத் தொடர்ந்து நாய் வளர்ப்பு தொடர்பான இறுக்கமாக சட்டங்களை கொண்டுவரவேண்டும் என்ற கோரிக்கைகள் பலதரப்பிலிருந்தும் கிளம்பியிருக்கின்றன.

எனக்குத்தெரிந்து பலர், இங்கு ஊரைப் போலநாய்வளர்க்கும்ஆசையில்நாய்களை வாங்கி வந்து வீட்டில் வைத்திருந்து படாத பாடு பட்டிருக்கிறார்கள்.

தமிழர்கள் செறிந்துவாழும் பகுதியொன்றில் குடியிருக்கும் நண்பர் ஒருவர் தனது அயலவர் ஒருவரின் நாயினால் பெரும்பாடு பட்டு நீதிமன்றம்வரைக்கும் ஏறி வந்த கதை பெருங்கதை.

விடுமுறையில் போகும்போது நாயைப் பார்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டதற்கமைய நாயக்கு அடைக்கலம் கொடுத்த எனது நண்பர் இந்த நாட்டில் அரசியல் தஞ்சம்கோரி வந்திருந்தவர். தனக்கே அடைக்கலம் கொடுக்காத நாடாக இருந்தாலும் ஒரு நாய்க்கு அடைக்கலம் கொடுத்த வரலாறு இந்த கங்காரு தேசத்தில் பதியப்படவேண்டும் என்ற வைராக்கியத்தோடு தனது அயலவர் விடுமுறை போகும்போது சியார்ஸ் சொல்லி அனுப்பிவைத்தார். அதற்கு அவரது அழகான மனைவியும் ஒரு காரணம் என்பது வேறு கதை.

ஒரு நாள் இவர் சாப்பாடு வைக்கப் போனபோது வீட்டிலிருந்து வெளியேறிய நாய் கணநேரத்தில் தொலைந்து போனது. காடு, களனியெல்லாம் காரில் பறந்து திரிந்தும் நாயைக் காணவில்லை. கிடைக்காத சோகத்துடன் வீடு திரும்பினார். வீட்டுக்கு வந்திராதா என்று ஆச்சரியம் வழிய வந்தவருக்கு வீட்டில் அதிசயம் காத்திருந்தது. ஆம், இவருக்காக பொலீஸ் காத்துக் கொண்டிருந்தது.

நாயின் உரிமையாளர் விடுமுறையில் உள்ளார் என்றும் தான் நாயின் அயலவர் தான் என்றும் தனக்கு தெரிந்த சகல மொழிகளிலும் பொலீஸை சுற்றி வாலையாட்டி ஆட்டி விளக்கம் கொடுத்துப்பார்த்தார். திங்கட்கிழமை நீதிமன்றத்துக்கு வருமாறு துண்டு கொடுத்துவிட்டு என்று சொல்லி விட்டுப்போனது பொலீஸ்.

வெள்ளிக்கிழமை தொலைந்துபோன நாயிற்காக திங்கட்கிழமை நீதிமன்றம் போனார் எங்கள் அடைக்கல பகவான்.

வழக்கை விசாரித்த நீதிபதி இரண்டு நாட்கள் பொலீஸ் காவலில் வைத்து நாய்க்கு தீனி போட்டதுக்கு நூறு டொலர்கள் அபராதம் என்றார்.

வாயைப் பிளந்தார் நண்பர்.

அதேபோல, எந்தப்பொறுப்புமில்லாமல் நாயை அவிழ்த்துவிட்டதற்கு மேலும் ஐநூறு ரூபா அபராதம். மேலும் சொன்னார் நீதிபதி.

"இதென்ன கோதாரியப்பா, ஏதோ மும்தாஜின் ஜாக்கெட்டையா அவிழ்த்தேன், நாயைத்தானே அவிழ்த்துவிட்டேன். இதற்குப்போய்..." - என்று இழுக்க -

நாய்க்கொடுமையிலிருந்து நண்பவரைக் காப்பாற்றுவதற்காக நீதிமன்றம் போன சட்டத்தரணி பல்லை நெரும்பிக் கொண்டு வாயைப் பொத்தச்சொன்னார்.

முடிவில், அறுநூறு டொலர்கள் நீதிமன்றத்துக்கும் சட்டத்தரணிக்கு இருநூற்றைம்பது டொலர்களும் கொடுத்துவிட்டு மோவாயை தடவினார். பக்கத்து வீட்டுக்காரனின் மனுசியை வளைப்பதற்காக நாய்க்கு அடைக்கலம் கொடுத்து பல்லைக்காட்டியவருக்கு கடைசியில் ஊர்க்காசில் ஒரு இலட்சம் ரூபா செலவு.

இது மாத்திரமென்றால் பரவாயில்லை. ஊரிலிருந்து விடுமுறையில் வந்தவர்களிடம் விசயத்தை சொன்னபோது சியார்ஸ் காட்டிவிட்டுப்போன நாயின் எஜமானி -

என்று ஓடிப்போய் கட்டிப்பிடித்தாளாம். கடைசிக்கட்டை சிகரெட்டை இழுத்து புகையை வெளித்தள்ளிவிட்டு கவலையோடு சொன்னார் ஊருக்கே இலவசமாக இயங்கும் எங்களது வைபர் வைரவர்.

ஊரிலிருக்கும்போது பக்கத்து வீட்டு நாய் வீட்டுக்குள் வரும்போதெல்லாம் டிசைன் டிசைனாக கல்லை எடுத்து எறிந்து அது ஓடும் அழகைப் பார்த்து ரசித்த கோத்தபாய எல்லாம், வெளிநாடு வந்தவுடன் உயிரினங்கள் மீது பெரிய பெரிய அகப்பைகளால் பாசத்தை அள்ளி ஊத்தினால் இதுதான் பிரச்சினை.

**-பச்சைத்தண்ணி**

நம்பிக்கையில் வாடிக்கையாளர்களின் மனதில் இடம் பிடித்த -
10 வருடகால அனுபமுள்ள...

PERPETUA MONEY TRANSFER
WorldWide

We Guarantee the best rate for
SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE

- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

COMMERCIAL BANK · BOC · PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE · SEYLAN BANK PLC · HNB · සම්පත් බැංකුව சம்பத் வங்கி SampathBank · NSB National Savings Bank · cash Xpress easier - faster - safer

Send Money to any Bank in Sri Lanka

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com

கன்பரா மலர் கண்காட்சி




# அழகு மலர் ஆட...

# ஆஸ்திரேலியர்கள் கூட!

இஸ்ரேல் எனப்படுகின்ற நாட்டைப் போராட்ட குணத்துக்காக எவ்வளவுதான் வரலாற்று ரீதியாக எடுத்துக்கூறினாலும் அது சர்வதேச சதியினால் உருவான நாடு என்பதை யாரும் மறந்துவிடமுடியாது. மறுக்கவும் முடியாது. அரபு நாடுகளுக்கு எதிராக மேற்குலகம் தனது கைப்பாவையாக பயன்படுத்துவதற்கான தேவைப்பாட்டுடன் இஸ்ரேல் என்ற தனிநாடு உருவாக்கப்பட்டது. இஸ்ரேலின் உருவாக்கத்துக்கு இதுதான் முடிவான காரணமாக அமைந்தது. அதற்கு அடியில்தான் அந்த நாட்டு மக்களின் தொடர்ச்சியான போராட்டம், அதற்காக அவர்கள் கொடுத்த விலைகள் எல்லாமும் ஆகும்.



உலக அரங்கில் இவ்வாறு வெளிப்புறமாக நடைபெறும் போட்டிகளில் பல தேசங்கள் நன்மையடைந்திருக்கின்றன.

ஆஸ்திரேலியாவிலும் அவ்வாறான ஒரு போட்டியால் நன்மையடைந்த தேசம் ஒன்றுண்டு. அதுதான் கன்பரா. அதற்காக இங்கு புரட்சியெல்லாம் நடைபெறவில்லை. பாசக்காரர்களுக்கு இடையில் நடைபெற்ற போட்டி என்று சொல்லலாம்.

ஆம்! உள்நாட்டில் இரண்டு மாநிலங்கள் தங்களுக்குள் நடத்திய போட்டியினால் தலைநகராக உருவெடுத்து, அதன் மூலம் தனக்கொரு முகவரியைப்பெற்றுக் கொண்ட மாநிலம் கன்பரா.

பிரிட்டனின் ஆதிக்கத்தின் கீழ் ஆளப்பட்டுவந்த ஆஸ்திரேலியாவுக்கு தலைநகரொன்றை நிறுவலாம் என்று அப்போதைய பிரிட்டிஷ்காரர்கள் தங்களது ஆஸ்திரேலிய கைப்பாவை அரசோடு சேர்ந்து ஆலோசித்தபோது, அதற்கு தாங்கள்தான் உரித்துடையவர்கள் என்று மெல்பேர்னும் சிட்னியும் மோதிக்கொண்டன. இந்த இரண்டு தேசங்களுக்கும் இடையிலும் பஞ்சாயத்து பார்ப்பது அப்போதைய பிரிட்டிஷ்காரர்களுக்கு பெரிய பிரச்சினையாகிப்போய்விட்டது.

பிரித்தாளுவதுதான் அவர்களது பொழுதுபோக்காச்சே, உடனே அவர்கள் தலைநகர் போட்டி இருவருக்கும் வேண்டாம், மூன்றாவது இடமொன்றை தெரிவுசெய்யலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். அப்படியானால், அந்த மூன்றாவது இடம் எது என்ற கேள்வி அடுத்ததாக வந்தது.

இதற்காக, நியூ சவுத் வேல்ஸூற்கும் விக்டோரியாவுக்கும் இடையில் பல இடங்கள் பார்க்கப்பட்டன.

உலகப்பொது வழக்கத்தின்படி, ஒரு நாட்டின் தலைநகரானது கடலுக்கு அண்மையானதாகவோ பாரிய குடியேற்றங்கள் இடம்பெறும் பகுதியாகவோ இருக்கக் கூடாது. ஆகவே, அதன் அடிப்படையில்தான் தலைநகர் வேட்டையும் நடைபெற்றது.

இந்தக்காரணங்களின் அடிப்படையில் சிட்னியும் மெல்பேர்னும் தலைநகருக்கு ஒத்துவராதவையாகவே இருக்கும் என்று ஒத்துக்கொள்ளப்பட்டது.

ஆக, தற்போது கன்பரா அமைந்த இடத்தைஒருவாறு தேடிப்பிடித்து அதனை தலைநகராக அறிவிப்பது என்று முடிவெடுத்தனர். அடுத்தபடியாக இதற்கு என்ன பெயர் வைப்பது என்ற விவாதம் வந்தது.

"கன்பரா" என்று ஆஸ்திரேலிய பூர்வக்குடிகளின் மொழியிலமைந்த பெயரால் கன்பரா அழைக்கப்பட்டு வந்தாலும் நாட்டின் தலைநகர் என்ற காரணத்தினால் அந்தப்பெயரை உத்தியோகபூர்வமாக இணைத்துக்கொள்வதற்கு மக்களிடமும் பெயர்களை பரிந்துரைக்குமாறு கேட்கப்பட்டது.

'Austral city', Eucalypta,' 'Kangaremu', 'Eros', 'Thirstyville', 'Cookaburra', 'Sydmeladperbriho' என்று பல பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன. ஆனாலும் 'Myola', 'Shakespeare' என்ற பெயர்களோடு கடைசியில் கடும் போட்டி போட்டு 12 வாக்குகளால் "கன்பரா" என்ற பெயர் வெற்றிபெற்றது.

1913 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி பகிரங்க அறிவிப்பின் மூலம் அரசு இந்தப்பெயரை எடுத்துக்கொண்டது.

கன்பரா என்ற இடம் பாராளுமன்றத்தோடு சேர்ந்து தூதரக மற்றும் அரச கட்டடங்களின் காடு என்று கூறலாம். ஆகவே, அங்கு பணிபுரிகின்றவர்கள் மாத்திரம்தான் கன்பராவில் குடியேறியுள்ளவர்களாகவும் உள்ளார்கள். இங்கு மிகப்பெரிய களியாட்ட நிகழ்வுகள் மற்றும் மெல்பேர்ண் - சிட்னி ஆகிய இடங்களில் நடைபெறுவதைப்போன்ற நிகழ்வுகள் அடிக்கடி இடம்பெறுவது குறைவு.

இருப்பினும் சில முக்கிய தினங்களை - முக்கிய நிகழ்வுகளை கன்பராவும் தனக்கென்ற முத்திரைத்திருவிழாக்களாக அவ்வப்போது கொண்டாடுவது வழக்கம்.

அந்த வகையில், கன்பரா என்ற தேசம் உருவாகி 75 ஆவது வருடத்தில் 1988 ஆம் ஆண்டு முதல் கன்பராவில் பூக்களின் திருவிழா நடைபெற்றுவருகிறது. கன்பராவின் காலநிலை பூக்களை பெருந்தொகையாக வளர்ப்பதற்கெல்லாம் இடமளிப்பதில்லை என்றாலும் இந்தத் திருவிழாவுக்கென பெருமெடுப்பில் பூக்கன்றுகள் நடப்பட்டு திருவிழாக்காலத்தின்போது பூத்துக்குலுங்குவதற்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்காக பெருந்தொகையான தோட்டக்காரர்கள் அரச செலவில் பல மாதங்களாகப் பணிபுரிந்து இந்தத் திருவிழாவை சிறப்பிக்கிறார்கள்.

ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் மாத நடுப்பகுதி முதல் ஒக்ரோபர் மாத நடுப்பகுதி வரை ஒரு மாதத்துக்கு நடைபெறும் இந்த பூக்களின் திருவிழா கன்பரா மக்களுக்கு மாத்திரமல்லாமல் வெளிமாநில மக்களுக்கும் அருங்காட்சியாக அமைகிறது.

அரச நிதியொதுக்கீட்டின் கீழ் நடைபெறுகின்ற நிகழ்வாதலால் இந்தத் திருவிழாவின் விமர்சைக்கு குறைச்சல் இல்லை. பல்லாயிரக்கணக்காக பூக்கள், உணவகங்கள், குழந்தைகளுக்கான விளையாட்டிடங்கள், கலாசார நடனங்கள், இரவு நேர இசை நிகழ்ச்சிகள் என்று இந்தத் திருவிழா வளாகத்தில் ஒரு மாதகாலமாக ஒரே கொண்டாட்டமாக இருக்கும். ஒவ்வொரு வருடமும் சுமார் நான்கு முதல் ஐந்து இலட்சம் மக்கள் இந்த கண்காட்சியைப்பார்ப்பதற்காக நாடெங்கிலுமிருந்து வருகை தருகிறார்கள் என்று இதனை ஒழுங்கு செய்பவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்தப் பூக்களின் கண்காட்சியில் ஈடுபாடு இல்லாதவர்கள்கூட அங்கு வந்து நின்று படமெடுத்து சமூக வலைத்தளங்களில் தங்களை விமர்சையாகப் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காக வந்து குழுமுவதை அண்மையில் அங்கு சென்ற போது காணக்கூடியதாக இருந்தது.



Cancer Council

**நீங்கள் 50-74 வயதிற்கு இடைப்பட்டவராயின் இப் பரிசோதனை உபகரணத்தை தபால் மூலம் பெற்றவுடன் பரிசோதனையை மேற்கொள்ளவும்.**

கூடுதலான குடல் புற்றுநோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால், அவற்றை இலகுவில் குணப்படுத்தலாம். இந்த இலவசமான வீட்டிலேயே செய்யக்கூடிய பரிசோதனை **உங்களது உயிரை காப்பாற்றக்கூடும்.**

மேலதிக தகவலுக்கு உங்களது மருத்துவருடன் பேசவும். அல்லது, **13 14 50** என்ற எண்ணை அழைத்து உங்களது மொழி என்ன என்பதையும் கூறி, Cancer Council Victoria-வுடன் பேசவேண்டுமென கேளுங்கள்.




SAHA SIDDHA

HERBAL TREAMENT AND YOGA THERAPY

**TREATMENTS FOR ALL AILMENTS ARE DONE THROUGH TRIO THERAPHY**
**(Herbal Treatment, Yoga & Diet plan)**

**A healthcare professional with a long track record of successfully diagnosing and treating patients using accurate Siddha (HERBAL) medicines along with therapeutic yoga techniques. A Gold Medallist in Doctor of Siddha Medicine**



- Abnormal Menstruation
- Arthritis
- Back and neck pain
- Diabetes Mellitus
- Eczema
- Epilepsy
- IBS
- Hemiplegia
- High Cholesterol
- Hypertension
- Impotence & Infertility

**DR SELVI MANI B.S.M.S, MD, Y.T.O.T**
**SIDDHA (HERBAL), YOGA PHYSICIAN**
**0412618953**
**74 CARLTON ROAD**
**DANDENONG NORTH, VICTORIA - 3175**
www.siddhaherbsaustralia.com.au

- Urinary Tract Infection
- Jaundice
- Mental disease & disorder
- Loss of Memory
- Obesity
- Peptic ulcer
- Prostate Problem
- Sleep Disorder
- Thyroid Problems
- Tonsillitis
- Wart etc...



# சீ...தனம் ஆஸ்திரேலியாவில்!

● கவல்கணன்

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்கிறது நன்னூல். ஆனால், புலம் பெயர்ந்தாலும் சிலர் தமது அழுக்கேறிய விழுமியங்களை மறப்பதற்கோ அல்லது அதிலிருந்து தம்மை மாற்றிக்கொள் வதற்கோ மறுக்கிறார்கள். பழமைவாதிகள் என்று அவர் களைப் புறந்தள்ளிவிட சமூகமும் தயாராகவில்லை. அப் படியான சிந்தனை கொண்டவர்களின் சில செயல்கள் ஆஸ்திரேலிய அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

அவ்வாறு கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள ஒரு விடயம்தான் சீதனம்!

குடும்பங்களுக்குள் புற்றுப்போல வளர்ந்து பெருங் கொடுமைகளுக்கெல்லாம் கால்கோலாகக் காணப்படுகின்ற சீதனம், மூன்றாம் உலக நாடுகளில் மாத்திரமல்லாமல் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து வந்திருப்பது ஆரோக்கியமான சமூக வளர்ச்சிக்கு போடப்பட்டிருக்கும் பெரும் சாபம்.

வளர்ச்சியடைந்துவரும் தமது மாற்றங்களுக்கு முரணான எத்தனையோ சமூக விழுமியங்களை தூக்கிக் கடாசி விட்டிருக்கும் எமது சமூகம் இந்த சீதனத்தை மாத்திரம் பெருமைக்குரிய சொத்தாகப் பேணிக்காப்பதும் அதற்காக கள்ளமௌனம் காத்துக்கொண்டு வாக்காலத்து வாங்குவ தும் பேரவலம்.

ஆஸ்திரேலியாவில் சீதனம் வாங்குவது கொடுப்பது சகலதையும் நிறுத்த வேண்டும் என்ற குரல்கள் அண்மைக் காலமாக ஓங்கி ஒலிக்கத்தொடங்கியிருந்தன. இது குறித்து கடுமையான சட்டம் அவசியம் என்றும் அவர்கள் வலியு றுத்தத்தொடங்கியிருக்கிறார்கள்.

முக்கியமாக, சீக்கிய சமூகத்தில் இந்த சீதனத்தின் வழி யாக மணமாகிவந்த பெண்கள் மீது நடத்தப்பட்ட பல வன்முறைச்சம்பவங்களும் அவை கொலைகள்வரை நீண்டு சென்ற செய்திகளும் ஆஸ்திரேலிய அரசு இதுவிடயத் தில் தீர்க்கமானதொரு முடிவை எடுப்பதற்கு நிர்ப்பந்திக் கப்பட்டது.

ஆகவே, ஆஸ்திரேலியாவில்சீதனக்கொடுக்கல்வாங்கல் களின் தாக்கம் குறித்து செனட் குழு விசாரணை நடக்கப் போகிறது என்று கடந்த ஜூன் மாதம் அறிவிக்கப்பட்டு, அந்த செனட் குழு, பொதுமக்களின் கருத்துகளைக் கேட்க விரும்புவதாகவும் கருத்துச் சொல்ல விரும்புபவர்கள் அவற்றை அனுப்பி வைக்குமாறும் ஆஸ்திரேலிய ஊடகங்களில் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து, பலர் தமது தனிப்பட்ட அனுப வங்களையும், சீதனக் கொடுமைகளால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு உதவி வழங்கி வரும் சில அமைப்புகள் தமது கவனத்துக்கு வந்தவர்களது கதைகளையும் அந்தக் குழு வுக்கு அனுப்பி வைத்தார்கள்.

சீதனம் என்பது புலம்பெயர்ந்த நாடுகளைப் பொறுத்த வரை தனியே பணத்தோடு முடிந்துபோவதாக மாத்திரம் நின்றுவிடாது பல்வேறுவடிவங்களில் அவை பெற்றுக்கொள் ளப்படுகிறது என்பதை இந்தச் செனட் குழு புரிந்து கொண்டது.

ஆஸ்திரேலியாவில் சீதனத்தடையை கொண்டுவந்தா லும் ஆஸ்திரேலியாவில் சுத்தமான சூசைப்பிள்ளைகள் போல திருமணம் செய்துகொள்ளும் பல ஆண்கள், தாய கத்துக்குச் சென்று அங்கு பெற்றோரின் விருப்பத்துக்கு அமைய ஊர் மக்களுக்கு முன்னால் இன்னொரு திருமணம் செய் வதாகக்கூறி அதில் வைத்து சீதனத்தை பெற்றுக்கொள்ளும் சாதுரியமான வழிமுறைகளும் சீதனத்தில் பின்பற்றப்படும் வரை இந்த செனட் குழு கேட்டு அதிர்ச்சியடைந்தது.

எப்படித்தான் பார்த்தாலும் இவ்வாறு சீதனம் வாங்கு பவர்களை கையும் களவுமாக கைது செய்வது என்பது மிகக்கடினமானது மாத்திரமல்லாமல் சட்டங்களை இயற்றும் போது அந்தச் சட்டத்தை எங்கே வைத்து பயன்படுத்துவது என்பதே குழப்பம்தான் என்றும் செனட் சபை கொஞ்சம் கொஞ்சமாக விளங்கியது.

மொத்ததில் "சீதனம்" ஏற்படுத்தும் தாக்கம் மிகவும் சிக்கலானது என்பதை இந்தச் செனட் குழு உணர்ந்து கொண்டது.

வெறுமனே மக்களின் வாக்குமூலங்களை மட்டும் பெற்றால் போதாது என்பதை உணர்ந்த செனட் குழு, சீத னத்துக்கு எதிராக சமூக மட்டத்தில் வழிப்புணர்வை ஏற்ப டுத்தும் செயற்பாட்டாளர்கள், சமூகத்தில் பெரியவர்கள் மற்றும் தம்மைப் பெரியவர் என்று காட்டிக் கொள்பவர் களிடம் இது குறித்துக் கலந்தாலோசித்து மேலும் பலரின் அனுபவங்கள், வாக்குமூலங்கள் ஆகியவற்றையும் தேட முனைந்தது.

இந்த விசாரணைக் குழுவைத் தலைமை தாங்கும் செனட்டர் Louise Pratt அவர்களும், NSW மாநிலத் தின் Greenway தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் Michelle Rowland அவர்களும் சமூக சேவையில் ஈடுபட்டுள்ள இந்தியப் பின்னணி கொண்டவர்களை செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி சந்தித்து இது குறித்துப் பேசினார்கள்.

அதன் முடிவில் பேசிய Michelle Rowland - சீதனம் என்றால் என்ன என்று வரையறுப்பதில் சிக்கல் இருக்கிறது என்றும் பல்வேறு பின்னணி கொண்டவர்கள் வாழும் ஆஸ்திரேலியாவில் அது ஒரு பிரச்சினையாகத் தொடர்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் அதனால் இந்த செனட் குழு விசாரணை முக்கியமானது என்றும் குறிப்பிட்டார்.

இந்த விசாரணைக் குழுவைத் தலைமை தாங்கும் செனட்டர் Louise Pratt பேசிய போது, இது வரை கருத்துகளைத் தெரிவித்தவர்களுக்கு நன்றி கூறியது மட்டு மல்லாமல், இந்த விசாரணைக்குழு தொடர்ந்தும் சில நாட் களுக்கு மக்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் என்றார்.

விக்டோரிய மாநிலத்திலுள்ள Bruce தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் Julian Hill அவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார். விக்டோ ரிய மாநிலத்தில் வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும் குற்றச் செயல் என்று விக்டோரிய மாநில நாடாளுமன்றம் சட்டம் உருவாக்கியிருப்பதை நினைவுபடுத்திய அவர், வாங்குவதற்கோ, விற்பதற்கோ பெண்கள் உடைமைகள் அல்ல என்பதை வலியுறுத்தினார்.

இந்த விசாரணைக் குழுவுக்கு மக்கள் கருத்துக்களை அனுப்பி வைக்க வேண்டிய காலக்கெடு முடிந்து விட்டது என்றாலும் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்தவராக, இப் பொழுதும் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை அனுப்பி வைக்கலாம் என்கிறார் இந்த விசாரணைக் குழுவைத் தலைமை தாங்கும் செனட்டர் Louise Pratt.

குடும்ப வன்முறையில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் மீண்டும் தன் தாய் நாட்டிற்குச் சென்று திருமணம் செய்து கொண்டு, புதிய மனைவியை ஆஸ்திரேலியாவிற்கு அழைத்துவர ஐந்து வருடங்கள்வரை காத்திருக்க வேண்டும் என்பது, முன்வைக்கப்படும் சில சட்ட மாற்றங்களில் ஒன்று.

சீதனக் கொடுமைகளால் பெண்கள் மட்டும் பாதிக்கப்படவில்லை, தவறாகக் குற்றம் சாட்டப்பட்ட ஆண்களும் இதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிலர் கூறினார்கள்.

சட்டமொன்று உருவாக்கப்படும்போது, தவறாகக் குற்றம் சுமத்தப்படுபவர்கள் பாதுகாக்கப்படுவது தொடர் பாகவும் கவனத்தில்கொள்ளப்படும் என்று Julian Hill கூறினார்.

சமூக சிந்தனையில் மாற்றம் இல்லாமல், சட்டத்தின் மூலம் மட்டும் வரதட்சணை அல்லது சீதனக் கொடுமை- களை நிறுத்திவிட முடியுமா என்று நாம் சிந்திக்கிறோம். ஆனால், சட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டால், அதனால் சமூகத்தில் மாற்றம் வரும் என்று அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் நம்புகிறார்கள்.

*1961* ஆம் ஆண்டு இந்தியாவில் சீதன ஒழிப்புச் சட் டம் கொண்டுவரப்பட்டது. சீதனம் வாங்குவது சட்ட விரோதம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்று வரை இந்தியாவில் சீதனக்கொடுமையால் பெண்கள் பலி யெடுக்கப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டுதானி ருக்கின்றன. கடந்த 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் சுமார் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் சீதனக்கொடுமையால் படுகொலை செய்யப் பட்டிருக்கிறார்கள் என்று இந்தியாவின் தேசிய குற்றத்தர வுகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீதனமுறைக்கு எதிராக கடும்நடவடிக்கையை மேற் கொண்டு ஆஸ்திரேலிய செனட் குழு தனது விசாரணை- களை நடத்துவதற்கு உங்கள் கருத்துகளையும் எதிர் பார்க்கிறது. அவற்றை தெரிவிக்க legcon.sen@aph.gov.au என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.

அவுஸ்திரேலியாவில் இருந்து உலகெங்கும் தமிழ்மணம் பரப்பும்

உங்கள் தமிழ் வானொலி

தாயகம்

தமிழ் ஒலிபரப்பு சேவை

வையகம் தழுவிய வான்வழித் தோழன்



எமது நிகழ்ச்சிகளை
- www.thayagam.net இணையத்தளத்தினூடாகவும்
- Mobile தொலைபேசியினூடாகவும்
- எமது பிரத்தியேக வானொலிகளினூடாகவும் கேட்கலாம்.

மேலதிக விபரங்கள், விளம்பரங்கள் மற்றும் தொடர்புகளுக்கு:
0432 710 238 | 02 8458 2393
www.thayagam.net /thayagam.tamil

Thayagam Tamil Broadcasting Service (TTBS)


Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
$149
புதுப்பித்தல்
$82
14 மாதங்கள்
SET TOP BOX
INCLUDED
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
NOW AVAILABLE ON LYCATV
SUN NXT + TENTKOTTA + EROS NOW
SALES
0470 030 300 | 0470 216 619
CUSTOMER SERVICE
02 8072 7002
www.lycatv.tv

# பெரியாரின் வாக்கரசியல்!





தமிழகத்திலிருந்து
டான் அசோக்

அண்ணா, கலைஞருக்கு இல்லாத ஒரு தனிச்சிறப்பு பெரியாருக்கு உண்டு என நான் அடிக்கடி ஒன்றைச்சொல்வதுண்டு. கலைஞருக்கு அண்ணா வழிகாட்டி. அண்ணாவுக்கு பெரியார் வழிகாட்டி. ஆனால் பெரியாருக்கு? அவரின் மூளையே வழிகாட்டி. அவரது சிந்தனையே வழிகாட்டி. உலகச் சிந்தனையாளர்களில் பெரியார் ஒரு சுயம்பு!

ஒருநொடி சிந்துத்துப்பாருங்கள். பெரியாரும், திராவிட இயக்கமும் இல்லாதிருந்தால் தமிழகம் என்ன ஆகியிருக்கும்? வட இந்தியர்களைப் போல சுயமரியாதையின்றி திரிந்திருப்போம். பார்ப்பனர்கள் நம்மை வேலை வாங்க பிறந்தவர்கள், ஆண்டைகள் நம்மை அடக்கியாளப் பிறந்தவர்கள் என்பதை மனதார நம்பி கூழைக்கும்பிடு போடும் கூட்டமாக இருந்திருப்போம். இன்னமும் சாதிப்பெயர் எனும் அசிங்கத்தை சுமந்து கொண்டிருந்திருப்போம். அதனாலேயே பதவி உயர்வில் இருந்து, தனியார் நிறுவனங்கள்வரை நேர்முகத் தேர்வுகளில் நம் பெயரின் பின்னால் இருக்கும் சாதிப்பெயரால் அநீதிகளுக்கு உள்ளாகியிருப்போம். இந்தி திணிக்கப்பட்டிருக்கும். வடமாநிலங்களைப் போல படித்த உயர்சாதிக் குடும்பமே படித்துக்கொண்டிருந்திருக்குமேதவிர, முதல் தலைமுறை பட்டதாரிகள் உருவாகியிருக்க மாட்டோம்.

இதையெல்லாம் விட நினைக்கவே பயங்கரமான ஒன்றைச் சொல்கிறேன். நீங்களும் நானும் ஆமைக்கறி கதைகளைநம்பிக்கொண்டிருப்போம். 60000 யானைகள் எனச் சொன்னால் கைதட்டியிருப்போம். கலைஞர் பையில் இருந்து பேனாவை எடுத்து எழுதுவேன் என கதை சொன்னால், "அண்ணன்டா" என கெத்து காட்டி இருப்போம்!

இந்த அபாயங்களில் இருந்து எல்லாம் பெரியார்தான் நம்மை காப்பாற்றியிருக்கிறார்.

அப்படி என்ன பெரியார் செய்துவிட்டார்? எதையும் கேள்வி கேட்காமல், ஆராயாமல் நம்பாதே என சொல்லிக் கொடுத்துவிட்டார். நீ பார்க்கும் காட்சிகள் எதையும் மேலோட்டமாகப் பார்க்காதே, கேட்கும் எதையும் உடனே நம்பாதே, ஆழமாகக் கூர்ந்து கவனி என சொல்லிக் கொடுத்துவிட்டார். வரிகளை மட்டுமல்லாமல் வரிகளுக்கிடையில்படிக்கும்ஆற்றலையும்கொடுத்துப் போய்விட்டார்.

இப்படியெல்லாம் நாம் ஈரோட்டுக் கண்ணாடியை அணிந்திருப்பதால்தான் சிந்திக்கத் தெரியாத ஒரு கூட்டத்திற்கு தலைவனாக இருப்பவர்கள் நமக்கு கோமாளிகளாகத் தெரிகிறார்கள். ஏனெனில் உண்மை நம் கண்களுக்கு மட்டுமே தெளிவாகத் தெரிகிறது.

**அண்ணா தனித்தமிழ்நாடு கொள்கையைக் கைவிடாமல் இருந்திருந்தால் தனி ஈழம் கிடைத்திருக்கும் என்கிறார் திருமுருகன் காந்தி! யாரிடமோ காட்ட வேண்டிய நன்றிக்கடனுக்காக ஈழப் போராட்டத்தின் தோல்வியை அண்ணா எனும் அந்த மாபெரும் மனிதனை தோண்டி எடுத்து கொஞ்சம்கூட மன சாட்சி இல்லாமல் அவர்மேல் பழி சுமத்துகிறார்.**

பெரியார் இறந்து இத்தனை ஆண்டுகளான பின்னும் அவர் ஏன் எதிரிகளுக்கு பயம் தருகின்றவராக இருக்கிறார்?

பெரியாரின் வாழ்க்கை நீண்ட நெடிய ஒன்று. அதில் பல்வேறு தருணங்களில் பலவாறு வேறுபட்டிருக்கிறார். தன் வார்த்தைகளில் தானே முரண்பட்டிருக்கிறார். ஆனால்கொண்ட கொள்கையில்இருந்து என்றும் நழுவியதில்லை. முன்னாளில் ராஜாஜியின் காங்கிரஸை விட்டு விலகினாலும் அதன் காரணம் சாதி எதிர்ப்பு என்பதாகத்தான் இருக்கும். பின்னாளில் காமராசரின் காங்கிரஸை ஆதரித்தாலும் அதன் காரணம் சாதி ஆதிக்க எதிர்ப்பு என்பதாகத்தான் இருக்கும். அதன்பின் திமுகவை ஆதரித்தாலும் அதற்குக்காரணமாகவும் கொள்கைதான் இருக்கும். அதுமட்டுமல்ல, பெரியார் மிகப் பெரிய நேர்மையாளர். எங்கும் எப்போதும் தயவுதாட்சண்யம் பார்க்க வேண்டிய தேவை அவருக்கு இருந்ததே இல்லை. பெரியார் தனக்கு மொழி அபிமானமோ, தேச அபிமானமோ இல்லை என்று வெளிப்படையாக அறிவித்தவர். இப்படி எல்லாம் அவர் நெருப்பு போல் இருந்ததால் அவர் மேல் அவதூறு சொல்வதோ, அவர் எழுத்துக்களை திரிபுவேலை செய்வதோ எதிரிகளால் முடியவில்லை. பெரியார் தமிழை காட்டுமிராண்டி மொழி எனச்சொல்லிவிட்டார் எனக்கதறுவார்கள். ஆனால் பெரியார்தான் தமிழகமெங்கும் திருக்குறள் மாநாடுகளை நடத்தி அதை சராசரி தமிழனிடத்திலும் கொண்டு சேர்த்தவர்.

ஆக, அவரை மட்டும் எதிரிகளால் நெருங்க முடியவில்லை. திரிபு வேலை செய்து தங்களவராக தத்தெடுத்துக் கொள்ளவும் முடியவில்லை. இந்துத்துவ அம்பேத்கர் என நூல் வெளியிட்டு அம்பேத்கருக்கே காவி நிறம் பூசிவிட முடிந்தவர்களால், இந்துத்துவ பெரியார் என எக்காலத்திலும் எழுதவே முடியாது. அதனால்தான் அம்பேத்கரை விட பெரியார் அவர்களுக்கு வேப்பங்காயாய் கசக்கிறார்.

நிற்க -

கடந்த நூறாண்டுகளில் திராவிட இயக்கத்தைச் சரிக்க ஏததோ செய்து பார்த்து விட்டார்கள். போலித் தமிழ்த் தேசியக் குழுக்களை வளர்த்து விடுவதாகட்டும், பெரியார் மேடைகளில் உருவானவர்களை வைத்தே பெரியாரைத் திட்ட விடுவதாகட்டும், ஏராளமானவதந்திகளைபரப்புவதாகட்டும். எதிரிகள் என்னென்னவோ செய்து பார்த்துவிட்டார்கள். இப்போது புதிய ஆயுதத்தைக் கையில் எடுத்திருக்கிறார்கள். பெரியாரியர்கள் போலவே உள்ளே நுழைந்து, திராவிட இயக்கத்தினர் போலவே உள்ளே நுழைந்து பெரியாருக்கு வாக்கரசியல் மீதிருந்த விமர்சனத்தை திரித்துச் சொல்லி, பெரியார் மீது பற்றுள்ள இளைஞர்களை செல்லாக் காசுகள் ஆக்குவது என்கிற வேலைதான் அது.

அதன் முதல் கட்டமாக மே 17 திருமுருகன் காந்தி போன்றவர்கள் களத்தில் குதித்திருக்கிறார்கள். அதற்கு தெரிந்தோ தெரியாமலோ சில திராவிட இயக்க அமைப்புகள் எல்லாம் துணை போவதுதான் வேதனை! கேட்டால், அவர் பெரியாரை பேசுகிறாரே என்கிறார்கள்! பெரியாரை பேசினால் போதுமா? பெரியாரை சரியாக பேச வேண்டாமா? அண்ணாவை இழிவாகப் பேசிவிட்டு பெரியாரைத் தவறாகப் புகழ்ந்தால் ஏற்றுக்கொள்ளலாமா? திருமுருகன் காந்தி கேலிக்கூத்தான காரணங்களுக்காக கைது செய்யப்பட்டிருப்பதும், அதன்பொருட்டு நாம் சந்தேகங்களையும், கண்டனங்களையும் தெரிவிப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அவர் போன்ற ஆட்கள் பெரியார் மீது வைக்கும் திரிபுகளை விரிவாகப் பார்ப்போம்.

அண்ணா தனித்தமிழ்நாடு கொள்கையைக் கைவிடாமல் இருந்திருந்தால் தனி ஈழம் கிடைத்திருக்கும் என்கிறார் திருமுருகன் காந்தி! யாரிடமோ காட்ட வேண்டிய நன்றிக்கடனுக்காக ஈழப் போராட்டத்தின் தோல்வியை அண்ணா எனும் அந்த மாபெரும் மனிதனை தோண்டி எடுத்து கொஞ்சம்கூட மன

**பெரியார் எப்போது தேர்தலைப் புறக்கணியுங்கள் எனச் சொன்னார்? எந்தத் தேர்தலில் பெரியார், "யாருக்கும் ஓட்டுப் போடாதீர்கள்?" என சொன்னார்? ஓட்டரசியலில் இருப்பவர்களின் சந்தர்ப்ப வாதங்களுக்காக, சமரசங்களுக்காக அதைத் திட்டினாரே தவிர, அதில் நேரடியாக ஈடுபடவில்லையே தவிர, தேர்தல்களில் எல்லாம் பெரியார் தனக்கு சாதகமான ஒரு கட்சியையோ, முதல்வர் வேட்பாளரையோ ஆதரித்தே வந்திருக்கிறார்.**

சாட்சி இல்லாமல் அவர்மேல் பழி சுமத்துகிறார். சரி! அவர்தான்தன் கொள்கையை மாநில சுயாட்சி என சுருக்கிக்கொண்டு தேர்தலில் நின்று பல கோடிப் பேருக்கு முதல்வர் ஆகிவிட்டார். மே 17க்கு என்ன கேடு வந்தது? அவர்கள்தான் கட்சியும் ஆரம்பிக்கவில்லை, இயக்கமும் ஆரம்பிக்கவில்லை, ட்ரஸ்ட்டும் ஆரம்பிக்கவில்லை. பல பெயர்களில் சேவிங்க்ஸ் அக்கவுண்ட் மட்டும்தானே ஆரம்பித்திருக்கிறார்! நாடு நாடாகச் சுற்றிப்பார்க்கும் நேரத்தில் தனித்தமிழ்நாடு கேட்டுப் போராட வேண்டியதானே? அவரின் லாஜிக்படி தனித்தமிழகம் வாங்கினால்தான் இலவச இணைப்பாக ஈழமும் கிடைக்குமே! யார் தடுத்தார்கள்? ஏன் தனித்தமிழ்நாடு கேட்டு தேச விரோத வழக்கை சந்திக்காமல், மெழுகுவர்த்தி பிடித்து தேச விரோத வழக்கைச் சந்திக்கிறார்? இதெல்லாவற்றையும்விட திமுக திராவிடநாடு கொள்கையை விட்டபின்னர்தானே பெரியார் ஊர் ஊராகச் சுற்றி 1972 தேர்தலில் திமுகவுக்கு வாக்கு சேகரித்தார்? பெரியாருக்கே தெரியாதது திருமுருகன் காந்திக்கு தெரிந்துவிட்டதா?

பெரியாரிய இளைஞர்களிடம் - "யாருக்கும் ஓட்டு போடாதீர்கள், பெரியார் பாணியில் இயக்க அரசியலுக்கு வாருங்கள்" - என அழைத்து, அரைகுறையாக பெரியாரைத் தெரிந்துவைத்திருக்கும் அந்த முற்போக்கு வாக்காளர்களின் வாக்குகளை செல்லா வாக்குகள் ஆக்கி, வலதுசாரிகள் மீண்டும் ஆட்சிக்கு வர மறைமுகமாக உதவ முயற்சி செய்கிறார். பெரியார் எப்போது தேர்தலை புறக்கணியுங்கள் எனச் சொன்னார்? எந்தத் தேர்தலில் பெரியார், "யாருக்கும் ஓட்டு போடாதீர்கள்?" என சொன்னார்? ஓட்டரசியலில் இருப்பவர்களின் சந்தர்ப்ப வாதங்களுக்காக, சமரசங்களுக்காக அதை திட்டினாரே தவிர, அதில் நேரடியாக ஈடுபடவில்லையே தவிர, தேர்தல்களில் எல்லாம் பெரியார் தனக்கு சாதகமான ஒரு கட்சியையோ, முதல்வர் வேட்பாளரையோ ஆதரித்தே வந்திருக்கிறார்.

(13ஆம் பக்கம் பார்க்க)

# மாதவிடாய் வலியைக் குறைக்க உணவுப் பழக்கம் கட்டாயம்






கேள்வி: என் வயது 48 கடந்த மாதம் உண்டான மாதவிடாயில் 15 நாட்கள் தொடர்ந்து அதிக இரத்தப் போக்கு ஏற்பட்டது. பின்னர் இந்த மாதமும் இரத் தப் போக்குடன் வயிற்றுவலியும் சேர்ந்து மிகுந்த சோர்வைக் கொடுத்துள்ளது. இந்தப் பிரச்சினையை எப்படி தீர்ப்பது? சித்த மருத்துவத்தில் இதற்கு தீர்வு உண்டா?

**நிரஞ்சனா, மெல்போர்ண்**

பதில்: உங்களின் வயதைக் கொண்டு உங்களுக்கு பூப்புச் சுழற்சி நிற்கும் காலம் (Menopause) நெருங்கி விட்டது என தெளி வாக உணர முடிகிறது. இந்த காலங்களில் பெரும்பாலான பெண்கள் அதிக இரத்தப் போக்கால் அவதிப்படுவார்கள். அதற்கு கார ணம் கருப்பபையானது தன்னைச் சுத்தப் படுத்திக் கொள்வதற்கான முயற்சி மற் றும் ஹோர்மோன்களின் மாறுபாடு. எனவே இரத்தப் போக்கால் உண்டான உடல் அசதியைத் தீர்ப்பதற்கு மற்றும் கருப் பையைபலமாக்கிஇரத்தப்போக்கைக்குறைப் பதற்கான உணவுகளையும் மருந்துகளையும் தொடர்ந்து எடுத்துக் கொண்டால் இந்தப் பிரச்சினையை நீங்கள் எளிதில் கடந்து விட முடியும். நீங்கள் உடனடியாக கருப்பை பரிசோதனை (uttra sound scan) செய்து பார்த்தல் அவசியம் ஏனென்றால் கருப்பை கட்டிகள் அல்லது கருப்பை சுவரில் உள்ள தொற்று நோய்களால் உண்டான தடிமன் இவற்றை தெரிந்து கொண்ட பிறகு மருத் துவ முறை எளிதாகிவிடும்.

கருப்பை ஆரோக்கியமாக இருக்கும் பட் சத்தில் வெறுமனே இரத்தப் போக்கு மட் டும் அதிகமாக இருந்தால் சித்த மருத்து வத்தில் ஆடாதோடை இலையை அரைத்து பாலுடன் கொடுக்க இரத்தப்போக்கு குறைந்து விடும். இதனை சித்த மருத்துவரின் ஆலோ சனைப்படி எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் கீரைகள், பேரீச்சம்பழம், பாதம் பருப்பு போன்ற இரும்புச்சத்து மற்றும் புர தம் நிறைந்த உணவுகள் அசதியைக் குறைக் கும் வாழைப்பூ சாறு, மாதுளம்பழச் சாறு போன்றவை அதிகப்படியான புத்துணர்ச்சி யைக் கொடுக்கும்.

கேள்வி: என் வயது 36 கடந்த 2 மாதங்களாக இருகால் மூட்டுக்களிலும் வலி, நடக்க சிரமம், மலச்சிக்கல் உள்ளது. இதனை சரி செய்ய இயலுமா?

**சுதர்சன்**

பதில்: தங்களின் வயதைக் கொண்டும் குறிகுணங்களைக் கொண்டும் இது osfeorosis நோயாக இருக்கலாம் அதா வது எலும்புருக்கி நோய். இது பெரும்பா லும் 35வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத் தான் உண்டாகும். உடலில் கல்சியம் சத் துக்களின் அளவு குறையும் போது அல்லது கல்சியம் சத்துக்களை உடல் உறிஞ்சுவதற்கு தேவையான உபசத்துக்களை vitamin c உள்ள உணவுகளை குறைவாக எடுத்துக் கொள்வதால் எலும்புகள் மிருதுவாகி எளி தில் உடையும் தன்மையுடையதாய் மாறி நடக்கசிரமம்மற்றும்வலியைக்கொடுக்கும். மேலும் உடலின் வெப்பத்தன்மை கூடும் போது எலும்புகளுக்கு இடையில் உள்ள திரவத்தைக் குறைக்கச் செய்து வறட்சி மற்றும் வலி உண்டாகும். ஆதலால் நீங்கள் வாரம் ஒருமுறை கண்டிப்பாக சுத்தமான நல்லெண்ணெய் தேய்த்து தலைமுழுக வேண்டும். கருப்பு எள் கலந்த உணவுகளை தினமும் உணவில் சேர்த்துக் கொண்டால் இதில் உள்ள கல்சியம் சத்துக்கள் எலும்பு களை வலுவாக்கும். மேலும் சித்த மருத்துவ மூலிகைக் தைலத்தை மூட்டுகளில் தேய்ந்து வர வலி குறைந்து இரத்த ஓட்டம் அதிகமா வதை உணரலாம். திணையரிசி, கேழ்வரகு போன்ற சிறுதானியங்களை உணவில் சேர்த்துக் கொள்ள மலச்சிக்கல் நீங்குவ தோடு உங்களின் மூட்டு வலியும் நீங்கும்.



பல்லின சமூகங்கள் வாழ்கின்ற விக்டோறிய மாநிலத்தில் தன்னலம் பாராது அர்ப்பணிப் புடன் சேவையாற்றிவரும் 64 பேருக்கு விக்டோறிய அரசாங்கம் அண்மையில் விருத ளித்துக் கௌரவித்தது. கடந்த செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆர்.விக்ரமசிங்கம் அவர்கள் பல்கலாசார விருதளித்துக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்

# பெரியாரின் வாக்கரசியல்!

**(12ஆம் பக்கத் தொடர்ச்சி)**

"நான் நமக்கு சாதகமான சட்டங்களை செய்து கொள்ள ஏதுவானவர்கள் ஆட்சிக்கு வர வேலை செய்வேன். ஒத்துவரவில்லையா அந்த ஆட்சியை ஒழிக்கப் போராடுவேன்" - என வெளிப்படையாகவே அறிவித்த வர் பெரியார். வாக்கரசியல் ஆட்சியாளர்கள் யாரும் தன் கொள்கைகளுக்கு 100 வீதம் ஆதரவாக இருக்க மாட்டார்கள் என்றாலும் தனக்கு அதிகபட்ச சாதகமான அரசு ஆட்சியில் இருக்கவேண்டும், அதுதான் தன் கொள்கைகளுக்கு நல்லது என பெரியார் விரும்பினார்.

காங்கிரஸை எதிர்த்த அதே பெரியார்தான் காம ராசரை ஆதரித்தார். அண்ணாவை, திமுகவை எதிர்த்த அதே பெரியார்தான் அண்ணா ஆட்சிக்கு வந்தபின் 10 ஆண்டுகளாவது இந்த நல்லாட்சி தொடர வேண் டும் என எழுதினார். பின்னர் அண்ணா இறந்த பின் 'அந்த இருளைப் போக்க வந்த ஒளியாக கலை ஞர் இருக்கிறார்' - என எழுதினார். அன்பழகன் கலைஞருடன் முட்டிக்கொண்டிருந்தபோது அன்பழ கனைக் கண்டித்து கடிதம் எழுதினார். கலைஞர் முதல் வராக இருந்தபோது ராமர் சிலையை செருப்பால் அடித்தார். அதனால் 1972 தேர்தலில் திமுக ஆட் சிக்கு ஆபத்துவருமோ என பெரியாருக்கு உறுத்தி யது. முழுமூச்சாக கலைஞரை ஆதரித்து, காங்கிரஸை, காமராசரை எதிர்த்து பிரசாரம் செய்தார். 1972 தேர்தலில் கலைஞர் தலைமையில் திமுக வரலாறு காணாத வெற்றி பெற்றதும், "உலக வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுவிட்டீர்கள்" - என வாழ்த்தி கடிதம் எழுதினார். எம்.ஜி.ஆர் பிரியும் செய்தி வந்தபோது, "ஒன்னும் தெரியாத மண்ணுப்பயல் ராமச்சந்திரன்" - என எழுதினார்.

ஆனால் திருமுருகன் எனும் திடீர் பெரியாரிஸ்ட் என்ன செய்கிறார்? ஏதோ பெரியார் சாகும்வரை திமுகவை தன் பரம எதிரியாக கருதியதைப் போல வும், திமுக தன் பரம எதிரியாகப் பெரியாரை கருதியதைப் போலவும் வெட்க மானமின்றி நாக் கூசாமல் பொய்ப்பிரசாரம் செய்கிறார். துணைக்கு அவ்வப்போது பெரியாரிய இயக்கங்களை நாலு வார்த்தை புகழ்ந்து ஐஸ் வைத்துக்கொள்கிறார். அவர் களும் உணர்ச்சிவசப்பட்டு சில்லறையை சிதற விடு கிறார்கள். உண்மையான பெரியாரியர்கள் இச்செயலை கண்டிக்க வேண்டாமா? திரிபுகளை அனுமதிக்கலாமா?

பதவி என்பதும், வாக்கரசியல் என்பதும் கொள்கை நெருப்பை சற்று தணியச் செய்வது. எவ்வளவு உறுதி யாக இருந்தாலும் மிஞ்சிப்போனால் சுடும் 'கங்காக' இருக்கலாமேயொழிய நெருப்பாக இருக்க முடியாது என்பதை பெரியாரும் சரி, பின்னர் வாக்கரசியலை தேர்ந்தெடுத்த அண்ணாவும் சரி உணர்ந்தே இருந்தார் கள். ஒருபக்கம் திராவிட நாடு கோரிக்கையை கைவிட்ட திமுகவுக்காக தேர்தலில் பிரசாரம் செய்துகொண்டே, மறுபக்கம் "தனித்தமிழ்நாடு வேண்டும் என்றால் திமுகவை நம்பமுடியாது நாம்தான் போராட வேண் டும்" - என அறிவிக்கிறார் பெரியார்! என்ன தெளிவு பாருங்கள். எதற்காக வாக்கரசியல் கட்சியை ஆத ரிக்கவேண்டுமோ அதற்காக ஆதரித்துவிட்டு, எதை இயக்கங்கள் செய்யவேண்டுமோ அதை தானே கையில் எடுக்கிறார்!

ஆக, திமுக தனித்தமிழ்நாடுக்காகப் போராடும் இயக் கம் அல்ல என்பது எப்போதோ நிறுவப்பட்ட ஒன்று. எனவே தன் ஏனைய முற்போக்கு, சமூகநீதி கொள்கை களை எல்லாம் நிறைவேற்றிவரும் திமுக பத்தாண்டு களாவது தொடர்ந்து ஆட்சியில் இருக்கவேண்டும் என எழுதிய அதே பெரியார், தனித்தமிழ்நாடுக்காக தான்தான் மத்திய அரசை எதிர்த்து போராடவேண்டும் என முடிவெடுக்கிறார். மீண்டும் சொல்கிறேன், வாக்கரசியல் ஆட்சியாளர்கள் யாரும் தன் கொள்கை களுக்கு 100 வீதம் ஆதரவாக இருக்கமாட்டார்கள் என்றாலும் தனக்கு அதிகபட்ச சாதகமான அரசு ஆட்சி யில் இருக்கவேண்டும், அதுதான் தன் கொள்கைகளுக்கு நல்லது என பெரியார் விரும்பினார்.

திமுக என்பது ஓட்டுக்கட்சி. அதற்கான சமரசங்களை அது எத்தனையோ முறை செய்திருக்கிறது. அதை எவ்வளவு வேண்டுமானாலும் விமர்சிக்க யாருக்கும் உரிமை உண்டு. அவ்வளவு ஏன் எடப்பாடி அரசை ஆதரிக்கக்கூட திருமுருகன் காந்தி போன்றவர்களுக்கு உரிமை உண்டு! ஆனால் இளைஞர்களை தேர்தலை புறக்கணிக்கச் சொல்லலாமா? அதுவும் பெரியாரின் பெயரைச் சொல்லி! அதனால்தான் நாம் கண்டிக்க வும், கண்டுகொள்ளவும் வேண்டியிருக்கிறது. ஆக, கொஞ்சமே கொஞ்சமாக பெரியாரை தெரிந்து வைத்திருக்கும் பெரியாரிஸ்ட்கூட மேற்கண்ட பெரியா ரின் நிலைபாட்டைதான் தேர்தல் அரசியலில் எடுப் பானே தவிர, தேர்தல் அரசியலே வீண், வேலைக்காகாத செயல் என ஒதுங்கி பெரியாரியர்களின் வாக்குகளை வீணாக்கச் சொல்லமாட்டான்!

எது எப்படியோ! பெரியாரைக்கூட அரைகுறையா கப் பேசி திரித்துப் பரப்பும் இந்தக் கூட்டத்தை அடை யாளம் காண வேண்டுமென்றால் ஈரோட்டுக் கண் ணாடியை 24 மணி நேரமும் சூதானமாக அணிந்திருக்க வேண்டிய தேவை இருக்கிறது. பெரியாரை பெரியாரிட மிருந்து மட்டுமேதான் நாம் கற்க வேண்டும். ஏனெ- னில் போலிப் பெரியாரியர்களிடமிருந்தும் நம்மை பெரியார்தான் காப்பாற்றுவார்!


MATHY FOOD CORNER
Restaurant & Bakery
தாயக மணம் வீசும்
வெதுப்பக பண்டங்கள் மெல்பேர்ணில்!
சுடச்சுட தயாரித்து தருகிறார்கள்
1/24 Langhorne Street,
Dandenong VIC 3175,
Australia.
Tel: +61 3 8753 5751
www.mathyfoodcorner.com.au
facebook
www.facebook.com/mathyfoodcorner
MATHY FOOD CORNER
Restaurant & Bakery
Gift
VOUCHER
$5
facebook
www.mathyfoodcorner.com.au


Shri Shiva Vishnu Temple
Punaravarthana Kumbhabhishekham 12th April 2019
HARIHARA PUTRAN OM SRI AYYAPPA DIVINE SHRINE
UPGRADE PROJECT
AN OUTSTANDING PROJECT
THAT REQUIRES THE HIGHEST DEGREE OF CROWD FUNDING &
SUPPORT. PLEASE DONATE GENEROUSLY TO SPONSOR A BRICK(S)
$51 EACH TO THE ABOVE CAUSE
VIA ANY OF OUR BELOW DONATION MEDIUMS.
By leading the effort in coordination with Hindu Society of Victoria , Kannappa Swamigal Adiyar Thirukkottam
request the dedicated funding from individuals, our family members, business people & friends in making this dream project a reality.
TO DONATE PLEASE USE ANY OF THE SECURE RESOURCES BELOW
0410135728
041013KSAT
A fundraising initiative by
KSAT
Kannappa Swamigal Adiyar Thirukkottam
gofundme

# வெளிநாட்டு ஆசாமியை வசமாக மடக்கிய பொலீஸ்!



## சுமந்திரன் கொலைச்சதி

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்பேச்சாளரும்நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சுமந்திரன் மீதான படுகொலை முயற்சி தொடர்பான செய்தி இரண்டொரு தடவைகள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன. பிறகு, கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்துக்கு கொண்டுவந்த தகவல்களை மூலைச்செய்திகளாக சில பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன. கூட்டமைப்புக்கு எதிராக கம்பு சுத்துகின்ற கொஞ்ச இணையத்தளங்கள் இதனை நக்கலாகவேறு போட்டு செய்தி வெளியிட்டிருந்தன. சுமந்திரன் என்பவர் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலிருந்து அகற்றப்படவேண்டியவர் என்று அவா உடைய தரப்புக்கள் இந்த செய்திகளை ஒரு வித சாடிஸ மனநிலையோடு கொண்டாடியிருந்தன.

அவ்வளவுதான்.

இந்த செய்திக்கு தமிழ் ஊடகங்களிலும் சமூகவலைத் தளப்பரப்பிலும் வழங்கப்பட்ட முக்கியத்துவம் இதற்குமேல் நகரவில்லை.

ஆனால், இதற்கும் அப்பால் இந்த சம்பவத்தின் பின்னணியில் நடைபெற்றுவருகின்ற விசாரணைகளும் அதற்கான பின்னணிகளும் அதிர்ச்சியூட்டுபவை. பல உண்மைகள் நிறைந்தவை. இன்னமும் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருப்பவை.

> "மருதங்கேணி சந்திப்புக்காக கொழும்பிலிருந்து தனது மனைவியோடு செல்லவிருந்தார் சுமந்திரன். இந்தமுறையாவது, திட்டம் பிசகக்கூடாது என்ற வைராக்கியத்துடன் மீண்டும் ஒழுங்கமைக்கப்பட்ட கொலையாளிகள் அதே சோரன்பற்று – தாளையடி வீதியில் கிளைமோருடன் தயாராகவிருந்தனர்"

இதுதொடர்பாக "எதிரொலி" - சம்பந்தப்பட்ட தரப்புகள் சிலவற்றிடம் தொடர்புகொண்டு பேசியபோது பல அதிர்ச்சியூட்டத்தக்க தகவல்கள் வெளியாகியிருந்தன.

நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு, சர்வதேச பிடியாணை, தொடர்விசாரணைகள் என்று பல சிக்கல்கள் இதில் நிறைந்திருப்பதால் எல்லா விடயங்களையும் இங்கு எழுத முடியாவிட்டாலும்கூட இவற்றுடன் தொடர்புடைய முக்கிய விவகாரங்களை வாசகர்களுக்கு கொண்டு செல்வதுதான் இந்தப் பத்தியின் நோக்கம்.

இந்த செய்திகள் குறித்த முழுமையான புரிதலை எட்டுவதற்கு, நடந்து முடிந்த சம்பவங்கள் தொடர்பான முழுமையான தகவல்களை இங்கு கொண்டுவருவது முக்கியமாகிறது. ஆக, அந்த செய்திகளின் ஆதி மூலத்துக்கு சற்று சென்று திரும்புவோம்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சுமந்திரனுக்கு எதிரான கொலைச் சதி எனப்படுவது இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு மாத இடைவெளியில் இரண்டு தடவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

முதலாவது முயற்சி, 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதியன்றும் இரண்டாவது முயற்சி 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதியன்றும் இடம்பெற்றிருந்தது.

### சம்பவம் - 1

வடமராட்சி மருதங்கேணி பகுதியில் நடைபெபெற்ற கலாசார விழா ஒன்றில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வதற்காக அவர் செல்லும்போது, போகும் வழியில் சோரன்பற்று - தாளையடி வீதியில் வைத்து சுமந்திரனது வாகனத்துக்கு கிளைமோர் தாக்குதல் ஒன்றினை மேற்கொள்வதன் மூலம் அவரைக் கொலை செய்வதற்கு முதலாவது திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

ஆனால், அந்த முயற்சி முற்றுமுழுதாக பிசுபிசுத்துப் போனது.

யாழ்ப்பாணத்திலிருந்து 43 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மருதங்கேணி என்ற வடமராட்சியின் கிழக்கு கிராமத்தினை இரண்டு பெரு வீதிகளினால் சென்றடையமுடியும். ஒன்று, பருத்தித்துறை - மருதங்கேணி வீதி. மற்றையது, சோரன்பற்று - தாளையடி வீதி.

அன்றைய தினம் - 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி - குறிப்பிட்ட மருதங்கேணி பிரதேச கலாசார விழாவில் கலந்துகொள்ளவிருந்த சுமந்திரன் அங்கு புறப்படவிருந்த சமயம், தானும் அங்கு வருவதாகக்கூறி சுமந்திரனுடன் சில விடயங்கள் பேசவேண்டும் என்றும் போகும் வழியில் வாகனத்துக்குள்ளேயே அது பற்றி பேசலாம் என்று வடமாகாணசபை உறுப்பினர் சயந்தன் யாழ்ப்பாணத்திலிருந்து சுமந்திரனோடு இணைந்துகொண்டார். ஆக, சுமந்திரன் தனது வாகனத்தில் செல்லாமல், சயந்தனுடைய வாகனத்திலேயே மருதங்கேணிக்கு பயணமாகியுள்ளார். சயந்தனுடைய வாகனம் ஏ9 வீதி வழியாக புதுக்காட்டு சந்திவரை சென்று தாளையடி வீதி ஊடாக மருதங்கேணியை அடைந்திருக்கிறது. சுமந்திரனுடைய வாகனமும் அவரது பாதுகாப்பு பிரிவினரும் சயந்தனுடைய வாகனத்துக்குப் பின்னால் குறிப்பிட்ட கலாசார நிகழ்வு நடைபெற்ற இடத்துக்கு சென்றிருக்கிறார்கள்.

கலாச்சார விழாவில் சயந்தன் கலந்துகொண்டாலும் அவர் விழா முடிவடைவதற்கு முன்னரே அங்கிருந்து கிளம்பிவிட்டார். தனக்கு வாகனம் இருப்பதாகவும் யாழ்ப்பாணம் திரும்புவதில் தனக்கு பிரச்சினையில்லை என்றும் சுமந்திரன் கூறியதையடுத்து சயந்தன் அங்கிருந்து கிளம்பி இன்னொரு நிகழ்வுக்கு சென்றுவிட்டார். மருதங்கேணி நிகழ்வு முடிந்த பின்னர் சுமந்திரன் தனது வாகதனத்தில் சோரன்பற்று - தாளையடி வீதியினால் யாழ்ப்பாணம் திரும்பியிருக்கிறார்.

அன்றைய தினம் சுமந்திரன் மேற்கொண்ட பயணமும் பாதையும் இதுதான். ஆனால், இந்தப்பயணத்தை இலக்குவைத்து காத்திருந்த தாக்கலாளிகளால் அவர் மீது தாக்குதல் நடத்துவதற்கு முடியாமல் போனது ஏன்?

இங்குதான் பல திகில் நிறைந்த சம்பவங்கள் உண்டென்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அதாவது, சுமந்திரனின் வாகனத்தை இலக்கு வைத்து சரியான விவரங்களுடன் சோரன்பற்று - தாளையடி வீதியில் காத்திருந்த கொலையாளிகள் அவரது வழக்கமான வாகனத்தைக் காணாமல் குழம்பிப்போயுள்ளார்கள்.

அதற்கு காரணம், சுமந்திரன் அன்றைய தினம் புதிய வாகனம் ஒன்றை உபயோகப்படுத்தியதே ஆகும். வழக்கமாக, சுமந்திரன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போகும் போது யாழ்ப்பாணத்தில் வாடகைக்கு ஒரு வாகனத்தை எடுத்துப் பயன்படுத்துவார். ஆனால், அன்றையதினம் வாடகைக்கு எடுக்கும் தனது வழக்கமான வாகனத்தை உபயோகப்படுத்தாமல் பிறிதொரு வாகனத்தைப் பயன்படுத்தியிருந்தார். அந்த வாகனமும் பாதுகாப்பு பிரிவின் வாகனமும்தான் சயந்தனுடைய வாகனத்தைப் பின்தொடர்ந்து மருதங்கேணிக்குச் சென்றிருக்கின்றன.

இதனால் முற்றிலும் குழம்பிப்போயுள்ளார்கள் தாக்குதலாளிகள்.

தாக்குதலாளிகளுக்கு அன்றைய தினம் முழுமையான நெறிப்படுத்தல்களை வழங்கிக்கொண்டிருந்த "X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபர்" -

"சுமந்திரன் நிச்சயமாக விழாவில் கலந்துகொள்வார். தாக்குதல் சறுக்கக்கூடாது" -என்று திரும்ப திரும்ப அடித்துக்கூறியிருக்கிறார்.

சுமந்திரனின் வழக்கமான வாகனத்தை எதிர்பார்த்து காத்துக்கொண்டு நின்ற தாக்குதலாளிகள், அவரது வாகனத்தை காணவில்லை என்றவுடன் குறிப்பிட்ட X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபருக்கு தகவல் அனுப்ப, அவரோ -

"நான் செக் பண்ணிச் சொல்கிறேன். குழம்பவேண்டாம். தொடர்ந்தும் காத்திருங்கள்" - என கட்டளையிட்டிருக்கிறார்.

ஆனால், இவர்கள் கிளைமோரை அமத்துவதற்கு காத்துக்கொண்டிருந்த சமயம், மருதங்கேணியில் விழாவில் சுமந்திரன் மங்கள விளக்கேற்றிக்கொண்டிருந்தார்.

இதைக்கேள்விப்பட்ட "X என்றதிருநாட்டிலிருந்துதாக்குதலை நெறிப்படுத்திக்கொண்டிருந்த Y என்ற நபர்" திடுக்கிட்டார். சயந்தனோடு சுமந்திரன் நிகழ்வுக்கு சென்ற விவரம் எதுவும் புரியமால் குழப்பிவிட்டார்.

தனது தகவல் மூலங்களுடன் பேசிய வெளிநாட்டு Y நபர் -

"பரவாயில்லை. வரும்போது தவறவிடவேண்டாம். ஆள், உந்த வழியால்தான் வரும்" - என்று மீண்டும் பேஸ்புக் மெஸெஞ்ஜரில் தகவல் அனுப்பியிருக்கிறார்.

மாலை சரிந்து மருதங்கேணி இரவுக்குள் ஒளிந்துவிடப்போகிறதே என்ற அச்சத்துடனும் காரியத்தை முடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் காத்திருந்த தாக்குதலாளிகளுக்கு மீண்டும் ஏமாற்றம். சயந்தனின் வாகனம் மருதங்கேணியிலிருந்து முதலே கிளம்பிவிட்டது. பிறகு வந்த, சுமந்திரனின் வாகனமும் வேறொன்று.

திரும்பவும் அதேவழியால்தான் வருவார் என்று சொன்ன வெளிநாட்டு ஆசாமிக்குக்கூட எந்த வாகனத்தில் வருவார் என்பது முற்றிலும் தெரிந்திருக்கவில்லை. ஆகமொத்தம், வழக்கமான வாகனத்துக்கு காத்திருந்த தாக்கதல்காரர்களுக்கு மீண்டும் ஏமாற்றம்.

மொத்தத்தில் ஒட்டுமொத்த திட்டமும் பப்படமாகிப் போனது.

### சம்பவம் - 2

2016ஆம் ஆண்டு இறுதியில், கடல் நீரை நன்னீராக்கும் நிலையம் ஒன்றை தாளையடி கடற்கரையோரமாக அமைப்பது தொடர்பில் வடமாராட்சி மக்களில் ஒரு பகுதியினர் மத்தியில் பலத்த குழப்பங்கள் கிளம்பியிருந்தன. அந்தக் குழப்பத்தை மேலும் கொழுந்துவிட்டு எரித்துவிடவேண்டும் என்பதிலும்சிலசக்திகள்திட்டமிட்டுசெயற்பட்டுக்கொண்டிருந்தன. இந்த விடயம் தொடர்பாக துறைசார் வல்லுனர்களுடன் சேர்ந்து மக்களுக்கு விளக்கமளிக்கும் சந்திப்பொன்று 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி மருதங்கேணியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்பு சுமந்திரன் தலைமையில் இடம்பெறுவதாகவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த சந்திப்புக்காக கொழும்பிலிருந்து மருதங்கேணிக்குத் தனது மனைவியோடு செல்வதற்கு திட்டமிட்டிருந்தார் சுமந்திரன்.

இந்த முறையாவது, திட்டம் பிசகக்கூடாது என்ற வைராக்கியத்துடன் மீண்டும் ஒழுங்கமைக்கப்பட்ட கொலையாளிகள் அதே சோரன்பற்று - தாளையடி வீதியில் கிளைமோருடன் தயாராகவிருந்தனர்.

ஆனால், சட்ட விவகாரங்கள் சிலவற்றை மேற்பார்வையிடவேண்டிய தேவையிருந்ததால் கடைசி நேரத்தில் தனது யாழ்ப்பாணப் பயணத்தையே சுமந்திரன் ரத்து செய்திருந்தார்.

ஆக, இரண்டாவது திட்டமும் பஸ்பமாகிவிட்டது.

இந்த இரண்டு சம்பவங்களிலும் சுமந்திரன் அதிஸ்டவசமாக உயிர்தப்பியிருந்தபோதும் இது குறித்து பொலீஸாருக்கு எந்தத்தகவலும் தெரிந்திருக்கவில்லை.

முதல்முறையாக கிளிநொச்சி வழியாகத்தான் இந்தத் தகவல் அம்பலமானது.

அதாவது, சுமந்திரனை கொலை செய்வதற்கு முன்னாள் போராளிகள் சிலரைக் கூலிப்படையினராக பணத்துக்குப் பயன்படுத்தவதற்கு கிளிநொச்சி பகுதியில் தொடங்கிய பேச்சுவார்த்தை ஒன்று ஏதோ ஒருவகையில் பொலீஸூக்கு கசிந்துவிட்டது. சுமந்திரனின் நடவடிக்கைகள் குறித்து நன்நம்பிக்கை கொண்ட முன்னாள் போராளி ஒருவரிடம் இந்த கொலை முயற்சிக்கு ஆதரவு கோரியபோது, அவர்தான் பொலீஸாருக்குத் தகவலைக் கொடுத்து அம்பலப்படுத்தியிருந்தார் என்கின்றன சம்பவம் தொடர்பான விடயமறிந்த வட்டாரங்கள்.

இந்தத் தகவல்களையடுத்து, இரகசியமாக தங்கள் விசாரணைகளை தொடங்கிய பொலீஸார் முன்புபோல தடாலடியாக சந்தேக நபர்களின் வீடுகளில்போய் இறங்கவில்லை. சுமந்திரன் கொலைத்திட்டத்துடன் அலைகிறார்கள் என்று தாங்கள் நிச்சயமாக உறுதிப்படுத்திய நபர்களின் நடமாட்டத்தை தொடர்ந்து அவதானித்து வந்தார்கள். அவர்களின் போக்குவரத்துக்கள், சந்திக்கும் நபர்கள், தொலைபேசி உரையாடல்கள் என்று எல்லாவற்றையும் கண்காணித்தார்கள்.

பின்னர், ஒவ்வொரு ஆட்களாகவீட்டில்போய் அப்பினார்கள். அவர்களைப் பிடிக்கும்போதுகூட இந்தக்கொலைச் சதி தொடர்பாக எதுவும்கூறாமல், கஞ்சா வைத்திருந்த சந்தேகத்தில் கைது செய்வதாகக்கூறி அழைத்துச்சென்றிருக்கிறார்கள்.

இதெல்லாம் பொலீஸார் போட்ட மெகா திட்டம். ஏனெனில், எழுந்தமானமாக போய் கைது செய்திருந்தால், "முன்னாள் போராளிகள் கைது" - அது இது என்று ஊடகங்களில் செய்திகள் வந்து, விடயம் வேறு மாதிரி திசைமாறிவிடும் என்பதற்காக கஞ்சா வைத்திருந்த விவகாரத்தில் பிடித்துச்செல்வதாக கூறியதால், கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்களும் இந்த விடயத்தை வெளியில் கூறமுடியாமல் அமத்தி வாசிக்கத்தொடங்கினார்கள்.

இவ்வாறு முதலில் கைது செய்யப்பட்டவர்கள் சுமார் ஐந்து பேர். ஆனால், ஒருவர் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

கைதுகள் கிளிநொச்சியிலிருந்து 2017 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதி ஆரம்பமாயின. வவுனியா பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் அடுத்தடுத்து இருவர் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன. அதன் பின்னர், திருகோணமலையிலிருந்து ஒருவரும் தாளையடி பகுதியிலிருந்து ஒருவரும் கைதாகினர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட முழுமையான விசாரணைகளின்போது இந்த திட்டம் எப்போது - யாரால் ஆரம்பிக்கப்பட்டது? யார் யாருக்கு இதில் எவ்வளவு பணக் கொடுப்பனவுகள் பேசப்பட்டன என்பவை தொடக்கம் சகல விடயங்களும் வெளிவந்திருந்தன.

உள்ளூரில் கைது செய்யப்பட்டவர்கள் நால்வரும் இந்தத் திட்டத்தில் ஒருவரோடு ஒருவர் இணைந்து செயற்பட்டார்கள் என்பதை தாம் உறுதிப்படுத்தியுள்ளதாக பொலீஸாரால் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், விசாரணைகளில் வெளிவந்துள்ள மேலதிக தகவல்கள்தான் இடியாக இறங்கியிருந்தன.

> "கொட்டாஞ்சேனை girlfriend ஊடாக சகல தகவல்களை கறந்து கொண்ட பொலீஸ் படத்தோடு நீதிமன்றில் வழக்கை தாக்கல் செய்துவிட்டு குறிப்பிட்ட ஆசமி தங்கியுள்ள நாட்டுக்கும் விசாரணை அறிக்கையை அனுப்பியுள்ளது"

அதாவது, இவ்வாறு முன்னாள் போராளிகளை சுமந்திரனுக்கு எதிரான கூலிப்படையாக ஏவிவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முழுமையான திட்டம் வெளிநாட்டிலுள்ள சிலருடையதே என்ற தகவல் வெளியானது.

இந்த திட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து ஒருவர், மலேசியாவிலிருந்து ஒருவர். பிரான்ஸிலிருந்து ஒருவர் என்று விசாரணைகளில் தெரியவந்தது. கைதானவர்கள் தங்களுடன் தொடர்பிலிருந்து குறிப்பிட்ட மூவரினதும் பெயர்களைக் கூறினார்கள். அவர்கள் போட்ட திட்டங்களையும் விலாவாரியாக சொன்னார்கள். அப்போதுதான் மருதங்கேணியில் பிசுபிசுத்துப்போக எல்லா விவரங்களும் வெளியாகின.

தாக்குதலை நெறிப்படுத்தியவர்கள் என்று கூறப்பட்ட வெளிநாட்டு ஆசாமிகள் மூவரில் இருவர் தொடர்பான விவரங்கள் எதுவும் கைது செய்யப்பட்ட நான்கு முன்னாள் போராளிகளிடமும் இல்லாததால் அவர்கள் தப்பிவிட்டார்கள்.

ஒருவரது தகவல் மாத்திரம் பொலீஸிடம் முறையாக மாட்டியிருக்கிறது.

"X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபர்" அந்த நாட்டுக்குத் தஞ்சம் கோரிச்சென்றவர். அவருக்கு அந்த நாட்டில் இன்னமும் குடியுரிமை கிடைக்காத நிலையில் தஞ்சக்கோரிக்கை விண்ணப்பம் கிடப்பில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(26ஆம் பக்கம் பார்க்க)



# சிவராம் குடித்த கூழ்

"தராகி" என்ற தர்மரத்தினம் சிவராமைச் சிலருக்கு நினைவிருக்கலாம். பலர் மறந்துவிட்டிருக்கக் கூடும். ஆனால், 1990 களின் முற்பகுதியில் தராகியின் இராணுவ ஆய்வுக் கட்டுரைகளுக்கு தனி மதிப்பிருந்தது. அப்பொழுது தராகி கொழும்பிலிருந்து கொண்டு "த ஐலண்ட்" பத்திரிகையில் எழுதினார்.

இலங்கை இராணுவத்துக்கும் புலிகளுக்கும் உச்ச மோதல்கள் நடந்து கொண்டிருந்த நாட்கள் அவை. யாருக்கு வெற்றி என்று மதிப்பிட முடியாத நிலையில் களநிலவரம் இருந்தது. சில இடங்களில் புலிகளின் கை ஓங்கும். சில இடங்களில் படைகளின் கை ஓங்கும். அநேகமாகப் புலிகளை எதிர்கொள்வதற்குப் படையினர் திணறிக் கொண்டிருந்தனர். புலிகளின் முதுகெலும்பை முறிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் அதை எப்படிச் செய்வது எனப் படைத்தலைமையும் அரசாங்கமும் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தன.

இந்தச் சூடான களநிலவரத்தைப் பற்றி இக்பால் அத்தாஸ், தராகி சிவராம் போன்றவர்கள் போட்டி போட்டு எழுதிக் கொண்டிருந்தனர். இருவருடைய கட்டுரைகளையும் புலிகளும் கூர்ந்து படித்து வந்தனர். படைத்தரப்பும் படித்தது. ஒரு கட்டத்தில் தராகி எழுதினார், "மன்னார் வழியாகப் படைத்தரப்பு யாழ்ப்பாணத்தை நோக்கி நகர்வதற்குத் திட்டமிடுகிறது. இந்த வழியாக நகர்ந்தால் படைகளுக்குப் பல அனுகூலங்கள் உண்டு. மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வழி என்பது பெரும்பாலும் பெரிய வெளிகளையும் சிறிய பற்றைக் காடுகளையும் சிற்றூர்களையும் கொண்டது. இது மரபு வழி இராணுவத்தாக்குதலுக்கு - படையினருக்கு - வாய்ப்பாக இருக்கும். இப்படி நகரும் படையினரைத் தடுப்பது புலிகளுக்குச் சவாலாக அமையும். புலிகளுக்கு பெரும் இழப்புகளையும் ஏற்படுத்தும்" - என்று இந்தக் கட்டுரை 1994 இல் வந்திருந்தது. அப்பொழுது யாழ்ப்பாணத்தில் அரை நிர்வாகக் கட்டமைப்போடு புலிகளிருந்தனர்.

இதைப் படித்த புலிகளுக்கு, "இராணுவத்துக்குப் புத்தி சொல்கிறாரா தராகி?" என்று சிவராமின் மீது உச்சக் கோபம் ஏற்பட்டது. புலிகளுக்குப் பகையான புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்ற அடையாளத்தோடிருந்த தராகியை அவர்கள் உடனே அரசாங்கத்தோடும் இணைத்துப் பார்க்க முற்பட்டனர். தராகி எழுதியதைப்போலவோ எதிர்பார்த்ததைப் போலவோ படையினர் மன்னார் வழியாகத் தாக்குதலைச் செய்யவில்லை. பலாலி, ஆனையிறவு என்ற இருமுனைகளின் வழியாக யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டனர். (பிறகு தராகி சொன்னதைப்போலவே, 2007 இல் மன்னார் வழியாகவே இந்த நடவடிக்கையைப் படைத்தரப் மேற்கொண்டது. அதிலே வெற்றியும் படைத்தரப்புக்குக் கிட்டியது).


இதனால் 1995 ஒக்ரோபரில் புலிகள் யாழ்ப்பாணத்தை இழக்க வேண்டியிருந்தது. தொடர்ந்து புலிகள் கிளிநொச்சியையும் இழந்தனர். இதெல்லாம் புலிகளுக்குப் பின்னடைவாகவே இருந்தன. இதைத் தாக்குப்பிடிப்பதற்கு அவர்கள் முல்லைத்தீவுப் படைத்தளத்தைத் தாக்கிப் பெரிய வெற்றியைப் பெற்றிருந்தாலும் 1997 இல் தொடங்கிய "ஜெயசிக்குறு" படை நடவடிக்கை புலிகளுக்கு மேலும் நெருக்கடியைக் கொடுத்தது. அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாத ஒரு நிலை வளர்ந்து கொண்டிருந்தது. இந்த நாட்களில் அத்தாசும் சிவராமும் என்ன எழுதுகிறார்கள் என்று புலிகளின் தளபதிகளே அறிவதற்கு ஆவலாக இருந்தனர். (இந்த ஆவலுக்காக பிரபாகரனுக்கு இந்தக் கட்டுரைகள் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டன) இருவருடைய இராணுவ ஆய்வுகளும் புலிகளுக்குப் பல சந்தர்ப்பங்களில் எரிச்சலையூட்டியதுமுண்டு. ஆனாலும் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டிக்கொண்டேயிருந்தன. ஒரு கட்டத்தில் புலிகளின் எதிர்ப் பட்டியலில் தராகியும் இடம்பெற்றார்.

ஆனால், இது நீடிக்கவில்லை. அல்லது இதை மாற்றிப் போட்டார் தராகி.

"ஜெயசிக்குறு" படை நடவடிக்கையை "ஓயாத அலைகள்" நடவடிக்கை மூலம் முறியடித்து, ஆனையிறவுப் படைத்தளத்தையும் கைப்பற்றினர் புலிகள். இது புலிகளுக்குப் பெரிய வெற்றியாக - பெரும் இராணுவச் சாதனையாக - அமைந்தது. இதைப் பார்த்துப் பலரும் திகைத்துப்போனார்கள். தராகியும் திகைத்தார். அதற்கு முதல் வாரம்வரை - அதாவது ஆனையிறவுத்தளம் வீழ்ச்சியடைவது வரை - "இராணுவத்தின் கை ஓங்குகிறது" - என்று எழுதி வந்தவர், இப்பொழுது "படையின் முதுகெலும்பு உடைந்துவிட்டது. புலிகள் தேசிய இராணுவமாக - தமிழர்களின் மரபுப் படையணியாக - வளர்ச்சியடைந்துவிட்டனர்" - என்று எழுதினார். என்றாலும் புலிகளைப் பற்றிய - அவர்களுடைய அரசியல் முறைமை பற்றிய - தராகியின் எண்ணங்களில் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. தராகியைப் பற்றிய புலிகளின் குறிப்பேட்டிலும் மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை.

ஆனால், 2002 ஏப்ரல் 10 இல் பிரபாகரன் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிற்கு சிவராம் சர்வதேச ஊடகவியலாளர்களுடன் இணைந்து கிளிநொச்சிக்கு வந்திருந்தார். அப்படி வந்தவர் கிளிநொச்சியைச் சுற்றிப் பார்த்தார். கிளிநொச்சியைச் சுற்றிப் பார்த்தவருக்கு சில அதிர்ச்சிகள் ஏற்பட்டன. முக்கியமாகப் புலிகளின் "அறிவு அமுது" புத்தகக் கடையில் அவர் பார்த்த புத்தகங்கள். பெரியார் தொடக்கம், மாக்சிஸ், இடதுசாரியப் புத்தகங்களின் பெருந்தொகை. போதாக்குறைக்குச் சோபாசக்தியின் புத்தகங்கள், கோவிந்தன் எழுதிய 'புதியதோர் உலகம்' உள்பட இன்னொரு வகை. அருகில் சரிநிகர், தினமுரசு என புலிகளுக்கு எதிர்நிலையில் நிற்கும் பத்திரிகைகள்.

இதையெல்லாம் எப்படிப் புலிகள் அனுமதித்தனர்? என்று திகைத்துப் போனார் தராகி. "புலிகளுக்கு எப்படி இந்த ஞானோதயம் ஏற்பட்டது?" - என்ற கேள்விகள் எழுந்தன. தான் நினைத்திருக்கும் புலிகள் வேறு, இங்கே நடைமுறையில் உள்ள புலிகள் வேறா? என்ற குழப்பம் ஏற்பட்டது.



கருணாகரன்

இதைப்பற்றி அங்கே தனக்குத் தெரிந்தவர்களைத் தேடிச் சென்று விசாரித்தார். "கிளிநொச்சியில் மட்டுமல்ல, வன்னி முழுவதிலும் இதுபோல பத்துப் பன்னிரண்டு கடைகளைப் புலிகள் திறந்திருக்கிறார்கள். இதைவிட கிராமங்களில் உள்ள மாவீரர் படிப்பகங்களிலும் இந்த மாதிரிப் புத்தகங்கள் போடப்பட்டுள்ளன. இதைவிட இந்தப் புத்தகங்களைக் கூடுதலாக வாங்கிப் படிப்பது போராளிகளே" என்று சொல்லப்பட்டது அவருக்கு. "இந்தக்கடைக்குயார்பொறுப்பு?" என்று விசாரித்த தராகி, அறிவு அமுது" வுக்குப் பொறுப்பான இளங்கோவை (ரமேஸ்) சந்தித்தார். ரமேஸ் பெரியாரியவாதி. தமிழ்ப்பற்றாளர். இதெல்லாம் தராகிக்கு மேலும் வியப்பையளித்தது. தராகிக்கும் பெரியாரில் பெரிய ஈடுபாடுண்டு. மேலும் தமிழ்மொழியிலும் இலக்கியத்திலும் ஆர்வமிருந்தது. இளங்கோவோடு பேசிய தராகிக்கு மேலும் ஆச்சரியங்கள்.

இதற்குப்பிறகு, கொழும்புக்கு போன தராகியின் கட்டுரைகளில் பெரிய மாறுதல்கள் ஏற்படத்தொடங்கின.

புலிகள் கருத்தியல் ரீதியிலும் புதிய - முற்போக்குப் பார்வையைக் கொண்டிருக்கிறார்கள். வெளியே கட்டமைக்கப்பட்டிருக்கும் அபிப்பிராயங்களுக்கு மாறாக நடைமுறையில் பல நல்ல விடயங்களைச் செய்கிறார்கள். பன்மைத்துவ வாசிப்புக்கு இடமளிக்கிறார்கள். இது எதிர்காலத்தில் நல்லதொரு ஜனநாயகச் சூழலைத்திறக்கும். தமிழ்த்தேசியம் என்பது இதன்வழியே கட்டமைக்கப்படும்போது சிறப்பாக இருக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

தொடர்ந்து தராகியின் கட்டுரைகள் புலிகளுக்கு ஆதரவான சாய்வு நிலையைக் கொள்ளத் தொடங்கின. ஒரு கட்டத்தில் தராகி "த ஐலண்ட்" பத்திரிகையில் எழுதுவதைக் கைவிட்டார். அல்லது குறைத்துக் கொண்டார். அல்லது தராகியின் கட்டுரைகளை "த ஐலண்ட்" பத்திரிகையில் பிரசுரிக்க முடியாத நிலை அவர்களுக்கே உருவானது. இந்த வளர்ச்சி அப்படியே "தமிழ் நெற்" வரை சென்றது. தமிழ் நெற்றில் தமிழர்களுடைய மெய் நிலையை வெளிப்படுத்தவேண்டும். இதன் மூலமாக சர்வதேசசமூகத்திற்கு தமிழ்மக்களின் பிரச்சினைகளையும் அரசின் ஒடுக்குமுறையையும் அறியப்படுத்தலாம் என்று முயன்றார். கூடவே தமிழ் ஊடகத்துறையை அறிவுபூர்வமாக சர்வதேசத்தரத்திற்கு வளர்த்தெடுக்க வேண்டும் எனவும் விரும்பினார்.

இதெல்லாம் மெல்ல மெல்லத் தராகியைப் பற்றிய புலிகளின் மதிப்பீட்டில் புதிய நிலையை உருவாக்கின. இந்த வளர்ச்சி தராகிக்கும் புலிகளுக்குமிடையிலான நெருக்கத்தை உண்டாக்கியது. ஒரு கட்டத்தில் புலிகளின் முக்கிய தளபதிகளும் தராகியும் கூடிக் கூழ் குடிக்கிற அளவுக்குச்சென்றது. தராகிக்கும் புலிகளுக்கும் இடையிலான நெருக்கம் கூடி நட்பாக வளர்ந்தபோது, புலிகளில் ஒரு சாராருக்கு தராகியின் ஆலோசனைகள் சரியென்று படத்தொடங்கியது.

அது சமாதானப் பேச்சுகள் நடந்து கொண்டிருந்த காலம்.

"சமாதானப் பேச்சுகளின் வழியே அமெரிக்கா புலிகளைத் தோற்கடிக்க முயற்சிக்கிறது. இதற்காக அது நோர்வேயைப் பயன்படுத்துகிறது. இதையே அது பலஸ்தீனத்திலும் செய்தது. புறத்தோற்றத்துக்கு பலஸ்தீனத்தில் பிரச்சினை தீர்க்கப்பட்டதாகவும் யாஸீர் அரபாத் வெற்றியடைந்ததைப்போலவும் தெரியலாம். ஆனால், ஒஸ்லோ உடன்படிக்கையின் மூலம் பலஸ்தீன விடுதலைப்போராட்டம் பலவீனப்படுத்தப்பட்டதே நடந்தது. ஒஸ்லோவின் பொறியில் அரபாத் சிக்கினார். அதைப் போல ஈழப்போராட்டத்தையும் தோற்கடிப்பதற்கு நோர்வே மூலமாக அமெரிக்க - இந்தியக் கூட்டு முயற்சிக்கிறது" - என்றார் சிவராம். இது புலிகளின் தரப்பில் சமாதானப் பேச்சுகளில் தலைமை வகித்துக் கொண்டிருந்த அன்ரன் பாலசிங்கத்துக்கு நெருக்கடியை உண்டாக்கியது. புலிகளிடையே இரண்டு அபிப்பிராயங்கள் மேலெழுந்தன. ஒரு தரப்பு அன்ரன் பாலசிங்கத்தை ஆதரித்தது. மறு தரப்புத் தராகி சொல்வதையிட்டு யோசித்தது. இதனால் அவர்கள் மேலும் தராகியை நெருங்கினர். இதைப் பயன்படுத்தி தராகியும் புலிகளுக்குள் நுழையத்தொடங்கினார்.

இந்த வளர்ச்சியானது, ஒரு காலம் புலிகளின் எதிர்ப்பட்டியலில் இருந்த தராகியை இடம்மாற்றி நட்புச் சக்தியாக நெருக்கமாக்கியது. மறுவளத்தில் அரசு, தராகியின் பெயரை எதிர்ப்பட்டியலில் ஏற்றியது. வன்னியில் புதிய ஞானோதயம் பெற்று விட்டார் தராகி என்று சிங்கள விமர்சகர்கள் குறிபிடுமளவுக்கு நிலைமைகள் மாறின.

விளைவாக 28 ஏப்ரல் 2005 முன்னிரவில் கொழும்பிலே வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார் சிவராம். கொழும்பில் கொல்லப்பட்ட தராகியை வன்னியில் - கிளிநொச்சியில் புலிகள் "மாமனிதர்" என மதிப்பளித்தனர்.

ஆனால், இதெல்லாம் நீடிக்கவில்லை. அடுத்து வந்த நான்காண்டுகளுக்குள் புலிகளுமில்லை. ஒஸ்லோ உடன்படிக்கையும் இல்லை. அன்ரன் பாலசிங்கமும் இல்லை. இன்று தராகியுமில்லை என்றாகியது.

துரோகிப்பட்டியலில் இருந்தவர் தியாகியானர். நட்புப்பட்டியலில் இருந்தவர் எதிரியானர். அதுவரையுமிருந்த அரசியல் - இராணுவ ஆய்வுகள் எல்லாம் நகைப்புக்கிடமாயின. வரலாறு இப்படி எத்தனை சுவாரசியங்களைத் தன்னுடைய மடியில் ஏந்தி வைத்திருக்கிறது!

# காசு பணம் துட்டு மணி Money



தேவீஸ்வர்

கிரேக்கர்களுடனும் உரோமர்களுடனும்கடல்கடந்தவணிகத்தைப்பேணிய தமிழர்களிடையே அவர்களது நாணயப் பரிமாற்றமுறையும் அறிமுகமானது. கிரேக்கர்களும் உரோமர்களும் காசாகப் பயன்படுத்திய பெறுமதியான உலோக மணிகளையும் பளிங்குமணிகளையும் வியாபாரத்தின் ஊடாக விலையாகப் பெற்ற தமிழர்கள், அவற்றை என்ன செய்வது, எப்படிப் பயன்படுத்துவது என்று தெரியாமல், அவற்றை மாலைகளாகக் கோர்த்து தமது காதல் பெண்டுகளின் கழுத்தில் அணிவித்து அழகு பார்த்தார்கள்.

எனது ஆச்சி தனது கழுத்தில் கீச்சி என்றொரு ஆபரணத்தை அணிந்திருந்தார். கழுத்தை இறுக்கமாக சுற்றிவளைத்த மிகவும் தடிப்பமான தங்க மாலை அது. அந்த மாலையில் ஒரு சீரான இடைவெளியில் சிவப்பு, பச்சை நிறங்களில் அமைந்த பளிங்கு மணிகள் காணப்பட்டன. அந்த நகையைப் பத்திரப்படுத்துவதற்காக அவர் வைத்திருந்த நகைப்பெட்டியுடன் சேர்ந்தே காணப்பட்ட சிறுசிறு சம்புடங்களில் செப்பு, வெள்ளிக் காசுகள் சில இருந்தன. அவற்றுடன் சேர்ந்தே, அந்த நாட்களின் ஒரு சதக் குற்றிகளும் பல இருந்தன. தென்னை மரத்தின் படைப்புருவம் அழகாகப் பொறிக்கப்பட்ட கொஞ்சம் பெரிய காசு. அந்த நாட்களில் அந்தக் காசுக்கு இரண்டு தோடம்பழ இனிப்புக்கள் வாங்கலாம்.

இன்றைய நகைப்பிரியைப் பெண்கள் தமது கழுத்தில் ஆசையாசையாக அணியும் காசுமாலையைப்



பார்த்திருப்பீர்கள். வட்ட வடிவமான தங்க நாணயக் குற்றிகளை அடுக்கடுக்காகக் கோர்த்து அது ஆக்கப்பட்டிருக்கும். வேப்பம்பழ வடிவிலான தங்க மணிகளை அல்லது பளிங்குமணிகளைக் கோர்த்து ஆக்கப்பட்ட காசுமாலைகளை நீங்களோ அல்லது நானோ பார்த்திருக்க வாய்ப்பே இல்லை. ஏனென்றால் அது பல நூற்றாண்டுகளுக்கு முந்திய நகையலங்கார வடிவம்.



கீச்சி, இந்த இரண்டு வகையான காசுமாலைகளுக்குமிடையே பாலமாக அமைகின்ற, ஓர் இடைக்கால வடிவமாக இருக்கலாம் என நான் கருதுகிறேன். மிகவும் ஆரம்ப காலத்தில், வேப்பம்பழ வடிவிலான, அல்லது சிறிய நெல்லிக்கனி வடிவிலான தங்கமணிகளை அல்லது பளிங்கு மணிகளைக் கோர்த்து காசுமாலை ஆக்கப்பட்டது என்கிறார்கள் வரலாற்றாய்வாளர்கள்.

கிரேக்கர்களுடனும் உரோமர்களுடனும் கடல் கடந்த வணிகத்தைப் பேணிய தமிழர்களிடையே அவர்களது நாணயப் பரிமாற்றமுறையும் அறிமுகமானது. கிரேக்கர்களும் உரோமர்களும் காசாகப் பயன்படுத்திய பெறுமதியான உலோக மணிகளையும் பளிங்குமணிகளையும் வியாபாரத்தின் ஊடாக விலையாகப் பெற்ற தமிழர்கள், அவற்றை என்ன செய்வது, எப்படிப் பயன்படுத்துவது என்று தெரியாமல், அவற்றை மாலைகளாகக் கோர்த்து தமது காதல் பெண்டுகளின் கழுத்தில் அணிவித்து அழகு பார்த்தார்கள். அப்படித்தான் காசு மாலை தோன்றியது. காசும் தமிழர்களிடையே புழக்கத்துக்கு வந்தது.

ஆரம்பத்தில் காசு என்பது பெறுமதிமிக்க மணிகளைத் தான் குறித்தது, நாணயத்தை அல்ல! 'பொன்னும் மணியும்' என்ற சொற்றொடர் தோன்றியதற்கான மூலம் இதுதான். இந்தச் சொற்றொடரின் வாரிசாக 'காசு கழஞ்சு' என்ற செற்றொடர் தமிழ்மொழியில் பின்னர் தோன்றியது. கழஞ்சு என்பது தங்கத்தை அளவிடுவதற்கான ஓர் அளவிடை.

ஊயளா என்ற மேலைத்தேயப் பதம், காசு என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து தோன்றியதைப்போல. Money என்பதற்கும் மூலமாக 'மணி' அமைந்ததோ என்ற சந்தேகம் எனக்கு உண்டு. மொழியியல் ஆய்வாளர்களுக்கு சுவையான ஆய்வுப் பகுதி இது.

மனிதகுல வரலாற்றின் முக்கிய பாய்ச்சல்களாக நெருப்பை மனிதன் உபயோகிக்க அறிந்து கொண்டமை, சக்கரத்தை உருவாக்கியமை என்பவற்றுடன் நாணயங்களை உருவாக்கியமையும் சேர்ந்து கொள்கிறது. பண்டமாற்ற முறைமையிலிருந்து பணப்பரிமாற்ற முறைமைக்கு மனிதன் மாறியமை காரணமாக அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றின் செல்நெறித்தடங்கள் தலைகீழாகப் புரட்டிப்போடப்பட்டன. நாணயவியல் எனப்படும் நாணயங்களைப்பற்றிய ஆய்வு - தொல்லியல், வரலாறு என்பவற்றுடன் பின்னிப் பிணைந்தது. நாணயங்கள் பல வரலாற்று உண்மைக் கதைகளைச் சொல்கின்றன.

அறுபத்திமூன்று நாயன்மார்களில் ஒருவராக வரிசைப் படுத்தப்படுகின்ற கோச்செங்கட் சோழ நாயனார் பற்றிய சுவாரசியமான கதையை ஓர் உதாரணமாக உங்களுக்குச் சொல்கிறேன்.

கோச்செங்கணான் மிகவும் பெருமைக்கு உரிய சோழ ராஜா. குறிப்பிட்ட ஒரு விஷேச வேளையில் ராஜகுமாரன் பிறந்தால் உயரிய ராஜயோகங்களை அடைவான் என்று ஜோதிடர்கள் கூறியமையால், கோச்செங்கணானைக் கருவினில் சுமந்த ராஜாத்தி, அந்தச் சுப வேளை வரும்வரையில் தான் பிரசவித்து விடக்கூடாது என்பதற்காக, தலைகீழாகப் பல மணி நேரம் நின்றாளாம்! அவளது ஆசைப்படியே ராஜயோகம் தரும் சுப முகூர்த்தத்தில் குழந்தை பிறந்தாலும், பிறக்க வேண்டிய வேளை தாண்டிய பின்னரும் பல மணி நேரமாக தாயின் வயிற்றினுள் சிரசாசனம் செய்த குழந்தை, இரத்தம் தலைக் கேறியதால் சிவந்த கண்களுடன் பிறந்ததாம்! அந்தக் குழந்தை அரியணை ஏறிய பின்னர், சிவந்த கண்களையுடைய அரசன் என்ற அர்த்தத்தில் கோச்செங்கணான் எனப் பிரசித்தமானான். அவன் வெளியிட்ட காசுகளையும் தொல்லியலாளர்கள் தேடிக் கண்டடைந்திருக்கிறார்கள்.

கோச்செங்கணான் மட்டுமல்ல, அவனது காலத்துக்கு மிகவும் மூத்த சங்க காலத்தின் அரசர்களும், வேளிர்கள் எனப்படும் குறுநில மன்னர்களும் வெளியிட்ட காசுகளும் வரலாற்றாய்வாளர்களால் சேகரிக்கப்பட்டு, காலவரிசைப்படி அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன.

அந்த வரிசை கமல்ஹாசனின் கனவுக் கதாநாயகனான "மருதநாயகம்" வரை நீள்கிறது. ஆர்க்காடு நவாபுகளின் பரம்பரையைச் சேர்ந்த மருதநாயகத்தின் இயற்பெயர் கான் சாஹிப். அவர் ஐரோப்பியரை மிகவும் மூர்க்கமாக எதிர்த்தவர். முழு இந்தியாவுமே ஆங்கிலேயர்களிடம் வீழ்ந்த பின்னரும் இறுதிவரை எதிர்த்துப் போரிட்டவர்கள் இராமநாதபுரத்தின் வீரப்பரம்பரையினரான சேது மன்னர்கள். சேது மன்னர்களின் போர்த்திறத்தையிட்டு ஆங்கிலேயர் மிகவும் அஞ்சினார்கள். அதிலும் குறிப்பாக, அவர்கள் இலாவகமாக வீசிய 'வளரி' என்ற ஆயுதம் அவர்களை மரணபயம் அடைய வைத்தது. ஆஸ்திரேலியாவின் பூமராங்கை ஒத்த வளரித்தடிகள் ஒரு முனையில் கனமான உலோகக் குண்டுகளைக் கொண்டிருந்தன. ஊகிக்க முடியாத திசைகளில் இருந்து கணிக்க முடியாத வேகத்தில் பறந்து வரும் வளரித்தடிகள் தாக்கினால், மரணம் நிச்சயம் என ஆங்கிலேயர்கள் எழுதி வைத்தார்கள்.

(20ஆம் பக்கம் பார்க்க)

ஈழத்திலிருந்து சோழர்கள் கப்பமாகப் பெற்ற காசு 'ஈழக்காசு' என அழைக்கப்பட்டது. ஆறு ஈழ மன்னர்கள் இந்த இரண்டு கொள்ளையர்களுக்கும் கப்பமாக பொற்காசுகளை ஏராளமாக தாரை வார்த்தார்கள். ஏனைய காசுகளை விட ஈழக்காசுகள் தரமானவையாகவும், வடிவச் செம்மையுடனும் இருந்தன என புழகாங்கிதம் கொள்கிறார்கள் தமிழக வரலாற்றாசிரியர்கள்.

# காசு பணம் துட்டு மணி Money

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேது மன்னர்கள், ராணி மங்கம்மா, ஆற்காடு நவாபுகள், தஞ்சை நாயக்கர்கள், தமிழகத்தை ஆண்ட மராட்டியர்கள் அடங்கலான காலத்தால் மிகவும் பிந்திய அரசவம்சத்தினர் மட்டுமல்லாமல் சேர, சோழ, பாண்டிய மன்னர்களும், சங்க காலத்தின் குறுநிலமன்னர்களும் வெளியிட்ட காசுகளும் பெருமளவில் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் எண்ணிக்கை, ஏறத்தாள பதினைந்து இலட்சம் என்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள்.

இவற்றுள் ஏறத்தாள முக்கால்வாசிப் பங்கு ராஜ ராஜ சோழன், ராஜேந்திர சோழன் ஆகியோரால் வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு சோழப் பேரரசர்களும் பிற இராச்சியங்களையும், தேசங்களையும் போரிட்டு வென்று, அந்தப் பிரதேசத்தின் மக்களைக் கொன்று குவித்து, அவர்களது செல்வங்களைச் சூறையபாடி, மிகப்பெரும் செல்வந்தச் சோழப் பேரரசை நிறுவினார்கள். அரசியல் தளத்தில், கொடுங்கோன்மையாக இவை கொள்ளப்பட வேண்டியவை என்றாலும் கலாசார, பண்பாட்டுத் தளங்களில் அவர்கள் ஏற்படுத்திய பாய்ச்சல்களும், சாதனைகளும் இன்றைய நவீன அறிவுலகத்துக்கும் சவாலாக அமைபவை.

கட்டடக்கலையில் அவர்கள் ஈட்டிய சாதனைகளின் தொழில்நுட்ப ரகசியங்களை இன்றும்கூடச் சரியாகக் கணிப்பிட இயலாமல்இருக்கின்றது. அதேபோலநாணயங்களை அவர்கள் வெளியிட்ட முறைமையும், அவற்றைப் பரிவர்த்தனை செய்வதற்காக அவர்கள் கையாண்ட வழிமுறைகளும் மலைக்க வைக்கின்றன.

ஆயிரத்து நூறு ஆண்டுகளக்கும் முன்னராகவே அவர்கள் செப்புக் காசுகளுக்குத் தங்கத்திலும், வெள்ளியிலும் முலாம் பூசும் விஞ்ஞானத்தில் தேர்ச்சி பெற்ற தொழில் வினைஞர்கள் பிற்காலச் சோழ சக்கரவரத்திகளின் காலத்தில் இருந்தார்கள். இந்த மாமன்னர்களும் தூய தங்கக் காசுகளைப் புழக்கத்தில் விட்ட அதே நேரத்தில், முலாம் பூசிய காசுகளையும் மக்களிடம் புழக்கத்தில் விட்டார்கள். அந்த முலாம்கள் இன்றளவும் மங்காமல் இருப்பதுதான் மகா ஆச்சரியம். அவர்களது காலத்தில் நிலவிய மூலிகை மருத்துவம், இரசாயனம்ஆகியவற்றையே அவர்கள்முலாம் பூசுவதற்காக உபயோகித்தார்கள் என்று நம்பப்படுகின்றது.

அதன் தொடர்ச்சியாகவே, இன்றைய மூட உலகம் மூலிகைகளின் மூலமாக இரும்பைப் பொன்னாக்கலாம் என்ற ரசவாதத்தில் நம்பிக்கை கொண்டு அலைகிறது! சில இலை தளைகளையும் இரும்பையும் சேர்த்துக் கொதிக்க வைத்தால் தங்கம் கிடைக்கும் என்று நாக்கைத் தொங்க விட்டுக்கொண்டு அங்கலாய்க்கிறது!!



இரு சோழ சக்கரவர்த்திகளும் தமிழர்களிடையே புழங்குவதற்காக தமிழ் எழுத்துக்கள் பொறித்த காசுகளையும் ஏனைய பிரதேச மக்களிடையே பரிவர்த்தனை செய்வதற்காக தேவநாகரி எழுத்துக்கள் பொறித்த காசுகளையும் வார்த்தார்கள். அது மட்டுமல்ல, ஈழத்திலிருந்து தாம் கப்பமாகப் பெற்ற பொற்காசுகளையும் தமிழகத்தில் புழங்க அனுமதித்தார்கள்! அந்நியச் செலாவணி என்ற விஷயத்திலும் மிகவும் முன்னோடிகள், இந்தக் கில்லாடிச் சோழர்களே! மிக வியப்பு!!

ஈழத்திலிருந்து சோழர்கள் கப்பமாகப் பெற்ற காசு 'ஈழக்காசு' என அழைக்கப்பட்டது. ஆறு ஈழ மன்னர்கள் இந்த இரண்டு கொள்ளையர்களுக்கும் கப்பமாகப் பொற்காசுகளை ஏராளமாக தாரை வார்த்தார்கள். ஏனைய காசுகளை விட ஈழக்காசுகள் தரமானவையாகவும், வடிவச் செம்மையுடனும் இருந்தன என புழகாங்கிதம் கொள்கிறார்கள் தமிழக வரலாற்றாசிரியர்கள்.

இந்த இரண்டு சோழர்களுக்கும் முந்தைய அரசர்கள் வெளியிட்ட காசுகள் உலோகத் தகடுகளில் உருவங்களும் எழுத்துக்களும் பொறிக்கப்பட்டு வெட்டியெடுக்கப்பட்டவையாக இருந்தன. சதுரமாகவும், செவ்வகமாகவும், திருத்தமற்ற வட்ட வடிவத்திலும் அவை இருந்தன. ராஜராஜனும், ராஜேந்திரனும் அச்சுக்களை உருவாக்கி, உலோகங்களை உருக்கி வார்க்கும் முறைமையை அறிமுகம் செய்தார்கள். அவர்களது காலத்துக்குப் பின்னரே நாணயங்கள் படிப்படியாக உருவச் செம்மை அடைந்தன.

அது மட்டுமல்ல, அவர்களது காசுகள் ஒன்றைப்போல மற்றொன்று இருக்கவில்லை என்று வரலாற்றாசிரியர்கள் வியப்படைகிறார்கள். ஒவ்வொரு காசுக்கும் மிகச் சிறிய வேறுபாட்டை மட்டும் காட்டும் ஒவ்வொரு அச்சை அவர்கள் உருவாக்கப் பணித்திருக்கிறார்கள். ஒரே மாதிரியான இரண்டு காசுகள் இருந்தால் அவை போலியானவை



எனச் சுலபமாகக் கண்டுபிடிக்கலாம்! தங்க மூளை என். எம். பெரேராவும், ஒரே இரவுக்குள் காசை செல்லாமல் ஆக்கிய மோடியும் இவர்களிடம் பிச்சை புகுந்தாவது கற்றிருப்பார்களோ!

ஆரம்பத்தில் சாதாரண மக்களிடையே காசு புழக்கத்தில் இருக்கவில்லை. வர்த்தக மையங்களில் மாத்திரமே அவை புழங்கின. தொல்லியல் ஆய்வுகளில் காசுகள் கிடைக்கும் இடங்கள் அவற்றை உறுதி செய்கின்றன. ஏழை எளிய மக்கள் பண்டமாற்று முறையைத்தான் பின்பற்றினார்கள். உடல் களைக்க உழைத்தார்கள். அவற்றைக் கொடுத்து மாறினார்கள். உண்டார்கள். களித்தார்கள். ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதன் முழுமையாகத் தேவையாக இருந்தான். அவர்களிடையே ஆழ்ந்த ஆத்மார்த்தமான பிணைப்பு நிலவியது.

இடையே புகுந்தது காசு - நாணயம்!

ஓடாக உழைத்தும் காசைக் கண்ணாரக் காண முடியாத ஒரு பெரும் மக்கள் திரள் உருவானது. அதன் பின்னர், மனிதன் இதயத்தில் நாணயம் இல்லாதவனாகிப் போனான். கை நிறைய நாணயம் உள்ளவனே உலகாயுத நோக்கில் உயர்ந்தவன் ஆனான்.

ஆமாம்! இதயம் என்ற ஒன்று எல்லோருக்கும் இருக்கிறதா, என்ன?

"ஊசிமுனைக் காதுக்குள்ளே ஒட்டகங்கள் போனாலும்

காசாசை போகாதடி, கண்ணம்மா கட்டையிலும் வேகாதடி...."

- என்று தமிழ்ப்படப்பாட்டுக்காரன் தத்துவப்பாடல் பாடினான்.

காசில்லாத சமயம் ஒன்றில் வயிறு புகைந்த பாட்டுக்காரன் யோசியாமல் இப்படிப் பாடினாலும், ஊசி முனைக்குள்ளே ஏன் ஒட்டகம் போக நினைத்தது என்று நீங்களாவது யோசித்தீர்களா மக்களே!

முன்னொரு காலத்திலே துணிகளை மிருகங்களின் உரோமங்களினால் இணைத்து மூட்டித் தைத்தார்கள். தைத்த ஆடைகளை தமிழர்களுக்கு அறிமுகப்படுத்திய அரேபியர்கள் (அதாவது யவனர்கள் அல்லது சோனகர்கள்) ஒட்டகங்களின் உதவியுடன் வாழ்ந்தவர்கள். ஒட்டகத்தின் வால் உரோமங்களை தையல் நூலாக அவர்கள் பயன்படுத்தினார்கள். ஒட்டகத்தின் இந்த உரோமம்தான் ஊசிமுனைக்குள்ளே புகுந்ததேயல்லாமல் அந்தப் பென்னாம் பெரிய ஒட்டகம் அல்ல!



காசு ஆளை யோசிக்க விடாது என்பது எவ்வளவு பெரிய உண்மை!

அது, இருந்தாலும் இல்லாவிட்டாலும்!!

தொல்குடிச் சமூக அமைப்பு, நிலமானிய சமூக அமைப்பாக மாற்றமடையும்போது வலிமையான அரசுகள் தோன்றின. தொல்குடிச் சமூக அமைப்பில் காண்பதற்கு அரிதான உழைப்புச் சுரண்டல் நிலமானிய சமூகத்தில் தோன்றுகின்றது. உழைப்புச் சுரண்டலின் விளைவாக அடிமை குடிமை முறை, சாதியம் முதலியன தோன்றிய அந்தச் சமூக அமைப்பை அரசு பாதுகாக்கின்றது. அரசு காசின்மீது கட்டியெழுப்பப்படுகின்றது. அதிக அளவில் காசு உள்ளவனே அதிகம் வலிமை வாய்ந்த அரசனாகிறான். எனவே அதிக செல்வத்தைத் திரட்டும் நோக்குடன் போர்கள் ஏற்படுகின்றன.

போரில் வெற்றி பெற்ற அரசனது படைகளும், ஏவலர்களும், அலுவலர்களும் முதற்காரியமாக தோல்வியடைந்த அரசனது நாணயசாலைக்குச் சென்று அனைத்தையும் கையகப்படுத்துவார்கள். கொள்ளையாகக் கிடைத்த நாணயங்களை உருக்கி அழித்து, தமது சின்னத்தைப் பொறித்து மக்களிடம் மீண்டும் புழக்கத்தில் விடுவார்கள்.

எனவே போரின் பின்னர் கண்டிப்பாக புதிய காசுகள் வெளியிடப்படும். அதிக அளவில் பிற அரசுகளை அழித்த சோழ சக்கரவர்த்திகள் அதிக அளவில் நேர்த்தியான வடிவத்தில் காசுகளை வெளியிட்டதன் பின்னணி இதுதான். கப்பம் கட்டுவதாக ஏற்பட்ட ஒப்பந்தங்களின் பிரகாரமும், இரு அரசுகளிடையே ஏற்பட்ட திருமணம், தோழமை முதலிய நல்லுறவுகளின் அடையாளமாகவும் காசுகள் வெளியிடப்பட்ட வரலாறும் உண்டு.

நாணயசாலை, பண்டாரகம் எனவும் பரவலாக அழைக்கப்பட்டது. பண்டாரகத்தைப் பரிபாலித்தவர்கள் பண்டாரங்கள் என அழைக்கப்பட்டார்கள். பண்டாரகங்கள் பெரும்பாலும் கோயில்களை அண்டி அல்லது கோயில்களில் உருவாக்கப்பட்டன. பண்டாரங்களும் கோயில் அதிகாரிகள் போல ஆனார்கள். பண்டாரகங்கள் கோயில்களில் இருந்த காரணத்தினால், படையெடுப்புக்களின்போது பண்டாரங்களைச் சூறையாடியதன் உப விளைவாக கோயில்களும் பெருமளவில் அழிக்கப்பட்டன.

மன்னராட்சிக் காலத்தில் பண்டாரம் என்பது மிக மிகப் பெரும் பதவி! இன்றைய வங்கி ஆளுநரைப் போல என்று நாம் வைத்துக் கொள்ளலாம்!!

கால ஓட்டத்தில் மன்னராட்சி ஒழிந்து, பற்பல சமூக அமைப்புக்கள் தோன்றி மறைந்ததன் பயனாக எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாக இன்று ஆனோம். காசும் பல்வேறு வடிவங்களை எடுத்து ATM Card ஆகவும் Bitcoin ஆகவும் இன்று மாறிவிட்டது!

மன்னராட்சிக் காலத்தின் அதிகாரம் மிக்க பண்டாரங்கள், இன்று கோயில்களில் தளிசை வடித்து சில காசுகளைப் பார்க்கும் சமையல்காரர்களாக நலிவடைந்து விட்டார்கள்.

காசா... லேசா!

காசாலே...சா!!






MADRASBROTHERS.COM.AU
FOLLOW THE BROS. @MADRASBROTHERS

மதராஸ் பீரோஸ்.
MADRAS BROS.
Authentic: TAMIL EATERY & BAR

No. 129, SMITH STREET,
FITZROY 3065.
PH. +61 3 9416 2767

# Blinds Screens Security Doors
*Factory Direct*



Free Measure & Quotes - Delivery and Install - Servicing all Suburbans

**OUR SERVICES :**
- PLANTATION SHUTTERS
- TIMBER BLINDS
- SCREEN BLINDS
- VERTICAL BLINDS
- ROLLER BLINDS
- ROMAN BLINDS
- SECURITY DOORS ( All Types)
- FLY SCREENS
- WARDROBE DOORS
- CANVAS AWNINGS
- SPLASH BACKS
- MIRRORS

**Contact - Raja (Roger) Mob: 0411 734 484 Tel: 93 330 770**
Email: galalxyoz@bigpond.com
**GalaxyOZ (PVT) Ltd.** Factory 31/283 Rex Road Campbellfield Victoria 3061





# தேள் கடித்த வலி கொடுக்கும் தேன் வழங்கும் கம்பனிகள்

## ஆஸ்திரேலிய சந்தையில் இன்னொரு புயல்



Dr. கே. கணேசன்
மெல்பேர்ன்

தேன் கலப்படமும் போலித் தேனும் இலங்கையரான எமக்குப் புதிதல்ல. ஆனால் அவற்றைக் கண்டு பிடிப்பது என்பது லேசுப்பட்ட காரியம் இல்லை. நான் கிழக்கிலங்கையில் பணியாற்றிய போது இப்படியான பல சம்பவங்களைச் சந்தித்திருக்கின்றேன். ஒரு பயணத்தில் என்னைச் சந்தித்த ஒரு தேன் வியாபாரி பின்வருமாறு சொன்னார்.

"நாம் காட்டுக்குள் சென்று பல நாட்கள் கஷ்டப்பட்டு, பூச்சிக்கடி, பாம்புக்கடி, யானை, புலிகளின்விரட்டல்கள், மிரட்டல்கள்எல்லாவற்றுக்கும் முகம்கொடுத்து ஆறு போத்தல் தேனைக்கொண்டுவந்து, காத்தான்குடி கடைக்காரரிடம் நீட்டினால், அவர் நம்மை மேலும் கீழும் பார்த்துவிட்டு, 'எந்த ஊர் தேன், உனக்கும் தேனுக்கும் எந்தளவு தொடர்பு, உன் அப்பன் என்ன செய்யுறாவு? உண்ட ஆத்தாள் என்ன செய்யுறாவு' - என ஒரு பெரிய இண்டேர்வியுவே நடாத்துவார். நடத்தி விட்டு, நமது தேன் போத்தலை வேண்டா வெறுப்பாக கையில் எடுத்து பரிசோதிப்பார். ஒரு கிளாசுக்குள் தண்ணீர் எடுத்து அதற்குள் ஒரு துளி தேனை விடுவார், அந்தோ பரிதாபம்! தேன் தண்ணீருக்குள் போகும்போதே கரைந்து, சுக்கு நூறாகி, பஸ்பமாகி விடும் நம்மை பார்த்து ஒரு அதட்டல் சிரிப்பு சிரிப்பார். 'தம்பி இது தேனே அல்ல. இது நீ வீட்டில் காய்ச்சிய சீனி பாணி' - என்பார்.

"மனம் உடைந்து சுக்கு நூறாகி விடும். வாகரை காட்டுக்குள் போய், படாத பாடு பட்டு நான் கொண்டு வந்த தேன் போலியா? நமக்கு நிருபிப்பதற்கு எந்த ஆதாரமும் இருக்காது. அவரது காலில் விழுந்து 200 ரூபாய்க்கோ 300 ரூபாய்க்கோ அதை விற்று விட்டு வர வேண்டி இருக்கும்.

"இதுபோல தேனை பேப்பரில பூசி எரிப்பது, தேன் போத்தலை தராசில் நிறுப்பது போன்ற பல சோதனைகளை எனது - 100 வீதம் - உண்மையான தேன் சித்தியடைய தவறியிருக்கின்றது. இந்த போலித் தேனைக் கண்டுபிடிக்கிறதுக்கு நீங்கள் ஒரு வழி செய்யோணும் ஷேர்" - என்று அவர் தனது கதையை முடித்தார்.

இந்த சம்பாஷணையை மனதில் வைத்து இதை ஒரு ஆராய்ச்சித்தலைப்பாக ஒரு மாணவனுக்கு கொடுத்தேன். இந்த ஆராய்ச்சி முடிவில் பல விடயங்களை நாம் தெரிந்து கொண்டோம்.

காட்டில் விதம் விதமான மரங்கள் இருக்கும், ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு வகையான பூக்களைத் தரும், ஒவ்வொரு வகையான பூவும், ஒவ்வொரு ரசனையாக இருக்கும், உதாரணமாக காட்டு மல்லிகையில் இருந்து தேனீக்கள் தேன் எடுக்குமானால், அந்த தேன் கூட்டில் காட்டு மல்லிகை தேன்தான் இருக்கும். இதில் கொஞ்சம் கசப்பு சாயல் இருக்கும். கறுப்பு நிறமாக காட்சி தரும். இவ்வாறே ஒவ்வொரு கூட்டிலும் ஒவ்வொரு வகையான தேன் இருக்கும். அது விதம் விதமான சுவையாகவும் மணமாகவும் இருக்கும்.

வெவ்வேறு வகையான தேன் வகைகள் அவற்றின் பௌதிக, இரசாயன இயல்புகளுக்கேற்ப வேறுபடும். அவற்றின் அடர்த்தி, நிறம், ஒளிமுறிவுச்சுட்டெண், ஒளிமுனைவாக்கத்தன்மை போன்றவற்றைப் பரிசோதித்ததில், சீனிப்பாணி கலந்த தேனை எம்மால் ஓரளவு அடையாளம் காண முடிந்தது.

இதை ஏன் சொல்ல வருகின்றேன் என்றால், தேனை இலகுவாக நுகர்வோரால் கண்டுபிடிக்க முடியாது. வியாபாரிகளுக்கு வேண்டியவாறு தீயில் எரியாமல், நீருக்குள் கரையாமல், மூன்று கிலோ நிறையுடன், வெள்ளை சீனியைக் கொண்டு தேன் காய்ச்ச கூடிய விற்பன்னர்கள் இலங்கையிலேயே உள்ளனர்.

தற்போது ஆஸ்திரேலியாவில் தேன் குறித்து நடைபெற்றுவரும் வியாபார சர்ச்சைகளும் இதனை மையமாகக்கொண்டதுதான்.

ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய தேன் விற்பனை செய்யும் நிறுவனமும் பல சூப்பர் மார்க்கெட்களும் போலித் தேன் விற்பனை செய்வதாக இப்பொழுது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியா சூப்பர்மார்க்கெட்களில் விற்கப்படும் தேன்களில் அரைவாசிக்கு மேற்பட்டவை கலப்படம் செய்யப்பட்டவை என்று சர்வதேச முன்னணி விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த கலப்படத்தேன்கள் அவுஸ்திரேலிய தேனுடன்கலந்துமலிவாக விற்கப்படும்வகைகள் ஆகும்.

ஆஸ்திரேலிய பங்குச் சந்தையில் பரிவர்த்தனை செய்யும் ஒரு பெரிய நிறுவனமான கபிளானோஸ்அலோரி(Capilano'sAllowrie) இவற்றுள் முக்கியமானதாகும். இந்நிறுவனமானது 100 வீதம் தூய்மையான தேன் என்று விற்கும் உள்ளூர் - இறக்குமதி கலவை (blend) தேன்களே இப்பொழுது கலப்படமானவை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால், காப்பிலானோ நிறுவனம் இதனை மறுத்துள்ளதுடன், தமது தேனைக் கலப்படம் என்று அறிவிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட அணு காந்த அதிர்வு - Nuclear Magnetic Resonance (NMR) சோதனையானது தவறானது என்று விமர்சித்து இந்தப்பரிசோதனை முறையானது ஆஸ்திரேலியாவின் உத்தியோகபூர்வ சோதனை முறையில் இருந்து வேறுபட்டது என்று தெரிவித்துள்ளது.

அணு காந்த அதிர்வு சோதனைதான் தேனில் கலப்படத்தைக் கண்டறிவதற்கு சிறந்த முறை என்று சர்வதேச தேனீ வளர்ப்போர் சங்க தலைவர் பில் மக்காப்பே தெரிவித்துள்ளார். நுகர்வோர் தாம் கொடுக்கும் பணத்திற்கு தகுதியானவற்றை பெறவில்லை என்றும் கலப்படம் செய்யப்பட்டதைத் தேன் என்று சொல்ல முடியாது என்றும் அவர் மேலும் சொல்லியுள்ளார்.

தேனைப்போன்ற சுவையுடைய ஒரு சீனிப்பாணி போன்ற ஒன்று இக்கலப்படத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது மாத்திரமல்லாமல் பல சோதனைகளில் இதை கண்டு பிடிக்கமுடிவதில்லை என்றும் அவர் கூறுகிறார்.

தற்போது பிரச்சினை என்னவென்றால், உள்ளூர் மற்றும் சர்வதேச தரக்காட்டுப்பாட்டாளர்களும் அரசாங்கங்களும் சம்பத்தப்பட்ட தேன் சோதனை முறைமையில் இந்த NMR சோதனைமுடிவானது ஒருபுயலைஉருவாக்கியுள்ளது.

ஒரு முற்காப்பு நடவடிக்கையாக "அல்டி சூப்பர்மார்க்கெட்" இந்தத் தயாரிப்புக்களை தனது கடைகளில் இருந்து அகற்றிவிட்டது.

இந்த NMR சோதனை முடிவை மேலதிக விசாரணைக்காக இண்டர்போலுக்கு தாம் அனுப்ப இருப்பதாக சர்வதேச தேனீ வளர்ப்போர் சங்கத் தலைவர் பில் மக்காப்பே மேலும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவைச்சேர்ந்த ரொபேர்ட் கொஸ்தா என்பவர் ஜெர்மனியின் ஒரு பிரபல சோதனைச்சாலைக்கு இரண்டு தேன் மாதிரிகளை கொடுத்து ஒரு மாதிரியை NMR முறையிலும் மற்றையதை ஆஸ்திரேலியாவின் உத்தியோகபூர்வ C4 சீனி சோதனை முறையிலும் சோதனை செய்து முடிவை தருமாறு கேட்டு அவற்றை ஆஸ்திரேலியா தேனீ வளப்பாளர்களின் சங்கத்திற்கு கொடுத்துள்ளார். கொஸ்தா சார்பாக ஒரு சட்ட நிறுவனம் 28 மாதிரிகளை அவுஸ்திரேலியாவின் பிரபல சூப்பர்மார்க்கெட்களான Coles, Woolworths, ALDI மற்றும் IGA ஆகியவற்றில் இருந்து எடுத்து இப்பரிசோதனைக்கு அனுப்பியது.

சோதனைச்சாலையில், IGA வின் Black and Gold ஆறு மாதிரிகளில் நான்கும், ALDI யின் Bramwell ஆறு மாதிரிகளில் இரண்டும், Capilano வின் Allowrie எட்டு மாதிரிகளில் ஆறும் NMR சோதனையில் கலப்படம் செய்யப்பட்டுள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அதாவது, NMR சோதனைகளின்படி 28 தேன் மாதிரிகளில், 12 தேன் மாதிரிகள் 100 வீத தேன் அல்ல என்று முடிவாகியுள்ளன.

ஆனால் ஆஸ்திரேலியாவின் உத்தியோகபூர்வ C4 சோதனையில் 28 மாதிரிகளும் சித்தியடைந்துள்ளன.

Capilano விற்கு இந்த சோதனை முடிவுகள் அனுப்பப்பட்டபோது, தமது தேன் வகைகள் 100 வீத தேன் அல்ல என்பதை மிக வன்மையாக மறுத்ததுடன், தேன் கலப்படத்தை அறிவதற்கு NMR சோதனை மிகச்சிறந்த சோதனையல்ல என்றும் மறுத்துரைத்துள்ளது. மேலும் அவஸ்திரேலியா மற்றும் சர்வதேச தரக்கட்டுப்பாட்டாளர்கள் இந்த NMR முறையை பாவிப்பதில்லை என்று கூறியுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட தேனைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தமது தயாரிப்புக்கள் கலப்படமற்றவை என்பதில் தமக்கு 100 வீதம் நம்பிக்கையுள்ளது என்றும் NMR சோதனை முறையில் சில பலவீனங்கள் உள்ளதால், இந்த முடிவுகள் தமக்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லை என்றும் Capilano கூறியுள்ளது.

இந்தச் சோதனை முடிவுகள் தேனின் நம்பகத்தன்மை சம்பந்தமாக சந்தேகங்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தி சாதாரண மக்களையும் நுகர்வோரையும் தவறாக வழிநடத்தக்கூடும் என்று Capillano மேலும் தெரிவித்துள்ளது.

போலித்தேன் காலம் காலமாக இருந்து வந்தாலும், சமீப காலமாக மிகவும் அதி நவீன முறையில் கலப்படங்களை செய்வதால் இவற்றைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாக இருப்பதாக NMR சோதனைகளை செய்த ஜேர்மனிய சோதனைச்சாலையான QSI இன் முகாமையாளரான Gudrun Beckh கூறியுள்ளார்.

QSI ஆனது பல முறைகளில் தேன் கலப்படங்களை கண்டுபிடிப்பதற்கான சோதனைகளை செய்தாலும், NMR சோதனைதான் எல்லாவற்றிலும் நம்பகத்தன்மையானது என்று கூறுகின்றார்.

பல நாடுகளில் இருந்து பெறப்பட்ட கலவையால் உருவாக்கப்படும் (blended) தேன்கள் NMR சோதனை மூலம் நாளாந்தம் சோதனை செய்யப்படுகின்றன. இச்சோதனை மூலம் ஒரு தேன் மாதிரியின் தாவர மூலம் மாத்திரமல்லாமல் அது எந்த நாட்டில் இருந்து வந்துள்ளது என்றும் கண்டுபிடிக்கலாம்.

இந்த தேன் மாதிரிகள் மீதான NMR சோதனையின் மூலம், இந்த தேன் கலவையில் உள்ள சீன நாட்டு கலவைப்பகுதியே கலப்படமாகியுள்ளது என்றும் ஆஸ்திரேலியா நாட்டு தேன் பகுதி கலப்படமாகவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

காப்பிலானோவின் விமர்சனங்கள் ஒருபுறமிருக்க, தற்போது சர்வதேச வல்லுனர்கள், கல்வியியலாளர்கள், தனியார் நிறுவனங்கள் மத்தியில் NMR மூலம் போலித் தேனை கண்டுபிடிப்பதற்கான சோதனைக்கு ஆதரவு அலை அதிகரித்துவருகின்றது.

அபிமாண்டியா (Apimondia) என்ற சர்வதேச தேன் சம்பந்தமான அமைப்பானது எதிர்காலத்தில் சர்வதேச தேன் போட்டிகளுக்கு NMR சோதனையை ஒரு போட்டி விதியாக அமுல்படுத்தப்போவதாக அறிவித்துள்ளது. மிகப்பழமையான C4 சோதனைகளை கைவிட்டு மிக நம்பகமான NMR முறையை கடைப்பிடிக்குமாறு ஆஸ்திரேலியா விவசாய அமைச்சை ஆஸ்திரேலியா தேனீ தொழில் சபை (AHBIC) கடந்த மே மாதமளவில் கேட்டுள்ளதாக இவர்களுக்கு மத்தியில் பரிமாறப்பட்டதாக கூறப்படும் ஈமெயில் மூலம் அறியவந்துள்ளது.

தேன்தொழிலின் நம்பகத்தன்மை பாதிக்கப்பட்டுவிடும் என்பதற்காக தேன் கலப்படம் பற்றி உலகம் முழுவதும் உள்ள தேனீ வளர்ப்பாளர்கள் மௌனம் சாதிக்கின்றனர் என்று பீச்வோர்த் நிறுவனத்தின் தலைவர் கோல்டுவோர்த்தி கூறுகின்றார்.

மொத்தத்தில் நுகர்வோரைப்பொறுத்தளவில் தரமான பொருளொன்றை பெற்றுக்கொள்வதற்கா நல்ல விடயமொன்று நடந்திருக்கின்றது என்றால் மிகையாகாது. ■

**ஆஸ்திரேலிய கதைக்களத்தோடு வெளியாகும் எதிரொலியின் இம்முறை சிறுகதையை எழுதியிருப்பவர் சொலமன் யோகநாதன். யாழ். பல்லைக்கழகப் பட்டதாரி. முதலில் மெல்பேர்னுக்கு குடிபெயர்ந்து வந்தவர் தற்போது கன்பராவில் வசிக்கிறார். சிறுகதைகளைவிட நாடகங்களில் அதிகம் நாட்டமுள்ளவர். பல்லைக்கழக காலங்களிலேயே "மண் சுமந்த மேனியர்" போன்ற நாடகங்களில் தீவிரமாகச் செயற்பட்டவர். இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர். நிறைந்த வாசிப்பு பழக்கம் உடையவர். சிற்றிதழ்களில் தனது ஆக்கங்களை கொண்டுவருவதில் இப்போதெல்லாம் அதிக ஈடுபாடில்லாமல், நாடகங்கள், தமிழ் பாடசாலை பணிகள் ஆகியவற்றில் தன்னை அதிகம் ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார். அவரை பேருவகையுடன் எதிரொலியின் சிறுகதைப்பகுதிக்கு அழைத்து வந்ததில் நிறைவடைகிறோம். அவரது 'தனியன்" என்ற இந்த சிறுகதை ஆஸ்திரேலியாவை தாண்டியும் பெரியளவில் பேசப்படும் என்று திடமாக நம்புகிறோம். செறிவான கதை, அழகான உரைநடை, தெளிவான கருத்து என்று சிறுகதையின் அத்தனை நுணுக்கங்களையும் லாவகமாக தனியனில் கொண்டுவந்திருக்கிறார் யோகநாதன். படித்துப்பாருங்கள்.**





# தனியன்

ஹியூம் நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து செல்லும் பார்ட்டன் நெடுஞ்சாலையில், யாஸ் நகரிலிருந்து ஒரு இருபது கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள மறம்பேற்மன் பிரதேசம் திராட்சைப் பழங்களுக்குப் பெயர் போனது. பிரகாசமான வெயிலெறிக்கும் அதேநேரம் அளவான வெப்ப நிலை கொண்ட இச்சமதரை நிலத்தில் திராட்சைப்பழ ரசம் தயாரிக்கும் பல வைனரிகள் உள்ளன.

அங்கே எழுபது ஆண்டுகளாகப் பரம்பரை பரம்பரையாக மாக்கினஸ் குடும்பத்திற்கு சொந்தமான ஒரு திராட்சைத் தோட்டம் இருந்தது. இக்கதையின் முக்கிய பாத்திரமான பொப் மாக்கினஸின் தாத்தா ஜேம்ஸ் மாக்கினேஸ"க்கு வயதாகி விட, தோட்டம் அவரது ஒரே பிள்ளையான பொப்பின் தகப்பன் டேவிட் மாக்கினஸ் கைக்கு வந்தது. தோட்டத்தில் வேலை செய்ய விரும்பாத சோம்பேறியான டேவிட், தோட்டத்தை குத்தகைக்கு விட்டு விட்டு, பழ ரசம் தயாரிக்கும் வைனரியை மட்டும் நடத்திக்கொண்டிருந்தார். இது தாத்தாவுக்கு பெருங் கோபம். பொப் அப்போது சிறுவன்.

'சின்னப் பயலே, நீ டாடி செய்த பிழையை விட்டு விடாதே. நீயே தோட்டத்தை முழுவதுமாய் எடுத்துக் கொள். ஆதை கண்ட பின்னரே நான் கண்களை மூடுவேன்" - என்று தாத்தா சொன்னதை நிறைவேற்றினான் பொப். டேவிட் மாக்கினஸ் அறுபதாவது வயதில் புற்று நோயால் இறந்தார்.

பொப்பின் சகோதரி ஆன் இங்கிலாந்து சென்று குடியறிவிட்டதால் அவளது பங்கையும் விலைக்கு வாங்கி முழு தோட்டத்துக்கும் சொந்தக்காரனாகிய பொப் ரைசலிங், சிராஸ் மற்றும் சவிக்னோன் பழ மரங்களால் அவனது 25 ஏக்கர் காணியையும் நிறைத்தான். பல்லாயிரம் பச்சைக்குடைகளை நிலத்தில் நட்டு வைத்திருந்தாற் போல அவை நீண்டு பரந்து பார்வையின் எல்லை வரை தெரிந்தன.

சிறு வயது முதல் தோட்ட வேலைகளிலேயே அவன் முழுப்பகலும் கழியும். கோடையில் வேர்வை தராத, அனல் காற்றூதும் வெயிலிலும், பனியின் இதமான கம்பளிப் போர்வை போன்ற பிரகாசமான வெயிலிலும் பழக்கப்பட்ட அவன் தோல் மஞ்சளும், சிவப்பும் கலந்து தெரியும் ஒரு பீச் பழத்தைப் போலிருக்கும்.

பொப் முதலாம் திருமணத்தில் மனைவி ஜெனியுடன் ஏற்பட்ட விரிசலினால் விவாகரத்துப் பெற்று அவளைப் பிரிந்து விட்டான். அதற்குப் பிறகு லாராவைச் சந்தித்தது பன்னிரண்டு வருடங்கள் கழித்து. இந்த இடைவெளியில் ஒரு சில பெண்களுடன் தற்காலிகப் பழக்கங்கள் இருந்தது என்றாலும் அவை நிலைக்கவில்லை.

லாராவின் தகப்பன் ஆதர், ஹண்டர் பள்ளத்தாக்கு வைனரியொன்றின் சொந்தக்காரர்.

தேசிய ரீதியில் சிறந்த வைன் தெரிவு செய்யும் நிகழ்வொன்றுக்காக அடிலெய்ட் சென்றிருந்தபோதே தந்தையின் வைனரியின் பிரதிநிதியாக வந்திருந்த லாராவை முதன் முதலாக பொப் சந்தித்தான். அந்தக் கடற்கரை விடுதியில் அவர்களின் முதல் சந்திப்பு நிகழ்ந்தது.

விபத்தொன்றில் கணவனைப் பிரிந்து மகளுடன் ஹண்டர் பள்ளத்தாக்கில் தந்தையின் வீட்டில் வசித்து வரும் லாராவின் கதையைக் கேட்டுக்கொண்டே அவளின் ஸிராஸ் திராட்சை போன்ற சாம்பலும், கரு நீலமுமான விழிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். பொப். அன்று அவர்களின் நெருக்கம் தீயாய் கனன்றது.

பொப்பின் அழைப்பை ஏற்று ஒரு ஏப்ரல் மாதத்தில் மகள் செல்சியையும் கூட்டிக் கொண்டு மாக்கினஸ் குடும்பத்தின் திராட்சைத் தோட்டத்தை பார்க்க வந்தாள் லாரா. பாதாள அறைகளில் சேமிக்கப்பட்டிருக்கும் வைன் சாம்பிள்களை ருசி பார்க்க வருடாந்தம் வரும் ஆட்கள் கூட்டத்துடன் லாராவும், செல்சியும் இணைந்து கொண்டனர். செல்லர் என்றழைக்கப்படும் நிலவறைகளில் ஓக் மரத்தாலான பீப்பாக்களில் வைன் நிரப்பி சரித்து அடுக்கி வைக்கப்பட்டிருப்பதை சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கையில் அடிக்கடி கையைப் பற்றியிருந்த தாயிடமிருந்து விடுவித்து கொண்டு முன்னே ஓடினாள் செல்சி.

செல்சி எதையோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு கணத்தில் வைன் பீப்பாக்களின் மறைவிடமொன்றை நோக்கி லாராவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் குளிர்நிறைந்த செல்லரில் விறைத்துப் போயிருந்த அவள் உதடுகளை தன் முத்தத்தினால் சூடாக்கினான் பொப்.

'மம்மீ" என்று கத்தியபடி லாராவைத் தேடி ஓடி வந்த செல்சி அணைத்தபடி முத்தமிட்டுக் கொண்டிருந்த தாயையும், பொப்பையும் கண்டு வெறுப்புடன் முகத்தை திருப்பிக் கொண்டு ஓடினாள்.

'பாஸ்ரட்"

அபோது அவளுக்கு வயது எட்டு.

மாசி மாத முற்பகுதியில் பழ மரங்கள் பயிரிடப்படாமல் பசும் புல் வளர்ந்து கிடந்த அவனது தோட்டத்திலுள்ள புற்தரையிலேயே காலை பதினொரு மணிக்கு அவர்களின் திருமணம் நடந்தது. அந்தப் பச்சைப் புல் மணம் வீசிய புற்தரையில் நீண்ட வெள்ளைச் சீலை விரித்த மேசையொன்றும் பிளாஸ்டிக் கதிரைகளும் அடுக்கப்பட்டிருந்தன.

தை, மாசி மாதங்களில் பழங்கள் பழுக்க, காற்றில் அவற்றின் வாசனை பிடித்து வரும் பறவைகள் அவற்றை உண்ணாமல் தடுக்க, பெரிய வெள்ளை வலைகளைப் போட்டு திராட்சை மரங்களை மூடி வைத்திருந்தார்கள்.

முகத்தை மூடியிருந்த வெண்ணிற வலையுடன் பக்கத்தில் மணப்பெண் கோலத்தில் அமர்ந்திருந்த லாராவிடம்,

"அங்கே பார், உன்னைப் போலவே, அங்கே திராட்சை மரங்களும் தம் தலையை மூடி வெள்ளை நெற் அணிந்திருக்கின்றன" - என்று கிண்டலாகச் சொன்னான் பொப்.

"நானே மெய்யான திராட்சைச்செடி நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்." - என்ற இயேசுநாதரின் அவ்விடத்துக்குப் பொருத்தமான உவமை ஒன்றை சொல்லி மணவாழ்வில் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதன் தேவையை அவர்களின் விவாகத்தை ஜெபித்து ஆசீர்வதிக்க வந்திருந்த அங்கி லிக்கன் குருவானவர் தனது திருமண செய்தியில் சொல்லிக் கொண்டிருந்தார்.

லாராவுக்குக் பக்கத்திலேயே அவளுடன் ஒட்டிக் கொண்டு அமர்ந்திருந்த செல்சிக்கு அப்போது வயது ஒன்பது. எவருக்கும் தெரியாமல் கொயின் பேர்சில் வைத்திருக்கும் இறந்து போன தனது தகப்பனின் புகைப்படத்தை எடுத்து பார்ப்பதும் வைப்பதுமாக இருந்த அவளுக்கு அங்கு நடப்பவை எல்லாமே வெறுப்பைத் தந்தன.

லாராவுக்கும், பொப்புக்கும் இடையில் நடைபெற்றது இரண்டாம் திருமணம் என்றாலும் நிறைய பேர் திருமணத்துக்கு வந்திருந்திருந்தனர். பாப் திராட்சை ரச வியாபாரத்தில் அதிகம் அறியப்பட்ட ஒருவன் என்பதால் வர்த்தகத் தொடர்பால் அறிந்தவர்கள் அநேகம்.

றிசெப்சன் முடித்துக் காரில் மூவரும் வீட்டுக்கு வந்த இறங்கியவுடனேயே -

'இவர்தான் இனி உன் டாடி"

'நோ இவர் இல்லை, இல்லை" - வெறுப்பை உமிழ்ந்து கத்திக் கொண்டே ஓடிய செல்சியைப் பார்த்து திகைத்து நின்றனர் பொப்பும் லாராவும்.

காலம் எந்தக் காயத்தையும் ஆற்றிவிடும் என்று நம்பினாள் லாரா. ஆனால் அது நடக்கவேயில்லை.

வேலையாட்கள் இருந்தபோதும் தோட்டத்தையும், வைனரியையும் ஒரே நேரத்தில் நிர்வகிப்பது மிகக்கடினமான வேலை. வருடம் முழுவதும் கண்ணில் எண்ணெயை ஊற்றிக்கொண்டு கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும். லாரா வந்த பிறகு அவன் வேலைகளில் கொஞ்சம் அவளும் எடுத்துக் கொண்டாள். லாரா செல்லரையும், வைன் விற்பனையையும் பார்த்துக் கொள்ள திராட்சை தோட்டத்தையும் அதன் பராமரிப்பு வேலைகளின் பொப் பார்த்துக் கொண்டான்.

பொப்புக்கு யார் எதைக் கேட்டாலும் கொடுத்துவிடும் தாராள மனம். திராட்சை அறுவடையின்போது மரங்களை உலுப்பி பழங்களை விழுத்த பயன்படுத்தும் பெலெங்க் இயந்திரங்களைக்கூட யாரும் கேட்டால் லாராவுக்குப் பிடிக்காது என்று தெரிந்தும்கூட இரவல் கொடுத்து விடுவான்.

ஓடும்போதே உயரமான அதன் இரு பக்க சில்லுகளுக்கிடையே உள்ள இடைவெளியினூடு மரங்களை உள்ளே வர விட்டு உலுப்பி பழங்களை உதிர்த்து செல்லும் இந்த இயந்திரம், ஒரு பெட்டைக் கோழியை மிதித்து விட்டு அடுத்த கோழியை நோக்கிச் செல்லும் சேவலைப் போலிருக்கும். ஒரு பெல்ட்டினூடாக பெரிய தொட்டியொன்றினுள் பழங்களை சேர்க்கும் இந்த பெலென்ங்கை பிறகு பழச்சாறு பிழிவதற்காக வைனரிக்குக் ஓட்டிக் கொண்டு போவான் பொப்.

பழங்களின் வெப்பநிலை தாழ்வாக இருப்பதற்கு வசதியாக வெயில் தணிந்த மாலையில் அல்லது இரவில் அறுவடை நடக்கும். வைனரியிலேயே பழங்களுடன் கலந்து கிடக்கும் இலை, கிளைகள் மற்றும் பூச்சி, பல்லிகளை அகற்றி வைட்டு பழ ரசம் பிழிந்தெடுக்கும் இயந்திரங்கள் ஓடும். பழங்கள் அங்கு போவது முதல் பழ ரசத்தை போத்தலில் அடைப்பது வரையான வேலைகளுக்கென பலர் வைனரியில் வேலை செய்தார்கள்.

பொப்புக்கு பதினான்கு வயதிலிருந்தே புகை பிடிக்கும் பழக்கம் இருந்தது. நாற்பத்தைந்து வயதில் அவனுக்கு இரத்தக்குழாயில் ஏற்பட்ட வீக்கம் ஒன்றை அடுத்து புகைப்பதை நிறுத்தும்படி குடும்ப வைத்தியர் கண்டிப்பாகச் சொன்னார். கொஞ்ச நாள் நிறுத்திப் பார்த்து விட்டு பிறகு மெதுவாக திருட்டுத்தனமாக லாராவுக்குத் தெரியாமல் மீண்டும் புகைக்க ஆரம்பித்தான். லாராவை விடவும் சிகரட் எப்போதும் அவனுக்கு ஒரு நீண்ட கால நெருக்கமான உறவாக இருந்தது.

வின்டர் வந்தால் பகலில் குளிர்ந்து விறைத்திருக்கும் வீட்டை மாலையில் சூடாக்கி வைத்திருக்கும் 'சென்ட்ரல் ஹீட்டிங்' வீட்டில் இருந்தது. அது இருந்து என்ன? அதைப் போடுவதுதான் பிரச்சினை. லாராக்கு ஹீட்டர் போட்டால் அலர்ஜி.

உடனே அதை நிறுத்தி விட்டுத்தான் மறு வேலை பார்ப்பாள். பகலிலும் குளிராக இருக்கும். செல்லர்களில் நின்று அதனால் அவள் குளிருக்குப் பழகி விட்டிருந்தாள்.

பொப் அவளுக்கு எதிர் மாறு. அவன் வேலை செய்வது அனல் தகிக்கும் வெயிலில். வீட்டுக்கு வந்தால் குளிர் தாங்க முடியாது. பொப் சென்ட்ரல் ஹீட்டரை போடுவதும் பிறகு லாரா நிறுத்துவதுமாக இருவருக்கும் பிறகு குளிர் யுத்தம் ஆரம்பிக்கும்.

**(24ஆம் பக்கம் பார்க்க)**

# தனியன்

(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்று இரவு இருவரும் குடும்ப அறையிலிருந்து டிவியை கண் வெட்டாது பார்த்துக் கொண்டிருந்த போதுதான் அது ஆரம்பித்தது.

"என்ன குளிர்? தலையெல்லாம் விறைத்துவிட்டது."

"குளிர்த் தொப்பி ஒன்றைப் போட்டுக் கொண்டால் என்ன. மொட்டைத்தலைக்கு குளிர் வலு சுகமாகப் பிடிக்கும்தானே"

மொட்டைத் தலை என்று சொன்னாலே பொப்புக்குப் பிரசர் ஏறிவிடும். இப்படி வேறு எவரும் அவனைப் பகிடி பண்ணியது கிடையாது. இள வயதில் அவனுக்கு நல்ல பொன்னிறத் தலை மயிர் இருந்தது. முப்பத்தைந்து வயது வர, அவன் தலை நடுவில் கிறவல் ரோட்டு போட்டது மாதிரி இரு புறமும் மட்டும் கொஞ்ச மயிர் மரங்கள் நிற்பது போலாகிவிட்டது.

"தலையாலை மட்டுமா குளிர் பிடிக்குது? கண், காது, மூக்கு, வாய் என்று எல்லாத்தையும் மூடிக் கட்ட முடியுமா என்ன"

"மூடிக் கட்டு பொப். இல்லாவிட்டால் பில்லைக் கட்டு. சென்ட்ரல் ஹீட்டரை போட்டால் தொகையாக காஸ் பில் வரும்"

"யாருக்கு காசைச் சேர்த்து வைக்கிறாய்.? உள்ளது உனக்குப் போதாதா"

லாராவின் பதில் தாக்குதல் வர முன்னமே பொப் குடும்ப அறையை விட்டு வெளியேறினான். லாரா தொடர்ந்து டிவி பார்த்துக்கொண்டிருந்தாள்.

கராஜ்*க்குள் சென்று ஒயில் ஹீட்டரை எடுத்துக்கொண்டு வந்து படிக்கும் அறைக்குள் போட்டான். ஒயில் மெல்ல சூடாகி வந்தது. அறைக்குள் எவ்வளவு நேரம் சும்மா இருப்பது?

மேலே சீலிங்கின் மேல் ஏதோ ஓடும் சத்தம். அது எலிகள் அல்லது மூஞ்சூறுகள் என்றே நினைத்தான். ஆனால் அது ஒரு 'பொஸம்' என்று அடுத்த வாரமே தெரிந்து விட்டது.

அன்று நிலவறையிலிருந்து ட்ரக்கில் பழைய பீப்பாக்களை ஏற்றும் வேலை பகல் முழுதும் இருந்தது. தன் யூட்டை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வர இருட்டி விட்டது. மரப்படலையினூடு உள்ளே நுழைய, வழமையாக மின் விளக்கு வெளிச்சம் தெரியும் வீடு அன்று இருட்டாகவிருந்தது. படலையிலிருந்து வீடு அரை கிலோமீற்றர் போகுமளவுக்கு ஐந்து ஏக்கர் காணியின் நடுவில் அவன் வீடு இருந்ததால் மனம் பதைக்க வேகமாக யூட்டை செலுத்தி உள்ளே செல்ல, லாராவும் செல்சியும் மெழுகுதிரியை கொளுத்திக் வைத்துக் கொண்டிருந்தனர்.

'சுடு தண்ணீர்கூட வரவில்லை. குளிர் தண்ணீரில் நடுங்கி நடுங்கிக் குளித்து தும்மிக் கொண்டிருக்கிறாள் செல்சி"

'என்ன செல்லரில் மின்சாரம் இருந்ததே. பக்கத்து காணிகளிலும் மின் விளக்கு எரிகிறதே" – என்றவாறு வெளியே இருந்த ட்ரிப் சுவிச்சைப் பார்க்கப் போனான். பின்னே றிக்கோ ஓடி வந்தது. அது லாரா, செல்சியின் பத்தாவது பிறந்தநாளுக்கு வாங்கிக் கொடுத்த நாய் .

என்ன பிழை என்று தெரியாததால் அடுத்த நாள் அதிகாலையிலேயே எலக்ட்ரிசியனை வர சொன்னான்.

மேலே கூரையின் பரணுக்குள் ஏறிபார்த்த எலெக்ட்ரிசியன் தாறுமாறாக வெட்டப்பட்டுக் கிடந்த மின்சார வயர்களைப் பார்த்துவிட்டு இது பொஸம் ஒன்றின் வேலைதான் என்றான்

பகலில் மரங்களிலும் பற்றைகளிலும் இரைக்கு அலைந்து விட்டு இரவில் நித்திரைக்காக வீட்டுக் கூரைகளை நாடிவரும் துடைப்ப வால் பொஸங்கள் அந்தப் பகுதியில் அதிகம். ஒரு வகை மர எலிகள் அவை. அரை மீற்றர் நீளமான உடம்பும் அதேயளவு நீளமான வாலும் கொண்டவை. ஒருபோதும் கூட்டமாக சேர்ந்திருக்காது ஒற்றையாக வாழும் தனியன்கள். இனப் பெருக்க காலத்தில் மட்டுமே பெண்ணைத் தேடிப் போகும்.

அயலில் ஒரு வீட்டுச் சமையலறை சிம்னிக்குள் பொஸமொன்று தவறுதலாக விழுந்து அகப்படுக்கொண்டதாகவும், இன்னொன்று சுருண்டு மூடும் கார் கராஜின் ரோலர் கதவுக்குள் அதன் அச்சோடு அச்சாக நீண்ட காலம் எவருக்கும் தெரியாமல் ஒளித்திருந்ததாகவும் பொப் கேள்விப்பட்டிருந்தான்.

அந்தப் பொஸத்தைப் பிடித்துவிடுவது என்று முடிவெடுத்த பொப், அது கூரைக்குள் ஏறும் பொந்தினைக் கண்டுபிடிப்பதற்காக பின்னிரவு ஒன்றில் வீட்டருகே நின்ற ஒரு 'கம்' மரத்தை பார்த்து குறிவைத்தபடி சற்றுத் தூரத்தே ஒளித்திருந்தான். அந்த மரமொன்றுதான் வீட்டுக்கு மிக அண்மையில் நின்றதால் அதன் வழியாகத்தான் ஏறி கூரைக்குப் போயிருக்க வேண்டுமென ஊகித்திருந்தான்.

பதினொரு மணிக்கு திருட்டுப் பால் குடிக்க வரும் பூனையை போல மெல்ல வந்து மரத்திலேறிய பொஸம் ஒன்று பின் ஓட்டுக்குத் தாவி, கணப்பொழுதில் தலை கீழாக தாழ்வாரத்தினூடு ஏறி, கூரைக்குள் துவாரமொன்றினூடே போனதைக் கண்ட பொப் அவ்விடத்தை அவதானித்துக் கொண்டான்.

கம்பி வலையால் தயாரித்த சதுரக் கூடொன்றை ஒரு அதிகாலையில் ஏணி வைத்து ஏறி அந்த ஓட்டையின் வாசலோடு பொருத்திக் கட்டினான். பொழுது புலரும் நேரத்தில் அது இரைக்காக வெளியே வந்து கூட்டுக்குள் மாட்டிக்கொண்டது. அதைப் பிடித்து றிக்கோவின் பழைய மரக் கூடொன்றில் தற்காலிகமாக அடைத்தான். அன்றிலிறுந்தே றிக்கோவின் பரம எதிரி அந்தப் பொஸம்தான்.

சிவந்த கண்ணின் நடுவில் கருமணியும் றோஸ் நிற மூக்கும் கொண்ட துடைப்ப வால் பொஸம்தான் அது. அதன் வலக் கால் தீக்காயம் பட்டு எரிந்ததை போலிருந்ததால் அது நொண்டி நொண்டியே நடந்தது. அதுக்கு 'போகோ' என்று பெயரிட்டிருந்தான். ஆனால் எல்லாரும் அதனை நொண்டிப் பொசம் என்றே கூப்பிட்டனர். போகோவுக்கு மூன்று நேரமும் பழங்களை வெட்டிக் கொடுத்தான். அப்பிள், பியர்ஸ், திராட்சை பழங்களை அது சாப்பிடும். ஐவனறி, வீட்டுக்குப் பத்து நிமிட தொலைவிலேயே இருந்ததால் மதியம் தோட்டத்திலிருந்து கொண்டு வரும் பழங்களையும் வைத்துவிட்டுப் போவான். சொந்தப் பிள்ளைகள் இல்லாத அவனுக்கு போகோ ஒரு தத்தெடுத்த பிள்ளையாகிவிட்டது.

அந்த வருடம் வரண்ட நீண்ட கோடை. ஆனால் அப்போதுதான் திராட்சை குலை பிடிக்கும் பருவம். தோட்ட வேலைகள் அதிகம் அவனுக்கு இருந்தன. ஒரு பிற்பகலில் வீட்டில் மறந்து விட்டுவிட்டு வந்த எதையோ எடுக்க யூட்டை எடுத்து கொண்டு கிறவல் சாலை வழியாக வீட்டுக்குப் போய் கொண்டிருந்தபோது, அவனது யூட்டை விலத்திக் கொண்டு ஒரு கார் புழுதியை கிளப்பிக் கொண்டு கடந்து சென்றது. திருப்பிப் பார்க்க பசஞ்சர் சீற்றில் செல்சியும், டிரைவர் சீற்றில் ஒரு பையனும் இருந்ததை கண்டான். மெதுவாகப் பின்தொடர்ந்து பார்க்க, அந்தக் கார் அவன் வீட்டுக்கு நூறு மீற்றருக்கு முன்னரே செல்சியை இறக்கி விட்டுப் போய் விட்டது.

பொப் தன் யூட்டை மறைவாக நிறுத்திவிட்டு ஒரு சிகரட்டை புகைக்கத் தொடங்கினான்.

வீட்டுக்கு வந்து செல்சியின் கதவைத் தட்ட உள்ளே எந்த சத்தமுமில்லை. இரு நிமிடங்களின் பின் கதவை அரைவாசி திறந்தபடி, என்ன என்பது போல புருவத்தை உயர்த்தினாள்.

'யார் அந்தப் பையன்"

பதிலேதும் சொல்லாமல் கதவைச் சாத்திக்கொண்ட செல்சி உள்ளிருந்து கதவுக்கு ஸ்ரொப்பர் ஒன்றையும் போட்டாள்.

செல்சிக்கு அப்போது வயது பதினேழு. பெண்கள் இந்த வயதில் தங்களை தனிமைப்படுத்தி அதிலும் குறிப்பாக பெற்றோர் அறியமுடியாத ஒரு இருட்டுலகில் சஞ்சரிக்க விரும்புவதுண்டு. அதை பொப் விடயத்தில் செல்சி இன்னும் அதிகமாகவே செய்தாள்.

லாராவுக்குத் தெரியாமல் இதை கண்காணிக்க வேண்டுமென நினைத்துக் கொண்டவன் வேலைப்பழுவில் பிறகு அப்படியே அதை மறந்து போனான். பிறகொருமுறை நினைவுக்கு வந்தபோது இதெல்லாம் இளவயதின் சுவாரஸ்யங்கள் அல்லவா? என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டான்.

இதற்கிடையில் செல்சி லாராவிடம் ஒரு பொய்யைச் சொன்னாள். பொய் என்பதை விட பொறி என்பதே சரி.

"பொப் என் கதவு வழியே எனக்குத் தெரியாமல் எட்டிப் பார்த்தான். அப்போது நான் ஆடை மாற்றிக் கொண்டிருந்தேன்"

அவள் ஒருபோதும் 'டாடி' என்று அழைத்தது கிடையாது. அதை ஒரு பிடிவாதமாகவே தனக்குள் வைத்திருந்தாள்.

லாராவுக்கு இது திகிலூட்டியது. இப்படி பல கதைகளை அவள் அறிந்திருந்தாள் என்பதைவிட இதற்கான பொறுப்பு தன்னிலும் உள்ளதென்பதை வலிமையாக உணர்ந்தாள். பொப்புக்குத் தெரியாமல் அவனைக் கண்காணிக்க வேண்டுமென அவளும் நினைத்துக் கொண்டாள் ஆனாலும் பொப்பைப் போல அதை மறந்து விடவில்லை. அதை விட அவள் இன்னொரு திட்டத்தையும் தீட்டியிருந்தாள்.

ஆதர் அன்று காலையே வந்திருந்தார். அவருக்கு வேறு வேலைகள் நகரில் இருந்ததுடன் மகளையும் பார்த்துப் பேசி விட்டுப் போக வந்திருந்தார்.

"செல்சி சொன்னது ஏதுவாயிருந்தாலென்ன, தோட்டத்தை உன் கைக்கு எடுப்பதற்கு இது உனக்கு கிடைத்த ஒரு அருமையான சந்தர்ப்பம்" – என்றுவிட்டு ஆதர் போய்விட்டார்.

அன்று தோட்டத்திலிருந்து இருட்டியபின் பிந்தி வந்த பொப்புக்கு லாராவின் தகப்பன் ஆதர் வந்திருந்தது ஆச்சரியத்தைக் கொடுத்தது.

ஆதர் திரும்பிச் சென்று சில வாரங்கள் கழித்து ஒருநாள் மதியம் வீட்டுக்கு வந்தபோது குடும்ப சொத்துக்கான உயில் சாசனம் எழுதுவது தொடர்பாக லாரா தொடர்பு கொண்ட வழக்குரைஞர் ஒருவரின் கடிதம் வந்திருந்ததைக் கண்டு வியப்படைந்த பொப் அதை அவசரமாகப் பிரித்தான். அதில் எழுதப்பட்டிருந்த –

"பொப் மாக்கினஸின் உடல் நிலை திருப்திகரமான நிலையில் இல்லாததாலும்."

என்று தொடர்ந்த வசனத்தை வாசித்ததும் கோபம் தலைக்கேறியது. இருவரையும் வந்து தன்னைச் சந்திக்குமாறு வழக்குரைஞர் கடிதத்தில் இறுதியில் குறிப்பிட்டிருந்தார்.

அன்று மாலை வீட்டுக்கு வந்தபோது செல்சியை தனது காரில் ஏற்றிக்கொண்டு வீட்டுக்கு அப்போதுதான் வந்த லாராவிடம் –

'யாரைக் கேட்டு இதெல்லாம் செய்கிறாய்" என்று கடிதத்தைக் காட்டிக் கத்தினான்.

'எனக்கும் செல்ஸிக்கும் எதிர்கால பாதுகாப்புக்கு நீ என்ன உத்தரவாதம் தரப் போகிறாய்" – லாரா திருப்பிக் கேட்டாள்.

'பாதுகாப்பா? யாருக்கு? இப்போ அது தேவை"

'நீ செல்சியின் பக்கம் போகாதிருந்தாலே எல்லோருக்கும் நல்லது"

'என்ன சொன்னாய். அவளைப் பற்றியா. நீ சொல்ல வருகிறாய்"

ஒரு முறை கோபத்தில் கத்தினால் பிறகு பல நாட்களுக்கு அவன் பேச மாட்டான் என்பது லாராவுக்குத் தெரியும். ஆனால் பதிலுக்கு இவளும் கத்தினால் விளைவுகள் பற்றி இருவருக்குமே தெரிந்திருக்கவில்லை. அதுதான் முதல் தடவை.

அன்றுதான் நீண்ட நாட்களுக்குப் பிறகு வைன் அருந்தியிருந்தான் பொப்.

இரவு வீட்டுக்கு வந்தபோது லாரா நித்திரையாயிருந்தாள்.

இந்த வாக்குவாதத்தினாலும் வைன் போதையினாலும் அன்று போகோவுக்கு மதியமும், இரவும் பழங்களை வைக்க மறந்துவிட்டத்தை சாமத்தில் திடீர் விழிப்பு வந்து எழுந்து கொண்டபோதே உணர்ந்து கொண்டான் பொப். உடனே டோர்ச் லைற்றையும், பழங்களையும் எடுத்துக்கொண்டு வெளியே போக, வழமையாக பின் கதவருகே படுத்து நித்திரையாயிருக்கும் றிக்கோ இன்னும் விழித்துக் கொண்டிருந்தது ஆச்சரியமாகவிருந்தது.

போகோவின் கூட்டுக்குப் போனபோது கூட்டில் அது இல்லை. பசி தாங்காமல் கூட்டின் அடிபாகத்தில் போட்டிருந்த மெல்லிய பலகையைக் கடித்து அதன் கீழேயிருந்த கம்பி வலையையும் வெட்டி அது தப்பி விட்டது.

அவன் உடல் வியர்வையால் நனைத்திருந்தது. தலைக்கு மேலால் அபூர்வமாக அந்த நேரத்தில் குக்குபரோ ஒன்று அலறிக் கொண்டே பறந்து போனது.

டோர்ச்சை அடித்துக்கொண்டே வளவின் எல்லையிலுள்ள கம்பிவேலிவரை போனான். அங்கே கம்பியில் சிக்குப்பட்டிருந்த போகோ கழுத்தில் கடி காயமொன்றுடன் இறந்து கிடந்தது.

கூட்டிலிருந்து தப்பியோடிய போகோவைத் துரத்திப் பின் தொடர்ந்து கடித்துக் கொன்றிருந்தது றிக்கோ.

அப்போதுதான் அவனுக்கு இரண்டாவது தடவையாக இரத்தக்குழாயில் வீக்கம் ஏற்பட்டு வெடித்தது. காலை விடிந்த பிறகே போகோவுக்குப் பக்கத்தில் கிடந்த அவனுடலைக் கண்டெடுத்தனர்.

பெயரளவில் குடும்ப உறவில் இருந்தாலும் பொப் தனக்குள் ஒரு தனிமை கூண்டினுள்தான் வாழ்ந்திருந்தான். அந்தப் பொஸத்தைப் போல. அவன் விட்டுச் சென்ற சொத்து மட்டும் 10 மில்லியன்னுக்கு மேல் இருக்கும் என்று மதிப்பிட்டிருந்தார்கள்.

பொப்பின் மறைவுக்கு சில மாதங்களின் பின்னர் லாராவுக்கு உண்மை தெரிய வந்து மனங்கசந்து அங்கிருக்கப் பிடிக்காமல் தோட்டத்தைக் குத்தகைக்கு விட்டுவிட்டு செல்சியுடன் குயீன்ஸ்லாந்து சென்று விட்டாள். இப்போது அங்குள்ள மிருகங்களின் சரணாலயமொன்றில் வேலை செய்கிறாள்.

அவர்கள் வாழ்ந்த வீட்டையும் காணியையும் அவள் எவருக்கும் வாடகைக்கு கொடுக்கவில்லை. அதன் மரப் படலையில் ஒரு பெரிய பூட்டுப் போடப்பட்டிருக்கிறது.

அந்தக் காணியில் எல்லையில் இரு நினைவுக் கற்கள் இன்னும் இருக்கின்றன.

20 ஆண்டுகளைக் கடந்து புதிய ஒலித்தரத்தில் உலகெங்கும் பரந்து ஒலிக்கிறது

உலகத்தமிழரின் உரிமைத் தோழன்

இன்பத்தமிழ் ஒலி

24 மணிநேர தமிழ் ஒலிபரப்புச் சேவை

Mobile App TUNE IN Inbathamil

www.inbathamil.com



Inbathamil Studio
2/251 Liverpool road,
Ashfield - NSW2131,
Australia

02-9798 2993
02-8542 2016
0451 051 767
0425 324 953
inbathamil@gmail.com
inbathamiloli

# ஆண் அதிகாரத்தையும் தடம்புரளும் அற அடிப்படைகளையும் கூண்டில் நிறுத்துகின்ற தகழியின் "அவனது நினைவுகள்"




ஆழியாள்

"கடலின் அக்கரைப் போனோரே" என்கிற மலையாளப் பாடல் வயது வித்தியாசமின்றி பலதரப்பட்ட வயதினரும் விரும்புகிற பாடல். அப்பாடல் இடம் பெற்ற திரைப்படம் 'செம்மீன்' தகழி சிவசங்கரப்பிள்ளையின் 'செம்மீன்' என்ற பிரபலமான மலையாள நாவலைத்தான் அதே பெயரோடு 1960 களில் படமாக எடுத்திருந்தார்கள் என்பதைப் பலரும் அறிந்திருப்போம்.

மலையாள இலக்கியத்தின் மிக முக்கிய ஆளுமையான தகழி சிவசங்கரப்பிள்ளை 35 ற்கும் அதிகமான நாவல்களையும் 300 ற்கும் அதிகமான சிறுகதைகளையும் எழுதியிருக்கிறார். 'தோட்டியின் மகன்', 'செம்மீன்', 'ஏணிப்படிகள்', 'இரண்டு படிகள்', 'அவனது நினைவுகள்' ஆகிய அவரது நாவல்கள் நமக்குத் தமிழில் கிடைக்கின்றன.

'அவனது நினைவுகள்' யூமா வாசுகியின் மொழிபெயர்ப்பில் 'நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்' நிறுவனத்தினரால் 2013 இல் வெளியிடப்பட்டுள்ளது. 1950 களில் தகழி எழுதிய 'அவன்டே ஸ்மரனகள்' என்ற நாவலே தமிழில் 'அவனது நினைவுகள்' என்று தலைப்பிடப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்புச் செய்த யூமா வாசுகியும்கூட தமிழின் குறிப்பிடத்தகுந்த புனைகதையாளரும் படைப்பாளியுமாவார். அவர் 'ரத்த உறவு', 'மஞ்சள் வெயில்' ஆகிய முக்கிய நாவல்களைத் தமிழுக்குத் தந்தவர். ஒரு படைப்பாளி, மொழிபெயர்ப்பாளராக இருக்கும்பட்சத்தில் அந்த மொழிபெயர்ப்பு எப்போதும் உயிருடன் இருக்கிறதாக எனக்குத் தோன்றுவதுண்டு. அதிலும் இந்தக் கதைக்




களம் யூமா வாசுகியின் மனதுக்கு நெருக்கமானது என்பதை அவரது எழுத்தை வாசித்திருப்பவர்கள் அறிந்திருக்கிறோம். இனி நாவலைப் பார்ப்போம்.

விளிம்புநிலை மக்களையும் அவர்களின் வாழ்க்கைத் தருணங்களின் பாடுகளையும், சந்தோஷங்களையும் நாய்க்குட்டீ என்ற பாத்திரத்தினூடாக வெளிக்கொணர்ந்துள்ளார் தகழி சிவசங்கரப்பிள்ளை. நாய்க்குட்டீயினது நினைவுகளே 'அவனது நினைவுகள்' என்ற நாவலாக விரிந்திருக்கிறது என்று சொல்லலாம்.

நாவலின் ஆரம்ப அத்தியாயத்தில் பீப்பாய்க்குள் கிடக்கும் எச்சில் இலைகளுக்காகப் போட்டி போட்டுக்கொண்டிருக்கும் நாய்களோடு, நாயாக அந்தக் குழந்தை நமக்கு அறிமுகமாகிறான். மற்ற நாய்கள் அவன் மீது பாய்ந்து கடிக்கும்போதும், மற்ற மனிதர்கள் அவன் மீது கல் எறிந்தோ, தண்ணீர் ஊற்றியோ அவமானப்படுத்தும் போதும் அந்த மனிதக்குழந்தையை ஒரே ஒரு நாய் மட்டும் "தன் குட்டி மாதிரி" காப்பாற்றிப் பாதுகாக்கிறது.

யாரோ ஒருவன் அந்த மனிதக் குழந்தையை முதன்முதலில் பெயர் சொல்லி "நாய்க்குட்டீ" என்று கூப்பிட்டு ஒரு சோற்று உருண்டை கொடுக்கிறான். ஒரு பைத்தியக்காரி அவனுக்கு ஒரு பழைய துணித் துண்டை இடையில் சுற்றி விடுகிறாள். இப்படித்தான் நாய்க்குட்டீக்கு முதன்முதலில் உடை கிடைக்கிறது.

ஒருநாள், அவனில் அன்பு காட்டிய நாய் திடீரென இறந்து போய்விட்ட பிறகுதான் "நாய்க்குட்டீ"க்கு உலகம் என்றால் என்ன என்று தெரிய வருகிறது. இந்த உலகத்தில் "ஒரு பிடி சோறு சம்பாதிப்பது எப்படி?" என்பதே அவனின் நாளாந்த வாழ்க்கையாகிப் போகிறது. எப்படியோ அவன் அநாதைச் சிறுவர்களான கேசுவோ-டும், ஔவக்கரோடும் சேர்ந்து திரிகிறான்.

இவர்களோடு கல்பாலத்தின் அருகில் இரவில் கைவிடப்பட்ட தங்கச்சியும் சேர்ந்து கொள்கிறாள்.

தங்கச்சி பால்குடி மாறாத குழந்தை. தங்கச்சியை நாய்க்குட்டீ நாள் முழுதும் பார்த்துக் கொள்ளவேண்டிவருகிறது. அவளுக்குப் பாலும், நாய்க்குட்டீக்குச் சாப்பாடும் ஔவக்கர் படகுத் துறையில் சுமை தூக்கிச் சேர்ந்த சில்லறைகளில் வாங்கி வருகிறான். ஆனால் ஔவக்கரால் தொடர்ந்து உணவு கொண்டு வர முடியவில்லை, "நாம் இத விட்டுட்டுப் போயிரலாம்" என்கிறான். ஆனால் நாய்க்குட்டீ தனக்குக் கிடைத்த தங்கச்சியைக் கைவிட மறுக்கிறான். பின்னர் ஔவக்கர் அவர்களை விட்டுப் பிரிந்து வேறெங்கோ போய்விடுகிறான். நாய்க்குட்டீக்கு சிறுகுழந்தையான தங்கச்சியை விட்டு விட்டு சுமை தூக்குவதற்கோ அல்லது வேறு வேலைக்குப் போகவோ முடியாத நிலை. இருவரும் பழையபடி எச்சில் பீப்பாய் இடத்தில் தஞ்சமடைகிறார்கள். அங்கேயே தங்கச்சியும் காய்ச்சலில் இறந்து போய்விடுகிறாள்.

தங்கச்சியின்இறப்புக்குப்பின்னர்நாய்க்குட்டீ என்ற சிறுவன் எவ்வாறு வளர்ந்தவனாகிறான். அவனது வாழ்வு எப்படியெல்லாம் நகர்ந்து போகிறது. இந்த நகர்வில் சமூக யதார்த்தங்களோடு தன்னை எப்படி இணைத்துக் கொள்கிறான் அல்லது விலகிக் கொள்கிறான். அவன் எப்படியாக வாழ விரும்புகிறான், எது கைகூடுகிறது. சமூகம் அவனுக்கு அளிக்கும் பெறுமானம் என்னவாக இருக்கிறது என்பதாக இந்த நாவல் இன்னமும் விரிந்து செல்கிறது.

சிறுவனான நாய்க்குட்டீக்கு, படகுத் துறையில் சுமைகள் தூக்குவது, தேங்காய்க் கொப்பரைகள் காயும் இடத்தில் காகம் விரட்டுவது போன்ற வேலைகள் எப்போதாவது கிடைத்தன. நிரந்தர வேலை கிடைத்தபாடில்லை. நாவல் நெடுகிலும் வேலையில்லாமல்பலர்திண்டாடுகிறார்கள். நிறையப்பேர் கயிற்றுக் கம்பனியில் கயிறு திரிக்கும் வேலை கிடைக்காமல் அன்றாடம் திரும்பிச் செல்கிறார்கள். மிளகு புடைக்கும் இடத்தில் அளவுக்கதிகமாகப் பெண்கள் இருக்கிறார்கள். மிளகை சாக்கில் கட்டவும், சுமக்கவும்குறைந்தகூலிக்குஆட்களெடுத்தாலும் நிறையப் பேருக்கு வேலை இல்லை. ஆர்யாட்டு, புன்னப்ரப போன்ற இடங்களில் கயிற்றுத் தொழிற்சாலைகள் பூட்டப்படுகின்றன. நிலையான ஒரு வேலை கூட நாய்க்குட்டீக்கு கிடைக்கவில்லை.

கொஞ்சக்காலம் போகிறது. அவனுக்கு சின்னச்சாக்கோ அண்ணன் ரிக்ஷா இழுக்கும்படி யோசனை சொல்லி, வாடகைக்கு ஒரு ரிக்ஷாவை எடுத்துக் கொடுத்து உதவுகிறார். அன்று மத்தியான உச்சி வெயிலில் ஒரு சேட்டை ரிக்ஷாவில் வேகமாக இழுத்துப் போக, அவரிடமிருந்து ஒரு ரூபாய் கிடைக்கிறது. வாழ்க்கையில் அன்றுதான் ஒரு ரூபா முழுதாக அவன் கையில் வந்திருக்கிறது. அதன் பின்னர் ரிக்ஷா இழுத்தலே அவன் தொழிலாகிறது.

பகலில் ரிக்ஷா இழுப்பதைவிட இரவு நேரத்தில் சவாரி இழுப்பது அவன் நினைப்பதை விட லாபகரமானதாக இருந்தது.

அத்துடன்இந்தஇரவுஉலகத்துக்குள்நாய்க்குட்டீக்கு ஒரு முக்கிய பாத்திரமிருந்தது. பயணியர் விடுதிக்கும், கடற்கரை பங்களாவுக்கும் பெண்களைக் கூட்டிக் கொண்டு விட்டு, பிறகு அதிகாலையில் திருப்பி அழைத்துப் போகவேண்டும். தேவைப்படும்போது இப்பெண்களுக்கு ஆள்பிடித்துக் கொடுக்கும் வேலையையும் அவனே செய்தான். அப்பெண்களுக்காக குன்னும்புறத்து பெரிய முதலாளியோ, சின்னவரான பேபிக்குட்டி முதலாளியோ,பெரியஅதிகாரியோ,யாரோ ஓர் எஜமான் காத்திருப்பார்.

அதிலும் மிளகு சாகுபடிக்காலத்தில் கொச்சி, கோட்டயம், காங்கிரப்பள்ளி போன்றஇடங்களில்இருந்தெல்லாம்முதலாளிகள் வருவார்கள். மிளகு மூடைகளும், தேங்காய்க் கொப்பரைகளும் மொத்தமாக விற்பனை செய்யப்படுவதும் தரகர்கள் மூலமாக பேரங்கள் நடப்பதும் புதிய வியாபாரத் தொடர்புகள் ஏற்படுத்தப்படுவதுமாக பல பகுதிகள் நாவலில் வருகின்றன. தகழி ஆலப்புழாவையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் மிளகு - தேங்காய் வர்த்தகத்திற்கான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகக் காட்டுகிறார்.

இந்த பெரும் வர்த்தக வலயத்தில் நாய்க்குட்டீ, மத்தாயி போன்ற வேலைக்காரர்களும், சின்னமேரி, ஜானகி, கௌரி போன்ற பெண்களும் மிகவும் அடிமட்டத்தில் உள்ள கதை மாந்தர்களாக இருக்கிறார்கள். அங்கு நடக்கின்ற வர்த்தகத்தில் இலட்சங்களாய்க் கிடைக்கின்ற எந்த லாபத்திலும் அவர்களுக்குப் பங்கில்லை. எப்போதும் போல முதலாளிகளால் தேவைக்குப் பாவிக்கப்பட்டு பின்கடாசி எறியப்படுபவர்களாகவே இருக்கிறார்கள். வாழ்க்கைப் பாட்டுக்காக பல பெண்கள் பகலில் மிளகு புடைத்து, கயிறு திரிக்கும் வேலைகளைச் செய்கிறார்கள். அதே பெண்களே இரவுகளில் கள் விற்பனை செய்பவர்களாகவும், தொழிலுக்குப் பழகிய பெண்களாகவும் இருக்கின்றனர்.

இந்தமுதலாளிகளுக்குகருணையில்லை. இந்தப் பெண்களில் பலரை ஏதோ வகையில் கட்டாயப்படுத்தி தங்கள் வழிக்கு கொண்டு வந்து விடுகிறார்கள். பேபிக்குட்டி முதலாளி தனது கலியாணத்துக்கு நான்கு நாட்களுக்கு முன் கொம்மாடிப் பகுதிப் பெண்ணொருத்தியில் கண் வைக்கிறான். ஆனால் விஷயம் கைகூடவில்லை. கலியாணம் வெகுவிமரிசையாக நடந்து முடிந்ததும், சிலவாரங்களுக்குள் அவளைத் தனது வலையில் வீழ்த்தி விடுகிறான் பேபிக்குட்டி முதலாளி. இதே போல் பேபிக்குட்டியின் தந்தை பெரிய முதலாளி சின்னமேரியைக் கொண்டு வந்து தனக்கும், தான் சொல்லும் மற்றவர்களுக்கும் உடையவளாக வைத்திருந்தான். கொஞ்சக்காலத்துக்குப் பிறகு அவளை அப்படியே மறந்து விடுகிறார்கள். அவள் அந்தத் தொழிலையே தொடர்ந்து செய்கிறாள்.

பெண்களுக்கு நடக்கும் இந்த விடயங்களைப் பார்க்கும் நாய்குட்டீ, தான் அன்பு வைத்த, தான் விரும்பிய பெண்களை இந்த விஷச் சுழலுக்குள் வைத்திருக்காது ஆலப்புழாவை விட்டே அனுப்பிவிடுகிறான். அப்படிக் காப்பாற்றி அனுப்பி வைப்பதற்காக அவன் படும் பாடுகளும், அதற்கு கொடுக்கும் விலைகளும் மிக அதிகம். முக்கியமாக சாக்கோ அண்ணன் இறந்த பிற்பாடு அவரது மனைவி கிளாராவையும், மகள் திரேசாக்குட்டியையும் ஊரைவிட்டு பத்திரமாக அனுப்பி வைக்கிறான். அவன் விரும்பிய கள்ளுக்கடைக்காரியையும் அப்படியே செய்கிறான்.

நாய்க்குட்டீக்கும் கனவுகள் இருக்கின்றன. கனவுகளைக் காணவும் சாக்கோ அண்ணனே சொல்லிக் கொடுத்திருக்கிறார். நாய்க்குட்டீயின் கனவு - அவனுக்கென்று ஒரு வீடு வேண்டும். வீடென்றால் வீடும், அவனுக்கென்று ஒருத்தியும், ஒரு குழந்தையும். சாக்கோ அண்ணன் சொன்னபடியே நாய்க்குட்டீக்கென்று ஒரு வீடு உருவானது. அவனுக்கென்றுகிளாராவும், திரேசாக்குட்டி என்ற பெண்குழந்தையும் இயல்பாக அமைகிறார்கள். ஆனால் அவனுக்கு தன் வாழ்க்கைக் கனவை விட அவர்களது பாதுகாப்பு முக்கியமானதாகிறது. அந்த அக்கறையில் தன் வாழ்க்கைக் கனவையே

**(26ஆம் பக்கம் பார்க்க)**

# வெளிநாட்டு ஆசாமியை...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர்தான், தாளையடி - சோரன்பற்று வீதியில் கிளைமோருடன் நின்றுகொண்டிருந்த கொலையாளிகளுக்கு கடைசிநேரத்திலும்கூட தனது நேரடி நெறிப்படுத்தல்களை கொடுத்துக்கொண்டிருந்தவர் என்றும் -

சுமந்திரனின் போக்குவரத்துக்கள் மற்றும் வாகன விவரங்களை தாக்குதல்காரர்களுக்கு வழங்கிக்கொண்டிருந்தவர் என்றும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட தாக்குதல்காரர்களின் பேஸ்புக் மெஸென்ஜரில் இவரது தொடர்புகள் முழுவதும் காணப்பட்டதுடன் இவரது தொடர்பிலக்கமும் கண்டுபிடிக்கப்பட்டது.

உடனே, குறிப்பிட்ட நபரது வெளிநாட்டு தொடர்பிலக்கத்தைக் கண்டுபிடித்த பொலீஸார், அந்த இலக்கத்திலிருந்து இலங்கையின் வேறு பகுதிகளில் உள்ள யாருக்காவது தொடர்பினை ஏற்படுத்தியிருக்கிறாரா என்று விசாரிக்க முடிவுசெய்தார்கள். உடனடியாக இந்தத் தகவல்களை கொழும்பிலுள்ள தலைமையகத்துக்கு அனுப்பி விசாரித்ததில், "X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபர்", கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள தனது பெண் நண்பியுடன் அடிக்கடி அழைப்பெடுத்து பேசிவந்தமை தெரியவந்தது.

இதற்குமேல், வேறு விவரங்கள் பொலீஸாருக்குத் தேவைப்படவில்லை. உடனடியாக கொட்டாஞ்சேனையில் குறிப்பிட்ட பெண் தங்கியிருந்த இடத்துக்கு சென்ற பொலீஸார் அந்த பெண்ணை விசாரித்ததில், "X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபர்" நெல்லியடியை சொந்த இடமாகக்கொண்டவர் என்றும் அங்கு அவரது தாயார் உள்ளார் என்ற தகவலும் வெளிவந்திருக்கிறது.

"X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபர்" வாழ்ந்ததாகக்கூறப்படும் நெல்லியடி வீட்டுக்கு சென்ற பொலீஸார், குறிப்பிட்ட நபர்தொடர்பான சகலவிவரங்களையும் கேட்டறிந்தனர். இலங்கையிலிருந்தபோது அவர் என்ன செய்தார், எப்போது வெளிநாடு சென்றார் என்பது முதற்கொண்டு அவரது படங்களிலும் டிசைன் டிசைனாக எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டார்கள்.

குறிப்பிட்ட நபரின் தாய், தனக்கும் தனது மகனுக்குமான தொடர்பு பல காலமாகவே இல்லாமல் போய்விட்டதாக பொலீஸாரிடம் கூறியுள்ளார்.

அவரது வீட்டிருந்து எடுத்துவந்த படங்களை வைத்து விசாரணைகளை மேற்கொண்டபோது பொலீஸாருக்கு



மேலும் பல தகவல்கள் கிடைக்கப்பெற்றன. அவற்றை சுமந்திரனோடு நேரடியாக பேசித் தெளிவுபடுத்தவேண்டிய தேவையும் இருந்தது. சுமந்திரனை தொடர்புகொண்டு ஒரு சில வீடியோக்களையும் காண்பித்து அந்த வீடியோவிலிருந்த நபரையும் தாங்கள் நெல்லியடி வீட்டில் பெற்றுக்கொண்ட படத்தை காண்பித்தார்கள்.

வீடியோவிலும் படத்திலுமிருந்த நபர் ஒருவரே என்று உறுதியாகியது.

இவை அனைத்தையும் ஒருங்கிணைத்த பொலீஸார் இந்த விவகாரத்தை நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்வது என்று தீர்மானித்தனர்.

விளைவு -

சுமந்திரனுக்கு எதிரான கொலைச்சதி வழக்கு தற்போது கொழும்பு உயர்நீதிமன்றில் நடைபெறுகிறது.

இந்த வழக்கில், "X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபர்" விசாரணைக்கு வரவேண்டும் என்ற ஆணையை கிராமசேவகர் ஊடாகவும் தாயாரின் ஊடாகவும் கொண்டுபோய்பொலீஸார்கொடுத்திருந்தனர். சிறிலங்காவின் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் இந்த வழக்கைக் குறிப்பிட்ட நபர் இல்லாமலேயே முன்னெடுப்பதா இல்லையா என்பது தொடர்பாக இன்னமும் முடிவு அறிவிக்கப்படவில்லை.

கடந்த மாதம் 17 ஆம் திகதி நடைபெற்ற வழக்கின் அமர்வின்போது குறிப்பிட்ட நபரின் தாயார் நீதிமன்றில் ஆஜராகியிருந்தார். தனக்கும் தனது மகனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று முன்பு பொலீஸாருக்குக் கூறியதையோ மீண்டும் நீதிமன்றத்திலும் கூறியிருக்கிறார்.

பொறிக்குள் விழுந்திருக்கும் "X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபர்" தற்போதிருக்கும் நாட்டின் பாதுகாப்புத் துறையினரைத் தொடர்புகொண்ட இலங்கை பொலீஸார் தங்களது விசாரணையின் முழுவிவரத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். இதேவளை, குறிப்பிட்ட நபரை நாடு கடத்துவதற்கு இன்டர்போலின் உதவியையும் இலங்கை பொலீஸார் நாடியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து விரைவில் எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

ஆனால், சுமந்திரனுக்கு எதிரான கொலைச்சதி மற்றும் கூலிப்படைகளுக்கு எதிரான கைது என்பவற்றுக்கு மேலும் ஒரு மர்மமான கதை உண்டு என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். வழக்கு விசாரணைகள் முடிவடையும் போது அவை குறித்தும் "எதிரொலி"யில் பார்ப்போம்.

இலங்கை அரசியலில் அளவுக்கு மீறி மூக்கை நுழைத்து, கட்டுமீறியதங்கள்காட்டுத்தனங்களைக்காண்பிக்கத் துடிப்பவர்களுக்கு என்ன நடைபெறும் என்பதற்கு தற்போது இலங்கை பொலீஸார் மேற்கொண்டிருக்கும் இந்த நடவடிக்கை பேரிடியாக விழுந்திருக்கிறது.

வெளிநாட்டிலிருந்துவிட்டால் மாத்திரம் பாதுகாப்பாக இருந்து ஊரில் குழப்பங்களை விளைவிக்கலாம் என்ற வெறிபிடித்த குழப்ப சக்திகளுக்கு இந்தச் சம்பவம் பெரும்பாடமாக அமைந்திருக்கிறது.

இந்தச் சம்பவம் இடம்பெற்று, விவகாரம் கொஞ்சம் கொஞ்சமாக சீரியஸாகத்தொடங்கியதை அடுத்து குறிப்பிட்ட வெளிநாட்டிலிருந்து இயங்கிவந்த சில முகவரியில்லாத இணையத்தளங்களைநடத்திவந்தவர்கள் அந்த இணையத்தளங்களை மூடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தனிநபர் சேறடிப்புக்களை முழுநேமாக செய்துவந்த இணையத்தளங்கள், கூட்டமைப்பிற்கு எதிரான விசமப் பிரசாரங்களை மக்கள் மத்தியில் திட்டமிட்டு பரப்புவதில் குறியாக செயற்பட்டுவந்ததாகவும் -

இந்தப்பிரச்சினையின் விஸ்தீரணம் தங்களையும் பீடித்துவிடப்போகிறது என்ற அச்சம் ஏற்பட்டதை அடுத்து, தற்போது விபூதி தரித்த வண்ணம் தேவாரம் பாடிக்கொண்டு இரண்டு கைகளையும் இரண்டு கால்களுக்கும் இடையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்கின்றன விடயமறிந்த சில வட்டாரங்கள்.

# ஆண் அதிகாரத்தையும்...

(25ஆம் பக்கத் தொடர்ச்சி)

விலையாகக்கொடுத்து அவர்களை ஆலப்புழாவிலிருந்து பத்திரமாக அனுப்பி வைக்கிறான்.

நாவலில் சாக்கோ அண்ணன் கடுமையாக நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும்போது அவரது குடிசை வீடு படிப்படியாக நாய்க்குட்டீயின் வீடாக மாறுவதைக் கிளாரா, குழந்தை திரேசாக்குட்டி மூலம் மிக அழகாக மெல்ல மெல்ல வாசகர்களுக்கு விளங்க வைக்கிறார் தகழி. நாய்க்குட்டீக்கு சோறுமுண்டு, காத்திருக்கும் ஆளுமுண்டு என்று ஆரம்பத்தில் சொல்லும் தகழி, புன்னை மரத்திலிருந்து பாடும் ராப்பாடியைக் குறியீடாக வைத்து நாய்க்குட்டீக்கும் கிளாராவுக்குமான உறவுப்பின்னலை வெளிக்கொணருகிறார்.

ஆலப்புழாவை விட்டுப் போக முன், கடைசி நாளன்று கிளாராவுக்கு நாய்க்குட்டீயுடன் இனிமேலும் பேசுவதற்கு வேறொன்றும் இல்லாத கணமொன்று நாவலில் வருகிறது. அப்போது அந்த ராப்பாடியின் பாட்டும் நின்று போகிறது. அதன்பின் நாவலில் அந்த ராப்பாடியின் பாடலை நாங்கள் திரும்பவும் கேட்க முடியவில்லை. தகழியின் படைப்பாக்கத் திறனுக்கு இந்த ராப்பாடி ஒரு சிறிய உதாரணம்.

கிளாராவும், திரேசாக்குட்டியும் போன பிறகு முழு நேரமாக நாய்க்குட்டீ பெரிய முதலாளியுடனே இருக்கிறான். வயது போகப்போக, அவருக்குள் இப்போது மண்ணாசை கொழுந்து விட்டெரிகிறது. நாய்க்குட்டீ மூலமாக புலயன்வழி வளாகத்தில் குடிசை போட்டிருக்கிற சின்ன மேரி, ஜானகி, கௌரி போன்ற போக்கற்றவர்களைத் துரத்தி அங்கொரு வீடு கட்ட விரும்புகிறார். நாய்க்குட்டீயால் அப்பெண்களை விரட்டியடிக்க முடியவில்லை. அவன் அதை விரும்பவுமில்லை. இதையெல்லாம் விட, பெரிய முதலாளி கைவிட்ட சின்ன மேரிக்கு அவர் மூலம் ஒரு மகன் இருப்பதும் அவனுக்குத் தெரிய வருகிறது. அச்சு அசலாய் பையனது காதுக்குப் பின்னால் உள்ள மச்சம்கூட மூத்த முதலாளியுடையதைப் போல இருந்தது.

நாய்க்குட்டீ தனது இரகசியத்தை அறிந்து வந்து தன்னிடமே குறுக்கிட்டுப் பேசுகிறான் என்பதும், தான்சொன்ன வேலையைச் செய்யவில்லை என்பதும் பெரிய முதலாளிக்கு கடுங்கோபமாக இருக்கிறது. அவனை கடுமையாக எச்சரித்துவிட்டு தன் மனதுக்குள் கறுவிக்கொண்டே இருப்பதை வாசகரால் உணர முடிகிறது. ஆனால் நாய்க்குட்டீக்கு முதலாளியின் கபடபுத்தி பிடிபடாது போகிறது.

இந்த நேரத்தில் சமையல்காரன் "மத்தாயி" கொல்லப்படுகிறான். யார் கொலையாளி என்று நாவலில் நேரடியாயாக சொல்லப்படாவிட்டாலும், சம்பவம்நடந்த இடத்திலிருந்து பேபிக்குட்டியும் முதலாளியின் மகள் லில்லிக்குஞ்சும் ஓடுவதை வைத்து நாம் ஊகிக்கலாம். ஆனால் பெரிய முதலாளியோ எல்லோருக்கும் நடுவில் வைத்து நாய்க்குட்டீயில் கொலைப்பழியைப் போடுகிறார். அதேநேரம் அவர், அவனிடம் தனியே காதுக்குள் தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றும்படி வேண்டுகிறார். அத்துடன் தன் சொத்தை விற்றாவது அவனுக்குத் தண்டனை கிடைக்காமல் செய்வதாகவும் அவர் உறுதியளிக்கிறார். பெயருக்கேற்றால் போல நாய்க்குட்டீ முதலாளிக்கு விசுவாசமாக கொலைப்பழியை ஏற்றுக் கொள்கிறான். நாய்க்குட்டீ கைதாகி போலிஸ் நிலையத்தில் அடைக்கப்பட்ட பின் முதலாளி தன்னுடைய சுயரூபத்தைக் காட்டுகிறார். நாய்க்குட்டீயை ஜாமினில் வெளியே எடுக்க முடியாது என்றும் மத்தாயியின் வயதான தாய்க்கு வாழ்க்கைச் செலவுக்கு பத்தோ இருபதோ கொடுப்பதாகவும் இகழ்ச்சியாகப் பேசுகிறார்.

வழக்கு விசாரணையின்போது, முதலாளி திட்டமிட்டபடி போலிஸ்காரர்கள், வழக்குரைஞர், சோடிக்கப்பட்ட சாட்சிகள் எல்லோருமே நாய்க்குட்டீதான் மத்தாயியை கொன்றதாகப் பல பொய்க் கதைகளைச் சொன்னார்கள். என்றாலும், இறுதியில் நாய்க்குட்டீக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தபோது அவன் நீதிவானிடம் எல்லாவற்றையும், எதையும் மறைக்காமல் அப்படியே சொன்னான். அதிகாரமும், பணபலமும், அந்தஸ்தும், சாட்சிகளும் முற்றிலும் நேர் எதிராக இருக்கும்போது உண்மைக்கு எப்போது நீதி கிடைத்திருக்கிறது. நாய்க்குட்டீ எதிர்பார்க்காதபடி அவனுக்கு ஆயுள் தண்டனை தீர்ப்பாகிறது.

ஆயுள் தண்டனையை அனுபவித்துவிட்டு ஆலப்புழாவுக்கு வரும் நாய்க்குட்டீ "முதலாளித்துவம் அழியட்டும்" என்று முழங்கிக் கொண்டுபோகும் சிவப்புக் கொடி ஊர்வலத்தின் பின்னால் ஓடிச் சென்று சேர்ந்து கொள்வதாக அவனது நினைவுகள் நிறைவு பெறுகின்றன.

நாவல் முழுவதும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் நாய்க்குட்டீ என்ற தரகனின்மனிதாபிமானத்துக்கும், அக்கறைக்கும் அவனைச் சுற்றிய சமூகத்தில் இருக்கும் பெண்களின் உழைப்புக்கும் எந்த விதத்திலும் ஈடு செய்யமுடியாததாக இருக்கிறது முதலாளிகளின் சீரழிந்த உலகம்.

நம் சமூகம் கேவலம் என்று கருதுகின்ற தொழில்களைச் செய்யும் கடைக்கோடி மனிதர்களிடையே காணப்படும் அன்பு, நேசம், பண்பு, விசுவாசம் போன்ற குணாதிசயங்களை ஒரு புறமாகவும், முதலாளிகளின் பணத்திமிர், ஈரஞ்சுவறாத மனம், வஞ்சகக்குணம், நேர்மையீனம், பேராசை ஆகியவற்றை மறுபுறமாகவும் வைத்து இரட்டை எதிர்நிலையில் தகழி பாத்திரங்களை உருவாக்கியிருக்கிறார்.

"ஓர் இருட்டுலக நிலவெளி முற்றாய்ப் பெயர்க்கப்பட்டு நம் மன மையத்தின் வெளிச்சத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" ஒரு நேர்த்தியான மொழிபெயர்ப்பை நமக்குத் தந்திருக்கிறார் யூமா. வாசுகி.


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


உங்கள் நிகழ்வுகள் பிரகாசமாக வேண்டுமா?
EVENTS & DECORATIONS
WE PROMISE TO MAKE YOUR DAY THE MOST MEMORABLE AND SPECIAL FROM START TO FINISH...!
• Wedding and Reception
• Engagement
• Anniversary parties
• Birthday parties
• Puberty ceremony
• Traditional home functions
• Valaikappu Function
• baby shower
• Mehindi Functions
• Religious Events
• Balloon and flower decoration
• Indoor of outdoor Decorations
Our packages includes everything you will need for your function.
We will have your function organised from start to finish
Example : Wedding pachages
• Mandap
• chair and table setting
• Walkway with pillars and entrance Decoration (Ganesh and Kumbam etc)
• Rangoli Kolam
• Bridal Bouquet
• Kuttu Villaku, Flower plates, Flower Basket, Nirai kudam, Kaamachi Villaku
Extras: Flower Garlands, Cake, Photography
For more information head to our facebook & instagram page or contact us Directly anytime
milpark, melbourne, ABN : 98314136010, suthan : 0415602956
S&T Events And Decorations
st_decorations
umasuthanuma@gmail.com

# குரு பெயர்ச்சி ராசி பலன்

## 12 ராசிகளுக்கும் பலன் எப்படி?

குருபகவான் ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி விருச்சிக ராசிக்கு வருகிறார். வியாழ பகவான் 12 வருடங்களுக்கு ஒருமுறை ஒரு ராசிக்கு வருவார். இதை ஒரு வியாழ வட்டம் எனக் கூறுவர். இந்த மாற்றம் உலகத்துக்கும் மனிதர்களுக்கும் பலவித மாற்றங்களைக் கொடுக்கும் என்பது நியதியாகும்.

ஜோதிடர் சோ.இரங்கநாத ஐயர்
Phone : 0405 647 537
E-mail : iyerranganatha@gmail.com



### மேடம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதத்தில் பிறந்தவர்கள்**

இவர்களுக்கு வியாழ பகவான் விருச்சிக ராசிக்கு வருவது எட்டாம் ராசியாகும். இதை அட்டமத்து வியாழன் எனக் கூறுவார்கள். இந்தக் காலப் பகுதியில் இவர்களுக்கு நற்பலன் குறைவு என்றே கூறவேண்டும். தெய்வ அனுகூலம் குறையும். கவலைகள், மனக்குழப்பங்கள் என்பன ஏற்படும். குடும்ப செலவுகள் அதிகரிக்கும். வாகன நட்டங்கள் சிறிய வாக்கு வாதங்கள் என்பனவும் இருக்கும். பெண்களுக்குத் திருமண விடயங்களில் தடை, தாமதம் ஏற்படும். காதலர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வி விடயத்தில் மனக்குழப்பம், தடைகள் என்பன ஏற்படும். தொழில் செய்பவர்களுக்கு பெரிய பாதிப்பு ஏற்படமாட்டாது. எனினும், தனித் தொழில் செய்பவர்களுக்கு பகை, நட்டம், அரசாங்கப் பிரச்சினைகள் போன்ற கஷ்டங்கள் இருக்கும். மேலும் சுகயீனமாக இருப்பவர்களுக்கு இந்த வியாழன் நற்பலன் செய்யும். சுகயீனம் குறைந்து ஆயுள் பலம் கூடும். இவர்கள் வியாழக்கிழமைகளில் தெட்சணா மூர்த்தியை வழிபட்டால் நன்று.

### ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீருடம் 1, 2ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்**

இவர்களுக்கு வியாழ பகவான் விருச்சிக ராசிக்கு வருவது ஏழாம் ராசியாக அமையும். இது நன்மையானது. இதனால் இவர்களுக்கு தற்சமயம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அட்டமத்துச் சனியால் ஏற்படும் கஷ்டங்கள் ஓரளவு குறையும். இடப ராசிக்குரியவர் வெள்ளியாகும். எனவே, பொருளாதாரச் சிக்கல்கள் குறையும். இருப்பிடம், தொழில் என்பனவற்றில் மாற்றங்கள், முன்னேற்றங்கள் ஏற்படும். இவர்களின் ராசியைக் குரு பார்ப்பதால் தெய்வ அனுகூலம் ஏற்படும், தொழில் செய்பவர்களுக்கு நன்று. வியாபாரிகளுக்கு இலாபம் குறைவா–கவே இருக்கும். தனித்தொழில் செய்பவர்கள் புதிய தொழில்கள் தொடங்க வசதிகள் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். புதிய துறைகளில் படிக்கத் தொடங்குவார்கள். பரீட்சைகளில் திறமைச் சித்தி பெறுவார்கள். நீடித்த சுகயீனம் உடையவர்கள் சுகம் பெறுவர். இந்த ராசிக்காரர்கள் அம்மனை வழிபடுதல் நன்று.

### மிதுனம்

**மிருகசீரிடம் 3,4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்**

இவர்களுக்கு வியாழ பகவான் ஆறாம் ராசிக்குப் பிரவேசிக்கின்றார். இது சாதாரண பலன்களை இவர்களுக்குச் செய்யும். தொழில், பொருளாதாரம் பாதிக்கப்படமாட்டாது. இந்த 6ஆம் வீடு சுகயீனம், எதிர்ப்புகள் என்பனவற்றைக் குறிக்கும். எனவே, இவர்களுக்கு பூரண குணம் வரும். வைத்தியங்கள் பலன் தரும். எதிர்ப்புகள் நீங்கும். எதிரிகள் தானாக விலகிவிடுவார்கள். பெண்களுக்குத் திருமண விடயத்தில் தடைகள் நீங்கும். அத்துடன், அவர்களுக்கு வயிறு தொடர்பான கோளாறுகள் இருப்பின் அவை நீங்கும். காதலர்களுக்கு எதிர்ப்புகள் நீங்கிவிடும். மாணவர்களுக்குப் படிப்பு விடயத்தில் முன்னேற்றம் வரும். உதவிகள் கிடைக்கும். புதிய நண்பர்கள் வருவார்கள். தனித்தொழில் செய்பவர்களுக்குப் புதிய முயற்சிகள் கைகூடும். பங்குத் தொழில் செய்பவர்களுக்குப் புதிய நட்புகள் பலமடையும். இந்த ராசிக்குரியவர் புதன் ஆகையால் விஷ்ணுவை வழிபடுதல் நன்று.

### கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்**

இவர்களுக்கு குருபகவான் 5ஆம் வீட்டுக்குப் பிரவேசிக்கின்றார். 5ஆம் வீடு மனதையும் குழந்தைகளையும் குறிக்கும். இந்த ராசிக்காரர்களுக்கு நன்மையான பலன்களே நடைபெறும். பொருளாதாரம் சிறப்பாக அமையும். இருப்பிட வசதிகள் வரும். குழந்தைகளுக்கு முன்னேற்றம் ஏற்படும். அவர்களுக்கு திருமணம், உயர்கல்வி போன்ற நன்மையான பலன்கள் வரும். பெண்களுக்கு மனக்குழப்பங்கள் இருப்பின் அவை நீங்கும். குழந்தைப்பேறு பற்றிய வைத்தியங்கள் செய்யவேண்டிவரின் அவை வெற்றி தரும். காதலர்களுக்குத் திருமணம் கைகூடும். தனித்தொழில் செய்பவர்களுக்குப் பிணக்குகள் நீங்கும். கடன் தொல்லைகள் நீங்கும். வெளியூர் தொழில்கள் அமையும் யோகமும் உண்டு. இவர்கள் அம்மனை வழிபட்டால் நன்று.

### சிம்மம்

**மகம், பூரம், உத்தரத்து முதற்கால் பிறந்தவர்கள்**

இவர்களின் ராசிக்கு நாலாம் வீட்டுக்கு குரு வருகிறார். இந்த இடம் சுகத்தையும் சுற்றி இருக்கும் உறவினர்களையும் குறிக்கும். இவர்களுக்கு குருபகவான் நன்மையான பலன்களை செய்வார். குடும்பத்தில் முன்னேற்றம், தேக சுகங்கள், வீடு, இருப்பிட வசதிகள் என்பன வரும். உறவினர் சேரும் நல்ல வைபவங்கள் நடைபெறும். வெளியூர் பிரயாணங்கள் அமையும். பெண்களுக்கு திருமண விடயங்கள் கைகூடும். மாணர்களுக்கு படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். சக மாணவர்களின் உதவிகள் கிடைக்கும். காதலர்களுக்கு நண்பர்களின் உதவி கிடைக்கும். மனதில் அமைதி ஏற்படும். தனித்தொழில் செய்பவர்களுக்கு தொழில் முன்னேற்றம் ஏற்படும். புதிய தொழில்கள் வந்து சேரும். இந்த ராசிக்காரர்களுக்கு உஷ்ண நோய்கள், கண் நோய்கள் வரலாம். இவர்கள் சூரிய பகவானை வழிபட்டால் நன்று.




# குரு பெயர்ச்சி ராசி பலன்

# 12 ராசிகளுக்கும் பலன் எப்படி?

## விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்**

குருபகவான் இவர்களின் ராசிக்கே வருகிறார். இது ஜென்ம வியாழன் எனக் கூறப்படும். இவர்களுக்கு நற்பலன்கள் குறைவாக இருக்கும். எடுத்த கருமங்கள் தடைப்படும். அல்லது தாமதம் அடையும். சிறை வாழ்க்கை இருக்கும். வெளியூர்ப் பயணங்கள் தடைப்படும். பெண்களுக்குத் திருமண விடயங்கள் தடைப்படும். மாணவர்களுக்கு உயர் கல்வி, வெளியூர்க் கல்வி என்பனவற்றில் தடை, தாமதம் ஏற்படலாம். காதலர்களுக்கு தற்காலிகப் பிரிவுகள் ஏற்படும். வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்ப்பது நன்று. தனித் தொழில் செய்பவர்களுக்குப் பொருளாதாரத் தடைகள் இருக்கும். இந்த ராசிக்குரியவர் செவ்வாய். எனவே, முருகனை வழிபடவும்.



## கன்னி

**உத்தரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்**

இவர்களுக்கு வியாழன் 3ஆம் இடத்துக்கு வருகிறார். இது சகோதரம் மற்றும் குடும்ப வாழ்க்கைக்கு உரிய இடமாகும். இந்த ராசிக்காரர்களுக்கு மத்திம பலனே நடைபெறும். இவர்களுக்கு உதவிகள் குறையும். எடுத்த விடயங்கள் தாமதம் அடையும். சகோதரர்கள், இவர்களின் பராமரிப்பில் இருக்கும் வயோதிபர்கள் ஆகியோருக்கு கஷ்ரங்கள், சுகயீனங்கள் என்பன ஏற்படும். தொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு கூடும். தனித்தொழில் செய்பவர்களுக்கு உதவிகள் சரியாக அமையமாட்டாது. பெண்களுக்குத் திருமண விடயத்தில் குழப்பங்கள் வர இடமுண்டு. மாணவர்களுக்கு மறதி, கவனயீனம் என்பன ஏற்படும். காதலர்களுக்கு எதிர்ப்புகள், நண்பர்கள் தொல்லைகள் என்பன வரலாம். பொதுவாக இந்த ராசிக்காரர்களுக்கு வியாழ சுகம் குறைவு. எனவே, தட்ஷணா மூர்த்தியை வழிபட்டால் நன்று.

## கும்பம்

**அவிட்டம் 3, 4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதத்தில் பிறந்தவர்கள்.**

இவர்களுக்கு வியாழன் பத்தாம் வீட்டுக்கு வருகிறார். இது குழந்தைகள், தொழில் என்பனவற்றுக்குரிய இடமாகும். எனவே, இவர்களுக்குக் குழந்தைகள், மற்றும் தொழில் விடயங்களில் முன்னேற்றம் ஏற்படும். உதவிகள் கிடைக்கும். எனினும், இடமாற்றங்கள், பிரயாணங்கள் என்பன அடிக்கடி வர இடமுண்டு. இவற்றால் செலவுகள், உடல் நலக் குறைவுகள் ஏற்பட இடமுண்டு. பெண்களுக்குத் தூர இடத் திருமணம் வந்து அமையும். மாணவர்களுக்கு வெளியூர்ப் படிப்புகள் அமையும். பரீட்சையில் திறமைச் சித்தி கிடைக்கும். காதலர்களுக்குத் தடைகள் யாவும் நீங்கி மனதில் அமைதி உண்டாகும். தனித்தொழில் செய்பவர்களுக்குப் புதிய முயற்சிகள் வெற்றி தரும். உதவிகளும் கிடைக்கும். இந்த ராசிக்குரியவர் சனி பகவான். எனவே. சிவபெருமானை வழிபடவும்.

## தனுசு

**மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதத்தில் பிறந்தவர்கள்**

இவர்களின் ஜென்ம ராசிக்குரியவர் குரு பகவான் ஆவார். இவர்களுக்கு 12ஆம்வீட்டுக்கு வருவதால் மத்திமமான பலனே நடைபெறும். பொருள் செலவுகள் கூடுதலாக இருக்கும். இட மாற்றம், பிரயாணங்கள் என்பன ஏற்படும். பொது விடயங்கள், யாத்திரைகள் என்பனவற்றில் பங்குபற்ற நேரும். இவர்களின் வீட்டில் வயோதிபர்கள் இருப்பின் சுகயீனங்கள், கஷ்ரங்கள் வர இடமுண்டு. வீடு இருப்பிட வசதிகள் அமையும். பெண்களுக்கு நன்மையான விடயங்கள் நடைபெறும். பிரிந்து வேறு வேறு இடங்களில் வாழ்பவர்கள் ஒன்று சேர்வார்கள். மாணவர்களுக்குக் கல்வி நன்கு தொடரும். கல்வியில் மாற்றம், வெளியூர்க் கல்வி என்பனவும் அமையும். காதலர்கள் ஒன்று சேர்வார்கள். இந்த ராசிக்குரியவர் வியாழன் பாதங்கள் தெட்ஷணா மூர்த்தியை வழிபடவும்.

## துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்**

இவர்களுக்கு வியாழன் இரண்டாம் வீட்டுக்கு வருகிறார். எனவே, கடந்த ஒரு வருட காலம் இவர்கள் பட்ட கஷ்ரங்கள் பூரணமாக நீங்கும். குடும்பத்தில் முன்னேற்றம் ஏற்படும். கணவன், மனைவி வாழ்க்கையில் மனச்சந்தோஷம், அமைதி என்பன ஏற்படும். நல்ல நண்பர்கள் அமைவார்கள். இவர்கள் எடுக்கும் முயற்சிகள், பேச்சுவார்த்தைகள் என்பன வெற்றியாக அமையும். பெண்களுக்குத் திருமணப் பேச்சு வார்த்தைகள் நல்ல முடிவுகளைத் தரும். மாணவர்களுக்குக் கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். பரீட்சைகளில் சித்தி உண்டாகும். சங்கீதம், நடனம் போன்ற கலைகளைப் படிப்பவர்களுக்கு விசேட சித்திகள் வரும். வியாபாரிகளுக்கும் நன்மையான காலம். இலாபம் கிடைப்பதுடன், வெளியூர்ப்பயணங்கள், நல்ல முதலீடுகள் என்பன கைகூடும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு உயர்ச்சி உண்டாகும். பொதுவாக நன்மையான பலனே நடைபெறும். இவர்களின் ராசிக்கு உரியவர் வெள்ளி. எனவே, அம்மனை வழிபட்டால் நன்று.

## மீனம்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்**

இவர்களுக்குக் குருபகவான் ஒன்பதாம் வீட்டுக்கு வருகிறார். எனவே, கடந்த ஒரு வருட காலம் நடைபெற்ற கஷ்ரமான பலன் யாவும் பூரணமாக நீங்கி, நற்பலன்கள் நடைபெறும். மேலும் இவர்களுக்கு தேக சுகம் ஏற்படும். வீடு இருப்பிட வசதிகள் அமையும். இவர்களுக்குப் பெற்றோர் இருப்பின், அவர்களுக்கு முன்னேற்றம், குடும்பத்தில் மன அமைதி என்பன ஏற்படும். வயோதிபர்கள் இருப்பின் அவர்களுக்கு அந்திமக் கடமைகளைச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். பெண்களுக்குத் திருமண விடயங்கள் நல்ல முறையில் வந்து கைகூடும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும், உயர்ச்சியும் உண்டாகும். காதலர்களுக்கு உதவிகள் கிடைப்பதுடன், தடைகள் யாவும் நீங்கி மன அமைதி ஏற்படும். தனித் தொழில் செய்பவர்களுக்குக் குறைந்த இலாபம் கிடைத்தாலும் சிக்கல்கள் நீங்கி மன அமைதி ஏற்படும். இவர்களின் ராசிக்கு உரியவர் குரு பகவான். எனவே, தெட்ஷணா மூர்த்தியை வழிபடவும்.

## மகரம்

**இவர்கள் உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2, 3ஆம் பாதங்கள் ஆகியவற்றில் பிறந்தவர்கள்**

இவர்களுக்குக் குருபகவான் 11ஆம் வீடாகிய இலாப ஸ்தானத்துக்கு வருகிறார். எனவே, நன்மை தற்சமயம் நடைபெற்றுக்கொண்டிருக்கும். ஏழரைச் சனியனின் பாதிப்புக் குறையும். குடும்பத்தில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். உதவிகள் கிடைக்கும். பூர்வீக சொத்துக்கள் வந்து சேரும். புதிய தொழில்கள் அமையும். மாணவர்களுக்குப் பரீட்சைகளில் சித்தி உண்டாகும். அரச உதவிகள், நண்பர்களின் உதவிகள் என்பன கிடைக்கும். பெண்களுக்குத் திருமண விடயங்கள் கைகூடும். முதலீட்டுத் தொழில் செய்பவர்கள் போதியளவு இலாபம் பெறுவர். எனினும், எதிர்ப்புகள், பகை என்பன வர இடமுண்டு. காதலர்களுக்குப் புதிய நன்மையான திருப்பங்கள் வர இடமுண்டு. இவர்களின் ராசி அதிபதி சனி பகவான். எனவே, சிவனை வழிபடவும்.

# வலைஞர் பதிகம்

அப்பா - ஏம்மா என்னை Daddy எண்டு கூப்பிடுறாய். அப்பா எண்டே கூப்பிடு..!!

மகள் - அப்பா எண்டு கூப்பிட்டா Lipstick அழிஞ்சு போகும்பா...Daddy எண்டு கூப்பிடுறதுதான் Make-Up க்கு Safe




பையன் கேட்டான் அப்பாவிடம்...

"அப்பா.., நீயும் அம்மாவும் ஹனிமூன் போனப்ப நான் உன்கூட வந்தேனா, அம்மாகூட வந்தேனா?"

சற்றும் யோசிக்காமல் அப்பா சொன்னார். "போகும்போது என் கூட வந்தாய், வரும்போது அம்மா கூட வந்தாய்."

Not everything you enjoy is good 😂



## எதார்த்தமான உண்மைகள்

- கல்லுக்கு உருவம் கொடுக்கும் வரை நான் சிற்பி, நீ கல்., உருவம் கொடுத்த பின்பு நீ கடவுள், நான் தீண்டத்தகாதவன்..! (நம்ம ஊரு டிசைன் அப்படி)
- கும்பிடும் வரை கடவுள். திருட்டுப் போனால் சிலை...! (ஒண்ணும் சொல்றதுக்கு இல்லை)
- தெருவில் குப்பை போடுகிறவனை மரியாதையாகவும் அதை பொறுக்கி சுத்தம் செய்பவனை கேவலமாக பார்க்கும் சமுதாயம் உள்ளவரை நாடு சுத்தம் ஆகாது...! (ஆகவே ஆகாது...)
- ஒரு மெழுகுவர்த்தியின் தியாகத்திற்கு சற்றும் குறைவில்லாதது ஒரு தீ குச்சியின் மரணம்..! (மரணம் ஒரு முடிவு அல்ல... !)
- வேலைக்குப்போகிறவர்களின் திங்கட்கிழமையை விட வேலை கிடைக்காதவர்களின் திங்கட் கிழமைகள் கொடூரமானவை...! (நிதர்சனமான உண்மை)
- அவசரத்துக்கு ஒரு கொத்தனாரைக் கூட தேடுனா ஊர்ல ஒரு பய இல்ல, தெருவுக்கு நாலு இஞ்சினியர் மட்டும் இருக்கானுங்க ..! ஏன் இந்த கொடுமை..! (ஊருக்கு ரெண்டு இன்ஜினீயரிங் காலேஜ் தான் காரணம்)
- இவன் என்ன நினைப்பான் அவன் என்ன நினைப்பான்னு நினைச்சே வாழ்றோம். ஆனா உண்மையில ஒருத்தனும் நம்மளைப் பத்தி நினைக்கிறதேயில்ல...! (எல்லாத்துக்கும்காரணம் இந்தஎண்ணங்கள் தான்)
- இந்த டாக்டர்கள் வசதி இல்லாதவன பாத்து அது சாப்புடு இது சாப்புடுனு சொல்லுவான். வசதி இருக்கவன பாத்து எதையும் சாப்புடகூடாதுனு சொல்லுவான்.! (எல்லாம் பீஸ் தான் காரணம்)
- இறுதிவரை வாழ்க்கை இப்படியே இருக்க வேண்டுமே என்ற கவலை சிலருக்கு, இப்படியே இருந்துவிடுமோ என்ற கவலை சிலருக்கு...! ( ஒரு முழம் கூடப்போறதும் இல்லை குறையப் போறதும் இல்லை)
- 250 ரூபாய்க்கு பளிச்சென்றும் 100 ரூபாய்க்கு சுமாராகவும் இலவச தரிசனத்திற்கு படுமங்கலாகவும் காட்சி தருகின்றார் கடவுள்...! (லஞ்சம் தான் காரணம்)
- தூக்கம் வராமல் முதலாளி... தூங்கி வழியும் வாட்ச்மேன். என்ன ஒரு முரண்பாடு..! (காசு பண்ற வேலை)













காவலர்: உன்னை நாளைக்கு காலைல 5 மணிக்கு தூக்குல போடப்போறோம்.

கைதி: ஹா ஹா ஹா

காவலர்: எதுக்கு சிரிக்கிற?

கைதி: நான் எழுந்துக்குறதே 9 மணிக்குத் தானே?




காதலன்: உனக்கு ஏதாவது பரிசு தரணும். என்ன வேணும்?

காதலி: ஒரு தங்க மோதிரம் வாங்கிக்கொடு.

காதலன்: வேற எதாவது பெரிசாச் சொல்லு.

காதலி: ஒரு MRF டயர் வாங்கிக்கொடு.



first national REAL ESTATE | Hall & Partners

## *Interested in knowing what your property is worth?*



**Property value and house prices change with the market. Call me direct to get a view of your current property value.**

**I will happily appraise your property, giving you you an up to date market analysis free of charge with no obligation to sell.**

# SP Shagi - 0413 076 585

## OUR SALES TEAM WITH THE MOST LOCAL EXPERIENCE

*"Let our experience work for you"*



**Michael Hall**
Managing Director



**Adrian Hall**
Director



**Leigh Hall**
Director



**Tim Retallack**
Licensed Estate Agent



**Walter Kubiak**
Licensed Estate Agent



**Chen Liu**
Licensed Estate Agent



**Irene Athanasiadis**
Property Consultant



**Yasantha De Silva**
Licensed Estate Agent



**Jane Li**
Property Consultant



**Omid Mahramzadeh**
Property Consultant



**Michael Cervenjak**
Licensed Estate Agent



**Gavin Andrews**
Licensed Estate Agent



**Nuwan Ranasingha**
Property Consultant



**Violet Ross**
Property Consultant




| MONTH | FINAL CUT-OFF DATE | EST ARRIVAL IN SL |
|---|---|---|
| September | 2018-09-01 | 2018-10-08 |
| September | 2018-09-08 | 2018-10-17* |
| September | 2018-09-15 | 2018-10-22 |
| September | 2018-09-22 | 2018-10-31* |
| September | 2018-09-29 | 2018-11-05* |
| October | 2018-10-06 | 2018-11-14 |
| October | 2018-10-13 | 2018-11-19* |
| October | 2018-10-20 | 2018-11-28 |
| October | 2018-10-27 | 2018-12-03* |
| November | 2018-11-10 | 2018-12-17* |
| November | 2018-11-17 | 2018-12-26 |
| November | 2018-11-24 | 2018-12-31* |
| December | 2018-12-01 | 2019-01-07 |
| December | 2018-12-08 | 2019-01-14* |
| December | 2018-12-15 | 2019-01-21 |
| January | 2019-01-12 | 2019-02-18 |
| January | 2019-01-19 | 2019-02-25* |
| January | 2019-01-26 | 2019-03-04 |